# தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2018–2019

### மானியக் கோரிக்கை எண். 32


**டாக்டர் நிலோபர் கபில்**
தொழிலாளர் நலத்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2018

# அட்டவணை


| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| | **1. தொழிலாளர் துறை** | |
| 1.1. | செயல்பாடுகள் | 3 |
| 1.2. | தொழில் துவங்குவதில் எளிய நடைமுறை | 3 |
| 1.3. | நிர்வாக அமைப்பு | 5 |
| 1.4. | தொழில் உறவுகள் | 5 |
| 1.5. | தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழிற் தீர்ப்பாயங்கள் | 6 |
| 1.6. | தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946 | 7 |
| 1.7. | தொழிற்சங்கங்கள் சட்டம், 1926 | 8 |
| 1.8. | ஒழுங்குமுறை சட்டங்களின் அமலாக்கம் | 9 |
| 1.9. | சமூக பாதுகாப்பு சட்டங்கள் | 15 |
| 1.10. | குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுதல் | 20 |
| 1.11. | நுகர்வோர் பாதுகாப்பு | 28 |
| 1.12. | நல வாரியங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்கள் | 29 |
| 1.13. | தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் | 40 |
| 1.14. | தமிழ்நாடு கட்டுமானக் கழகம் | 42 |
| 1.15. | சிறப்பு முயற்சிகள் | 43 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| **2.** | **தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்** | |
| 2.1. | நிர்வாக அமைப்பு | 51 |
| 2.2. | தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களை தொழிற்சாலைகளில் அமலாக்கம் செய்தல் | 52 |
| 2.3. | தொழிற்சாலைகளில் எளிமைப்படுத்தப்பட்ட தொழில் தொடங்கும் நடைமுறைகளை ஊக்குவித்தல் | 53 |
| 2.4. | பட்டாசு தொழிற்சாலை ஆய்வுகள் | 59 |
| 2.5. | பட்டாசு தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம் | 62 |
| 2.6. | தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர் முறை அகற்றுதல் | 63 |
| 2.7. | இடர்தரும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகள் | 64 |
| 2.8. | மனை மதிப்பீட்டுக் குழு | 66 |
| 2.9. | கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம், **1996** மற்றும் தமிழ்நாடு விதிகள், **2006** மற்றும் அதனைச் சார்ந்த தொழிலாளர் நல சட்டங்களை கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் அமலாக்கம் செய்தல் | 74 |
| 2.10. | சிறப்பு முயற்சிகள் | 81 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| **3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை** | | |
| **வேலைவாய்ப்பு பிரிவு** | | |
| 3.1. | நிர்வாக அமைப்பு | 85 |
| 3.2. | மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகள் | 87 |
| 3.3. | வலைதளம் வழியாக பதிவு செய்தல் | 89 |
| 3.4. | பணி அமர்த்தல் | 90 |
| 3.5. | தொழில்நெறி வழிகாட்டல் | 90 |
| 3.6. | தன்னார்வ பயிலும் வட்டங்கள் | 93 |
| 3.7. | மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவு | 97 |
| 3.8. | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் | 97 |
| 3.9. | பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் | 98 |
| 3.10. | வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை | 99 |
| 3.11. | மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் | 100 |
| 3.12. | மிஷன் மோட் திட்டம் | 101 |
| 3.13. | தேசிய தொழில்நெறி பணி வலைதளம் | 102 |
| 3.14. | தனியார் துறை பணியமர்த்தல் | 102 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 3.15. | சிறப்பு செயல்பாடுகள் | 104 |
| 3.16. | துறையின் புதிய முயற்சி | 105 |
| | **பயிற்சி பிரிவு** | |
| 3.17. | நிர்வாக அமைப்பு | 107 |
| 3.18. | அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் | 108 |
| 3.19. | சிறப்பு தொழிற்பயிற்சி நிலையங்கள் | 109 |
| 3.20. | இணையதளம் வாயிலாக மாவட்ட அளவிலான கலந்தாய்வு சேர்க்கை | 111 |
| 3.21. | தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் | 111 |
| 3.22. | தொழிற்பள்ளிகள் | 113 |
| 3.23. | அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தரம் உயர்த்துதல் | 115 |
| 3.24. | தொழில்துறை மதிப்பு விரிவாக்கத்திற்காக திறன் பலப்படுத்துதல் (STRIVE) | 116 |
| 3.25. | குறுகிய கால பயிற்சிகள் | 118 |
| 3.26. | அம்மா இருசக்கர வாகன பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பயிற்சி மையம் | 118 |
| 3.27. | தொழிற்பழகுநர் பயிற்சி திட்டம் | 120 |
| 3.28. | தரம் உறுதிப்படுத்துதல் | 124 |
| 3.29. | பயிற்றுநர் பயிற்சி | 126 |
| 3.30. | வளர்ச்சிக்கான புதிய முயற்சிகள் | 128 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| **4. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்** | | |
| 4.1. | பயிற்சி பாடத்திட்டங்கள் மற்றும் கட்டணத்தில் நிலையான நெறிமுறைகளை கடைபிடித்தல் | 137 |
| 4.2. | வேலைவாய்ப்பு அதிகமுள்ள துறைகளில் மாவட்ட வாரியாக பயிற்சியளித்தல் | 139 |
| 4.3. | மாநிலம் முழுவதும் திறன் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் | 143 |
| 4.4. | திறன் பயிற்சிக்காக இணையம் வழி பதிவு செய்தல் | 144 |
| 4.5. | பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளில் உயர்தொழில்நுட்ப பயிற்சி | 145 |
| 4.6. | சிறப்பு திறன் பயிற்சி திட்டங்கள் | 147 |
| 4.7. | அனுபவத்தின் மூலம் பெற்ற திறமையை அங்கீகரித்து சான்றிதழ் வழங்குதல் (Recognition of Prior Learning - RPL) | 147 |
| 4.8. | PMKVY 2.0 கீழ் மாநில அரசால் செயல்படுத்தப்படும் திறன் பயிற்சித் திட்டம் | 148 |
| 4.9. | சங்கல்ப் திட்டம் (SANKALP) | 152 |
| 4.10. | மாநில அளவில் திறன் இடைவெளி குறித்த ஆய்வு | 153 |
| 4.11. | ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் – உயர் திறன் பயிற்சி மையங்கள் – தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டுத் திட்டம் பகுதி–2 | 155 |

| எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| | **5. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்** | |
| 5.1. | பதிவு | 158 |
| 5.2. | பணியமர்த்தல் | 159 |
| 5.3. | அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் செயல்பாடுகள் | 160 |
| 5.4. | புதிய முயற்சிகள் | 161 |
| | **6. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம் (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம்)** | |
| 6.1. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தில் சேர்வதற்கான தகுதிகள் | 163 |
| 6.2. | திட்டத்தின் நிதி ஆதாரம் | 163 |
| 6.3. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் | 164 |
| 6.4. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் இயங்கும் ஆயுஷ் (AYUSH) பிரிவுகள் | 165 |
| 6.5. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் பயன்கள் | 167 |
| 6.6. | தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் இதர உதவிகள் | 172 |
| 6.7. | மருத்துவமனை மேம்பாட்டுக் குழு | 173 |
| 6.8. | காப்பீட்டு பயனாளிகள் தனியார் மருத்துவமனைகளில் செய்துகொண்ட மருத்துவ செலவினை திரும்ப வழங்கல் | 173 |
| 6.9. | புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் துவக்குதல் | 175 |

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### 1. தொழிலாளர் துறை

தொழிலாளர் நலனும், பொருளாதார வளர்ச்சியும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளன. மாநிலத்தின் துரிதமான தொழில் வளர்ச்சியில் பங்கு வகிக்கும் தொழிலாளர்களின் நலனை உள்ளடக்கிய தொழில் வளர்ச்சி மற்றும் முன்னேற்றமே தமிழக அரசின் கொள்கை ஆகும்.

மாநிலத்தின் துரிதமான தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியினை நிலைநிறுத்துவதில் தொழிலாளர் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. தொழிலாளர்களின் பணி பாதுகாப்பு, ஊதிய பாதுகாப்பு, சமூக பாதுகாப்பு ஆகியவற்றை உறுதி செய்யவும், பேச்சுவார்த்தைகள், கலந்தாலோசனைகள் மற்றும் முடிவெடுத்தல் மூலம் விரிவான ஒருங்கிணைந்த திட்டங்களை செயல்படுத்தவும் இத்துறை தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.

தொழிலாளர் நலன் சார்ந்த கருத்துக்களை உரிய தருணத்திலும் சீரிய முறையிலும் பரிமாறிக் கொள்ள மாநிலத்தில் செயல்பட்டு வரும் முத்தரப்பு ஆலோசனை அமைப்புகள் வழிவகை செய்கின்றன. தமிழகத்தின் தொழில்

உறவானது, முரண்பாடுகள் அற்ற கருத்து ஒற்றுமை, கூட்டுறவு, கலந்து ஆலோசித்தல், ஆகியவற்றை அடிப்படையாக கொண்டது.

தொழில்நுட்ப உதவியுடன் புதிய மாற்றங்களோடு பல்வேறு தொழிலாளர் நல சட்டங்கள் அமல்படுத்தப்பட்டு வருகிறது. தொழில்நுட்பங்களின் பயன்பாடு, தொழிலாளர் நலச்சட்டங்களின் சீரிய அமலாக்கத்திற்கு உதவி புரிவதுடன், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்பு தன்மையையும் கொண்டு வருகிறது.

அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியம் மூலமாக அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு அளிக்க அரசு உறுதிபூண்டுள்ளது.

குழந்தைத் தொழிலாளர் முறை மற்றும் கொத்தடிமை தொழிலாளர் முறை ஆகிய சமூக அவலங்களை அகற்றுவதற்கு தமிழக அரசு முக்கியத்துவம் அளித்து, இதற்கான பல முனைப்பான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

## 1.1. செயல்பாடுகள்

மத்திய, மாநில அரசுகளால் இயற்றப்பட்ட பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களை அமல்படுத்துவது தொழிலாளர் துறையின் முதன்மையான கடமையாகும். தொழிற் தகராறுகளை தீர்த்துவைத்தல், நீதி சார்புடைய பணிகளை மேற்கொள்ளுதல், சட்டமுறை எடையளவு சட்டத்தினை அமல் படுத்துதல், குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுதல், கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு அளித்தல் மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு அளித்தல் போன்றவை தொழிலாளர் துறையின் முக்கியமான செயல்பாடுகள் ஆகும்.

## 1.2. தொழில் துவங்குவதில் எளிய நடைமுறை

தொழிலாளர் துறை, சட்டப்படியாக பின்பற்ற வேண்டிய நடைமுறைகளை மறுசீரமைப்பு செய்வதற்கும், பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் வழங்கப்பட வேண்டிய நடைமுறைகளை எளிமைப்படுத்தவும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

தொழில் துவங்குவதில் எளிய நடைமுறைக்கு ஏதுவாக பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்களின் கீழ் மின்னணு

கட்டணம் செலுத்தும் வசதியுடன் கூடிய பதிவு / உரிமம் / புதுப்பித்தல் / ஆய்வு திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய இணைய வழியினை உருவாக்கி வருகிறது.

பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் பதிவு செய்தல் / உரிமம் வழங்குதல் / புதுப்பித்தல் ஆகியவை இணைய வழி மூலமாகவே மேற்கொள்ளப்பட உள்ளது. விண்ணப்பங்கள் முறையாக தாக்கல் செய்யப்பட்ட பின், அவை இணைய வழியாகவே உரிய அலுவலரால் சரிபார்க்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்படும். மேலும், மின்னணு கையொப்பத்துடன் ஒப்புதல் அளிக்கப்பட்ட சான்றினை இணைய வழி மூலம் பயனாளி பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

எளிய நடைமுறைகளை பின்பற்றி தொழில் துவங்குவதற்கு ஏதுவாக, கணினிமயமாக்கப்பட்ட ஆய்வு குறிப்பற்ற முறையில் அலுவலர்களை ஒதுக்கீடு செய்யும் முறை, அரசாணை (நிலை) எண்.151, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (எச்2)த் துறை, நாள் 31.08.2017–ன் மூலம் இணைய வழி ஆய்வு திட்டம் அறிமுகப்படுத்தபட்டுள்ளது.

## 1.3. நிர்வாக அமைப்பு

தொழிலாளர்களின் தேவைகளை நிறைவேற்றும் பொருட்டு, தொழிலாளர் துறை மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது. தொழிலாளர் ஆணையரின் தலைமையில், 12 கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள், 16 தொழிலாளர் இணை ஆணையர்கள், 24 தொழிலாளர் துணை ஆணையர்கள், 103 தொழிலாளர் உதவி ஆணையர்கள், 70 தொழிலாளர் துணை ஆய்வர்கள், 220 தொழிலாளர் உதவி ஆய்வர்கள், 101 முத்திரை ஆய்வர்கள், 2 உதவி மருத்துவர் (தோட்டங்கள்), 1 கணக்கு அலுவலர், 1 மக்கள் தொடர்பு அலுவலர் மற்றும் 1,361 பணியாளர்களுடன் இத்துறையின் நிர்வாக அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

## 1.4. தொழில் உறவுகள்

பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தினை அடைவதற்கான உகந்த சூழ்நிலையை உருவாக்கிட, தொழிற்தாவாக்களை தீர்த்து வைத்தல், வேலையளிப்போர் மற்றும் தொழிலாளர்களுக்கிடையே நல்லுறவினை ஏற்படுத்துதல் ஆகியவற்றை தொழிலாளர் துறை எளிதாக்குகிறது. சமரச அலுவலர்கள் உரிய நேரத்தில்

தலையிட்டு தொழிற்தாவாக்களை சுமூகமாக முடித்து வைப்பதன் மூலம் இந்த இலக்கை அடைய முடிகிறது.

**சுமூகமாக தீர்த்து வைக்கப்பட்ட சில முக்கியமான தொழிற்தாவாக்கள்**

- தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கான ஊதிய மாற்ற ஒப்பந்தம்
- 108 ஆம்புலன்ஸ், ஜி.வி.கே – எமர்ஜென்சி மேனேஜ்மென்ட் அண்ட் ரிசர்ச் இன்ஸ்ட்டியூட் நிறுவன போனஸ் ஒப்பந்தம்
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தொழிலாளர்களுக்கான ஊதிய மாற்ற ஒப்பந்தம்
- தருமபுரி மாவட்டம், வரலெட்சுமி ஸ்டார்ச் இன்டஸ்ட்ரீஸ் நிறுவன தொழிலாளர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தம்
- இத்துறை சமசர அலுவலர்களின் தலையீட்டினால் சுமூகமாக தீர்த்து வைக்கப்பட்ட முக்கியமான 17 வேலை நிறுத்தங்கள்

## 1.5. தொழிலாளர் நீதிமன்றங்கள் மற்றும் தொழிற் தீர்ப்பாயங்கள்

சமரச நடவடிக்கைகளின் மூலம் சுமூக தீர்வு ஏற்படாத தொழிற்தாவாக்களின் மீது நீதிமுறை தீர்வளிக்க தமிழ்நாட்டில் 16 தொழிலாளர் நீதிமன்றங்களும் ஒரு தொழிற் தீர்ப்பாயமும் செயல்பட்டு வருகின்றன.

சென்னையில் 4 தொழிலாளர் நீதிமன்றங்களும், வேலூர், கோயமுத்தூர் மற்றும் மதுரையில் தலா 2 தொழிலாளர் நீதிமன்றங்களும், சேலம், கடலூர், திருச்சிராப்பள்ளி, காஞ்சிபுரம், கும்பகோணம், திருநெல்வேலி ஆகிய இடங்களில் தலா ஒரு தொழிலாளர் நீதிமன்றமும் செயல்பட்டு வருகின்றன. 1947–ஆம் வருடத்திய தொழிற்தகராறுகள் சட்டத்தின் மூன்றாவது அட்டவணையில் குறிப்பிட்டுள்ள இனங்களை விசாரித்து தீர்வம் வழங்க சென்னையில் ஒரு தொழிற் தீர்ப்பாயம் இயங்கி வருகிறது.

2017–ஆம் ஆண்டில், 1,609 வழக்குகள் தொழிலாளர் நீதிமன்றங்களாலும், 35 வழக்குகள் தொழில் தீர்ப்பாயத்தாலும் முடித்து வைக்கப்பட்டுள்ளன.

### 1.6. தொழிலக வேலைவாய்ப்பு (நிலையாணைகள்) சட்டம், 1946

தொழில் நிறுவனங்களில் வேலை அளிப்பவர்கள் சான்றளிக்கப்பட்ட நிலையாணைகள் மூலமாக தொழிலாளர்களின் பணி நிலைமையை வரையறுத்து அவற்றை தொழிலாளர்களுக்கு தெரிவிக்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. இச்சட்டத்தின் கீழ் மண்டல கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள் சான்றளிக்கும் அலுவலர்களாக

நியமிக்கப்பட்டுள்ளனர். 2017–18–ஆம் ஆண்டில், 442 தொழில் நிறுவனங்களுக்கு நிலையாணைகள் சான்றளிக்கப்பட்டுள்ளன.

## 1.7. தொழிற்சங்கங்கள் சட்டம், 1926

தொழிற்சங்கங்களை பதிவு செய்திடவும், பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கங்களுக்குரிய சட்டங்களை வரையறுக்கவும் இச்சட்டம் வழி செய்கிறது. தொழிற்சங்கங்களை பதிவு செய்திட, தொழிற்சங்கங்களின் கூடுதல் பதிவாளர்களாக, வட்டார தொழிலாளர் இணை ஆணையர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 31.03.2018 வரையில் தொழிற்சங்கங்களின் கூடுதல் பதிவாளர்கள், 12,018 தொழிற்சங்கங்களை பதிவு செய்துள்ளனர். 2017–18–ஆம் ஆண்டில், 153 தொழிற்சங்கங்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

## தொழிலாளர் நலச்சட்டங்களின் அமலாக்கம்

பல்வேறு சட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகள் நிறுவனங்களால் கடைபிடிக்கப்படுவதை உறுதி செய்திடவும், தொழிலாளர்களின் உரிமைகள் மற்றும் நலன்களை பாதுகாத்திடவும், இத்துறையின் அமலாக்க

அலுவலர்களால் சிறப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**1.8. ஒழுங்குமுறை சட்டங்களின் அமலாக்கம்**

**தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1947**

இச்சட்டம் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் பணியினை முறைப்படுத்திட வழிவகை செய்கிறது. இச்சட்டம் கடைகள் மற்றும் வணிக நிறுவனங்களில் பணி துவங்கும் மற்றும் முடியும் நேரங்களை கண்காணிப்பதுடன், ஊதியத்துடன் கூடிய வாராந்திர விடுமுறையினை வழங்கிட வழிவகை செய்கிறது.

2017–18–ஆம் ஆண்டில், 2,85,113 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 21,728 நிறுவனங்களில் முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, ரூ.28.96 லட்சம் இணக்கத்தீர்வு கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு உணவு நிறுவனங்கள் சட்டம், 1958**

உணவு நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்திடவும், அவர்களுக்கு வாராந்திர விடுமுறை, பணிநேரம்,

சம்பளத்துடன் கூடிய விடுப்பு மிகை நேர ஊதியம் ஆகியவற்றை வழங்கிடவும் இச்சட்டம் வழிவகை செய்கிறது.

2017–18–ஆம் ஆண்டில், மாநிலம் முழுவதும் உள்ள தொழிலாளர்களின் உரிமைகளை பாதுகாத்திட இச்சட்டத்தினை மாநிலம் முழுமைக்கும் விரிவுபடுத்தியும், வேலையளிப்போர் சட்ட விதிகளை கடைப்பிடித்தாக வேண்டிய நேர்மறை தாக்கத்தை ஏற்படுத்திட அபராதத் தொகையினை உயர்த்தியும் இச்சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2017–18–ஆம் ஆண்டில், 36,559 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றில் 7,660 முரண்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளன. ரூ.6.99 இலட்சம் இசைவுத் தீர்வு கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. பதிவு, புதுப்பித்தல் மற்றும் திருத்தக் கட்டணமாக ரூ.1.06 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறைகள்) சட்டம் 1958**

நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு தேசிய, பண்டிகை மற்றும் சிறப்பு விடுமுறைகளை அளித்திட இச்சட்டம் வழிவகை செய்கிறது. ஒவ்வொரு வருடமும், இதர

ஐந்து பண்டிகை விடுமுறை நாட்களோடு, தேசிய பண்டிகை விடுமுறை தினங்களான குடியரசு தினம், மே தினம், சுதந்திர தினம், மகாத்மா காந்தி பிறந்தநாள் ஆகிய நாட்களுக்கு தொழில் நிறுவனங்கள் சம்பளத்துடன் கூடிய விடுமுறையினை தொழிலாளர்களுக்கு அளித்திட வேண்டும்.

2017–18–ஆம் ஆண்டில், அவசர நிலை மற்றும் சிறப்பு நேர்வுகளில் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பு வழங்கிட அரசுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2017–18–ஆம் ஆண்டில், இச்சட்டத்தின் கீழ் 94,752 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 11,444 முரண்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டு ரூ.25.48 லட்சம் இசைவுத் தீர்வுக் கட்டணமாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

**மோட்டார் போக்குவரத்து தொழிலாளர்கள் சட்டம், 1961**

இச்சட்டம் மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன்களைக் காக்கவும் அவர்களது பணிநிலைமைகளை முறைப்படுத்தவும் வழிவகை

செய்கிறது. 3,275 பதிவு பெற்ற மோட்டார் போக்குவரத்து நிறுவனங்களில் 1,45,280 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

2017–18–ஆம் ஆண்டில், ரூ.73.26 லட்சம் பதிவு, புதுப்பித்தல் மற்றும் திருத்தக் கட்டணமாக வசூல் செய்யப்பட்டுள்ளது 6,594 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1,985 முரண்பாடுகள் கண்டறியப்பட்டுள்ளன மற்றும் ரூ.5.34 லட்சம் இசைவுத் தீர்வுக் கட்டணமாக வசூல் செய்யப்பட்டுள்ளது.

## தோட்டத் தொழிலாளர் சட்டம், 1951

தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன் காத்திடவும் அவர்களது பணி நிலைமைகளை முறைப்படுத்திடவும், தோட்ட நிறுவன தொழிலாளர்கள் சட்டம், 1951 மற்றும் அதன் விதிகள் வழிவகை செய்கின்றன. 5 ஹெக்டேர் மற்றும் அதற்கு மேற்பட்ட பரப்பளவு உள்ள, 15 அல்லது அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியமர்த்தப்பட்டுள்ள, தேயிலை, காப்பி, ரப்பர், சின்கோனா மற்றும் ஏலக்காய் பயிரிடும் தோட்டங்களுக்கு இச்சட்டம் பொருந்தும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி, மருத்துவ வசதி, குழந்தைகள் காப்பகம், கல்வி வசதி, பாதுகாப்பு

உடைகள், குடிநீர் மற்றும் இதர வசதிகளை செய்து தரவேண்டியது வேலையளிப்போர் / தோட்ட நிறுவன உரிமையாளர்களது கடமையாகும்.

தோட்ட நிறுவனங்களின் தலைமை ஆய்வாளர், 10 தொழிலாளர் உதவி ஆணையர்கள் (தோட்டங்கள்), 2 உதவி மருத்துவர்கள் (தோட்டங்கள்) ஆகியோர் இச்சட்டத்தினையும் இச்சட்டம் தொடர்புடைய இதர சட்டங்களையும், சட்ட விதிகளையும் அமல்படுத்தி வருகின்றனர்.

தோட்ட நிறுவனங்களின் தலைமை ஆய்வாளரது அலுவலகம் சென்னையில் அமைந்துள்ளது. 10 தொழிலாளர் உதவி ஆணையர்களது (தோட்டங்கள்) அலுவலகங்கள் உதகை, குன்னூர், கோத்தகிரி, கூடலூர், பந்தலூர், வால்பாறை, ஏற்காடு, வத்தலகுண்டு, தேனி, நாகர்கோயில் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன. 2 உதவி மருத்துவர்களது (தோட்டங்கள்) அலுவலகங்கள் உதகை, நாகர்கோவில் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

தமிழ்நாட்டில், 62,120 ஹெக்டேர் பரப்பளவில் 2,227 தோட்ட நிறுவனங்கள் அமைந்துள்ளன. இவற்றில் 54,469 ஹெக்டேர் பரப்பளவில் 685 பதிவு பெற்ற தோட்ட

நிறுவனங்களும் மற்றும் 7,651 ஹெக்டேர் பரப்பளவில் 1,542 பதிவு பெறாத தோட்ட நிறுவனங்களும் அமைந்துள்ளன. இத்தோட்ட நிறுவனங்களில் பணி புரியும் மொத்தம் 56,983 தொழிலாளிகளில், 22,460 ஆண் தொழிலாளர்களும், 34,523 பெண் தொழிலாளர்களும் உள்ளனர்.

2017–18–ஆம் ஆண்டில், அமலாக்க அலுவலர்களால் மொத்தம் 31,775 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அதில் தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், 1951–ன் கீழ் 2,609 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தோட்ட நிறுவன வேலையளிப்போர் மீது தோட்டத் தொழிலாளர்கள் சட்டம், 1951, தொடர்புடைய இதர சட்டங்கள் மற்றும் விதிகளின் கீழ் 98 வழக்குகள் முடிக்கப்பட்டு ரூ.2,12,000/– அபராதமாக வசூலிக்கப்பட்டது.

**தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிரந்தர தகுதி வழங்கல்) சட்டம், 1981**

இச்சட்டம், 24 மாத காலத்தில் 480 நாட்கள் தொடர்ந்து ஒரு தொழில் நிறுவனத்தில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு நிரந்தரத் தகுதி வழங்கப்படுவதை கண்காணிக்கிறது.

2017–18–ஆம் ஆண்டில், 1,490 ஆய்வுகள் தொழிலாளர் உதவி ஆணையர்களால் (அமலாக்கம்) மேற்கொள்ளப்பட்டு, 474 வழக்குகளின் மீது ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

## இதர ஒழுங்குமுறை சட்டங்கள்

இத்துறையினால் நடைமுறைப்படுத்தப்படும் இதர ஒழுங்குமுறை சட்டங்கள் பின்வருமாறு :–

1. ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970
2. மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயர்ந்த தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1979
3. பீடி மற்றும் சுருட்டு தொழிலாளர்கள் (பணி நிலைமைகள்) சட்டம், 1966
4. உழைக்கும் பத்திரிக்கையாளர்கள் மற்றும் இதர பத்திரிக்கை பணியாளர்கள் (பணி நிபந்தனைகள் மற்றும் இதர பிரிவுகள்) சட்டம், 1955
5. விற்பனை அபிவிருத்தி பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 1976

## 1.9. சமூக பாதுகாப்புச் சட்டங்கள்

### பணியாளர்கள் இழப்பீட்டுச் சட்டம், 1923

பணியில் இருக்கும் போது விபத்தின் காரணமாக ஏற்படும் மரணம் மற்றும் ஈட்டும் திறன் இழப்புக்கு ஏற்ப இழப்பீடு வழங்க இச்சட்டம் வழிவகை செய்கிறது. வட்டாரத் தொழிலாளர் இணை ஆணையர்கள் இச்சட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்களை விசாரித்து முடிவெடுக்க ஆணையர்களாக அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

வேலையளிப்பவர் / காப்பீட்டு நிறுவனத்தால் வைப்பீடு செய்யப்பட்ட இழப்பீட்டுத் தொகையினை மின்னணு பரிமாற்றத்தின் மூலம் பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது.

இழப்பீட்டுத் தொகை வைப்பீடு செய்யாத நேர்வுகளில், வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் இழப்பீட்டுத் தொகையினை வசூலிக்க தொழிலாளர் இணை ஆணையர்கள் நடவடிக்கை மேற்கொள்கின்றனர்.

2017–18–ஆம் ஆண்டில், 2,034 வழக்குகள் முடிக்கப்பட்டு ரூ.99.07 கோடி இழப்பீடு தொகைக்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது.

**பணிக்கொடை வழங்கல் சட்டம், 1972**

இச்சட்டம் பணியாளர்களுக்கு பணிக்கொடை வழங்கிட வழிவகை செய்கிறது. 5 வருடம் பணி முடித்த தொழிலாளி வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெறும் போதோ அல்லது பணியிலிருந்து விலகினாலோ பணிக்கொடை வழங்கப்படுகிறது. மேலும், விபத்து மற்றும் நோயின் காரணமாக இறப்போ அல்லது உறுப்பு செயலிழந்தாலோ பணிக்கொடை வழங்கப்படுகிறது.

வட்டார தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகங்களில் பணியாற்றும் தொழிலாளர் துணை ஆணையர்கள் இச்சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும், மண்டல கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள், மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**2017–18**–ஆம் ஆண்டில், **3,462** கேட்பு மனுக்கள் முடிக்கப்பட்டு மனுதாரர்களுக்கு ரூ.**21.19** கோடி பணிக்கொடை வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு பிழைப்பூதியம் வழங்கல் சட்டம், 1981

இச்சட்டம், தொழிலாளர்கள் பணியிலிருந்து தற்காலிக பணிநீக்கம் செய்யப்படும்போது வழங்கப்பட வேண்டிய பிழைப்பூதியம் குறித்ததாகும். வட்டார தொழிலாளர் இணை ஆணையர் அலுவலகங்களில் பணியாற்றும் தொழிலாளர் துணை ஆணையர்கள் இச்சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டு அதிகாரிகளாகவும், மண்டல கூடுதல் தொழிலாளர் ஆணையர்கள் மேல்முறையீட்டு அலுவலர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

2017–18–ஆம் ஆண்டில், 112 மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு மனுதாரர்களுக்கு ரூ.1.49 கோடி பிழைப்பூதியமாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

**ஊதியம் தொடர்புடைய சட்டங்கள்**

**குறைந்தபட்ச ஊதியச் சட்டம், 1948**

1948–ஆம் வருட குறைந்தபட்ச ஊதியச் சட்டமானது தொழிலாளர்களின் நலனை பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல் இச்சட்டத்தின் அட்டவணையில் உள்ள தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் மற்றும் மறுநிர்ணயம் செய்ய வழிவகை செய்கிறது. தமிழ்நாட்டில், கடைகள் மற்றும் நிறுவனங்கள், பொதுப்பொறியியல், கட்டுமானம், உணவு நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள், தோல் பதனிடுதல் மற்றும் தோல் தயாரிப்பு, பொது மோட்டார் போக்குவரத்து, மருந்து தயாரிக்கும் தொழில், போன்ற 76 தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் குறைந்தபட்ச ஊதியம் பொதுவாக 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை மறுநிர்ணயம் செய்யப்படுகிறது. விலைவாசி உயர்வினை ஈடுகட்டும் வகையில் மாறுபடும் அகவிலைப்படியையும் சேர்த்து குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகிறது.

**2017–18–**ஆம் ஆண்டில், உள்ளாட்சி நிறுவனங்கள், தோட்ட நிறுவனங்கள், பீடி சுற்றுதல், செங்கல் மற்றும் ஓடு தயாரித்தல், பொதுப்பொறியியல் போன்ற 14 தொழில்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் கேட்பு மனுக்களை விசாரணை செய்து முடிவு செய்யும் அலுவலர்களாக வட்டாரத் தொழிலாளர் இணை ஆணையர்கள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளனர். **2017–18–**ஆம் ஆண்டில், 1,21,620 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, **5** வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, ரூ.13,000/- அபராதத் தொகையாக வசூலிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்ச ஊதிய அலுவலர்களால் 679 கேட்பு மனுக்கள் தீர்வு செய்யப்பட்டு, ரூ.17.75 கோடி வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது.

தொழிலாளிகளுக்கு உரிய நேரத்தில் ஊதியத்தினை வழங்கிடவும் அவர்கள் ஊதியத்திலிருந்து அனுமதிக்கப்படாத பிடித்தங்கள் மேற்கொள்ளப்படுவதை தடுக்கவும், போனஸ் வழங்க வழிவகை செய்யவும், ஆண் மற்றும் பெண்

தொழிலாளர்களுக்கு சம ஊதியம் வழங்கப்படுவதை உறுதி செய்திட பின்வரும் சட்டங்கள் அமல்டுத்தப்படுகின்றன.

1. சம்பள பட்டுவாடா சட்டம், 1936
2. போனஸ் வழங்கல் சட்டம், 1965
3. சம ஊதியச் சட்டம், 1976

## 1.10. குழந்தைத் தொழிலாளர் முறையினை அகற்றுதல்

குழந்தைகள் நாட்டின் மிகவும் மதிப்பு மிக்க செல்வங்கள் என்பதால் அவர்களின் கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் ஒட்டுமொத்த வளர்ச்சியை உறுதி செய்வதில் தமிழக அரசு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. தமிழக அரசு சீரிய சட்டங்கள் மற்றும் திட்டங்கள் சார்ந்த அணுகுமுறைகளை உள்ளடக்கிய பன்முக தன்மை கொண்ட வழிமுறைகளை பின்பற்றி வருகிறது. குழந்தை தொழிலாளர்கள் அற்ற சமுதாயத்தை உருவாக்கிட சீரிய அமலாக்கம் மற்றும் பல்வேறு சட்டங்களின் செயலாக்கம் அரசின் பல்வேறு நிதி ஆதாரங்களை அனைத்து வகைகளிலும் (Horizontally and Vertically) ஒருமுகப்படுத்துதல், பல்வேறு பங்கேற்பாளர்களின் பணிகளை ஒருங்கிணைத்தல், சமூகத்தினையும் இத்தகைய பணிகளில் முனைப்புடன் ஈடுபடுத்துதல், ஆகியவை குழந்தைத் தொழிலாளர் முறை

அற்ற சமுதாயத்தை உருவாக்குதல் என்ற சவாலான இலக்கினை அடைவதற்கான வழிவகைகளாகும். மாநில அரசு மேற்கொண்ட இத்தகைய கூட்டு முயற்சிகளால் குழந்தை தொழிலாளர்களின் எண்ணிக்கை மாநிலத்தில் கணிசமாக குறைந்து கொண்டு வந்துள்ளது.

**அமலாக்கம்**

மாநிலத்தில் குழந்தை மற்றும் வளரிளம் பருவ தொழிலாளர் (தடுத்தல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், 1986 மற்றும் அதன் தொடர்புடைய இதர சட்டங்கள் தொழிலாளர் துறை மற்றும் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் ஆகியவற்றால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சட்ட வரம்புகளுக்கு துணை நிற்கும் வகையில், மாநில விதிகள், திருத்திய மாநில செயல் திட்டம், நிலையான செயலாக்க நடைமுறைகள் ஆகியவற்றை உருவாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒருங்கிணைப்பு அலுவலராக தொழிலாளர் உதவி ஆணையரை (அமலாக்கம்) நியமித்து அரசாணை (நிலை) எண்.130, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (யு1)த் துறை, நாள் 28.07.2017–ல் அறிவிக்கை செய்துள்ளது. 14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை வேலைகளில்

ஈடுபடுத்தப்படுவது முற்றிலுமாக தடை செய்யப்பட்டு சட்டம் இயற்றப்பட்டதைத் தொடர்ந்து இந்திய அரசால் சிறந்த அமலாக்க யுக்தியாக **'பென்சில்' (**PENCIL – Platform for Effective Enforcement of No Child Labour) என்ற ஒரு வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது.

**2017–18–**ஆம் ஆண்டில், மாவட்ட அளவிலான தடுப்புப் படை உள்ளிட்டவற்றால் **2,19,732** முறையான, சிறப்பு மற்றும் திடீர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வின் போது, **49** முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, **59** குழந்தை தொழிலாளர்கள் மீட்கப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளனர். **6** வழக்குகளில் குற்றம் நிரூபிக்கப்பட்டு, அபராதமாக ரூ.**80,050/–** நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ளது.

**விழிப்புணர்வு ஏற்படுத்துதல்**

பொதுமக்களிடையே விழிப்புணர்வினை ஏற்படுத்திடும் வண்ணம், ஒவ்வொரு வருடமும் ஜுன் **12–**ஆம் தேதி குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது. மாவட்ட அளவில் பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகங்களில் உறுதிமொழி எடுத்தல்,

பேரணிகள், மனித சங்கிலிகள் மற்றும் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்துதல் ஆகியவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மாநில அளவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தின செய்தி பல்வேறு தமிழ் மற்றும் ஆங்கில தினசரிகளில் வெளியிடப்படுகிறது. தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பயிற்சி மையங்களில் பயின்று முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, 10-ஆம் மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு ரொக்கப்பரிசும், சிறப்பாகப் பணிபுரிந்த சிறப்புப் பயிற்சி மைய ஆசிரியர்களுக்கு கேடயங்களும் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும், சென்னை தீவுத்திடலில் அகில இந்திய சுற்றுலா மற்றும் தொழில் வர்த்தக பொருட்காட்சியில், கையெழுத்து இயக்கம், துண்டு பிரசுரங்கள் விநியோகம் செய்தல், குழந்தைத் தொழிலாளர் வேலைக்கு அமர்த்துவதற்கு எதிராக உறுதிமொழி எடுத்தல் ஆகிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகள் தொழிலாளர் துறை அரங்கில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குழந்தை தொழிலாளர் முறை அகற்றுதலில் 2013, 2014 மற்றும் 2015–ஆம் ஆண்டுகளில், முறையே சிறப்பாக பணியாற்றிய திருச்சி, வேலூர் மற்றும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 01.09.2017 அன்று நடைபெற்ற கூட்டத்தில் கேடயங்கள் வழங்கப்பட்டது.

**தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம்**

தமிழ்நாட்டில் மத்திய அரசின் நிதி உதவியுடன் தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம் 15 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்ட குழந்தை தொழிலாளர் கண்காணிப்பு குழுவின் தலைவரான மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட சங்கம் இயங்கி வருகிறது. தற்போது தேசிய குழந்தை தொழிலாளர் திட்டம் செயல்படும் 15 மாவட்டங்களில் இயங்கி வரும் 312 சிறப்பு பயிற்சி மையங்களில் 7,040 மீட்கப்பட்ட குழந்தை தொழிலாளர்கள் பயின்று வருகின்றனர். 2017–18–ஆம் ஆண்டில், முறையான பள்ளிகளில் 3,482 குழந்தைகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட உதவியுடன் பயிலும் மாணவ மாணவிகளுக்கு மாதம் ரூ.400/– வீதம் உதவித் தொகை, கல்வி உபகரணங்கள் மற்றும் இலவச சீருடை வழங்கப்படுவதுடன் இலவச மருத்துவ பரிசோதனையும் மேற்கொள்ளப்படுகிறது. மாநில அரசு குழந்தை தொழிலாளராக இருந்து மீட்கப்பட்டு தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட பள்ளிகளில் பயின்று உயர்கல்வியினை தொடரும் மாணவ மாணவியருக்கு மாதந்தோறும் ரூ.500/– வீதம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. 2017–2018–ஆம் கல்வியாண்டில் ரூ.46.92 இலட்சம் வழங்கப்பட்டு, 782 மாணவ / மாணவியர்கள் பயனடைந்துள்ளனர்.

## கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு

கொத்தடிமை தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்டம், 1976 மற்றும் கொத்தடிமை தொழிலாளர் மறுவாழ்வு திட்டம் ஆகியவை விடுவிக்கப்பட்ட கொத்தடிமை தொழிலாளர்களின் பொருளாதார மற்றும் சமூக ரீதியான மறுவாழ்விற்கு வழிவகை செய்வதுடன் அவர்களது தொழிற்திறன் மேம்பாட்டிற்கும் வழிவகை செய்கிறது. கொத்தடிமை தொழிலாளர் மறு வாழ்வு

பற்றிய பொருண்மை **01.04.2017** முதல் தொழிலாளர் துறையால் கையாளப்படுகிறது.

கொத்தடிமை தொழிலாளர்களை கண்டறிதல், மீட்டெடுத்தல் மற்றும் மறுவாழ்வு அளித்தல் ஆகியவை பற்றிய மாநில செயல் திட்டம் ஒன்று அரசாணை (நிலை) எண்.**163**, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (யு**1**)த் துறை, நாள் **21.09.2017**–ல் அரசால் ஒப்புதல் செய்யப்பட்டுள்ளது.

கொத்தடிமை தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்டம், **1976** மற்றும் மத்திய அரசின் கொத்தடிமை தொழிலாளர் மறுவாழ்வு திட்டம்–**2016** ஆகியவற்றை தத்தமது அதிகார எல்லைக்குள் அமல்படுத்திட வேண்டி அனைத்து தொழிலாளர் உதவி ஆணையர்களும் (அமலாக்கம்) ஒருங்கிணைப்பு அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

கொத்தடிமை தொழிலாளர் முறை (ஒழித்தல்) சட்டம் **1976** மற்றும் மத்திய கொத்தடிமை தொழிலாளர் மறுவாழ்வு திட்டம்–**2016** ஆகியவற்றை அனைத்து பங்காளர்களும் சீரிய முறையில் செயல்படுத்த வேண்டி கொத்தடிமை தொழிலாளர்களை கண்டறிதல், விடுவித்தல், மறுவாழ்வு அளித்தல் ஆகியவை குறித்த நெறிமுறைகள் அடங்கிய

நிலையான செயல் முறைகள் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

கொத்தடிமை முறையிலிருந்து விடுவிக்கப்படும் தொழிலாளர்களுக்கு உடனடி மறு வாழ்வு நிவாரண தொகையாக ரூ.20,000/– குடும்ப அட்டை, சாதி சான்றிதழ், வேலைவாய்ப்பு, கல்வி, சுய உதவி குழுக்களில் உறுப்பினராக சேர்த்தல் மற்றும் மருத்துவ வசதிகள் ஆகியவை வழங்கப்பட்டு வருகின்றன. கொத்தடிமை முறையிலிருந்து மீட்கப்படும் தொழிலாளர்களை சம்பந்தப்பட்ட அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்து உரிய திட்டங்களின் கீழ் பயன்களை அவர்கள் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கொத்தடிமை தொழிலாளர் மறுவாழ்வுக்கென 2017–18–ஆம் நிதியாண்டில் மாநில அரசால் ரூ.125 இலட்சம் தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2017–18–ஆம் ஆண்டில், 276 கொத்தடிமை தொழிலாளர்கள் கொத்தடிமை முறையிலிருந்து மீட்கப்பட்டு அவர்களுக்கு ரூ.49.05 இலட்சங்கள் உடனடி நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் துறை கணக்கெடுத்தல் முதல், கொத்தடிமை தொழிலாளர்களை மீட்டு மறுவாழ்வு அளித்து தொடரப்பட்ட வழக்கு முடியும் வரையிலான அனைத்து விவரங்களையும் உள்ளடக்கிய ஒரு ஒருங்கிணைந்த தகவல் தொகுப்பினை உருவாக்கியுள்ளது.

## 1.11. நுகர்வோர் பாதுகாப்பு

### சட்டமுறை எடையளவு சட்டம், 2009

நுகர்வோர் பாதுகாப்பினை உறுதி செய்யும் பொருட்டு சட்டமுறை எடையளவுச் சட்டம், 2009 உருவாக்கப்பட்டு எடை மற்றும் அளவைகளின் தரத்தை உறுதிபடுத்துகிறது. இச்சட்டத்தால் வணிகம் மற்றும் வியாபார நிறுவனங்களில் உள்ள எடைகள், அளவைகள் அல்லது எண்ணிக்கை வாயிலாக விற்கப்படும் / பகிர்ந்தளிக்கப்படும் இதர பொருட்களை முறைப்படுத்தப்படுகிறது.

தொழிலாளர் துறையால் அறிவிக்கை செய்யப்பட்ட அலுவலர்களால் இம்முறைப்படுத்தும் சட்டம் அமல்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டின் சட்டமுறை எடையளவு கட்டுப்பாட்டு அதிகாரியாக சென்னை கூடுதல் தொழிலாளர் ஆணையர் (ஆய்வுகள்) அறிவிக்கை செய்யப்பட்டுள்ளார்.

2017–18–ஆம் ஆண்டில், சட்டமுறை எடையளவு சட்டத்தின் கீழ் 3,44,233 நிறுவனங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 12,231 வழக்குகளில் ரூ.99.67 இலட்சம் இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. முத்திரைக் கட்டணமாக ரூ.32.00 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது.

**சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள், 2011**

சட்டமுறை எடையளவு (பொட்டலப் பொருட்கள்) விதிகள் பொட்டலமிடப்பட்ட பொருட்களை முறைப்படுத்துகிறது. மேலும், பொருட்கள் விற்பனை செய்யப்படும் முன் பொட்டலப் பொருட்கள் மீது சில அறிவிக்கைகள் அச்சிடப்பட வேண்டும் என்பதை உறுதி செய்கிறது.

2017–18–ஆம் ஆண்டில், 1,29,971 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, 2,310 வழக்குகளில் ரூ.58.28 இலட்சம் இணக்கக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது. பதிவுக் கட்டணமாக ரூ.2.31 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

**1.12. நல வாரியங்கள் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்கள்**

**தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம்**

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் 1975–ஆம் ஆண்டில், தமிழ்நாடு தொழிலாளர் நல நிதி சட்டம், 1972–ன் கீழ் அமைப்பு சார்ந்த தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்

திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு உருவாக்கப்பட்டது. தொழிற்சாலைகள், தோட்ட நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், கடைகள், உணவு நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்துவதற்காக, தொழிலாளர்கள், அவர்தம் வேலையளிப்பவர்கள் ஆகியோரிடமிருந்து தொழிலாளர் நல நிதியை தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் பெறுகிறது. தொழிலாளர் நல நிதியாக ஒவ்வொரு தொழிலாளிக்கும் தொழிலாளியின் பங்காக ரூ.10/–ம், வேலையளிப்பவரின் பங்காக ரூ.20/–ம் அரசின் பங்காக ரூ.10/–ம் ஒவ்வொரு ஆண்டுக்கும் பெறப்படுகிறது. இது தவிர, நிறுவனங்களின் மீது நீதிமன்றத்தால் விதிக்கப்படும் அபராதத் தொகை, பல்வேறு தொழிலாளர் நலச் சட்டங்கள் மற்றும் விதிகளை மீறியமைக்காக நிறுவனங்களிடமிருந்து தொழிலாளர் துறையின் அமலாக்க அதிகாரிகளால் வசூலிக்கப்படும் இணைக்கக் கட்டணமும் வாரியத்தில் நல நிதியாகப் பெறப்படுகிறது.

தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம், சந்தாதாரர்களின் நலனுக்காக பாலர் பள்ளி, தையற்பயிற்சி, படிப்பகங்கள் ஆகிய வசதிகளை 38 நல மையங்களில் செயல்படுத்தி வருகிறது.

மேலும், கல்வி உதவித் தொகை, அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கான கல்வி ஊக்கத் தொகை, பாடநூல்

உதவித் தொகை, அடிப்படை கணினி பயிற்சி, திருமணம், மூக்குக் கண்ணாடி, தட்டச்சு / சுருக்கெழுத்து, காதுகேட்கும் கருவி, செயற்கை உறுப்பு, மூன்று சக்கர வாகனம், இயற்கை மரணம், விபத்து மரணம், ஈமச்சடங்கு ஆகியவைகளுக்கு உதவித் தொகைகள் இவ்வாரியத்தால் வழங்கப்பட்டு வருகிறது. இத்துடன், காசநோய்க்கான சிறப்பு சிகிச்சை பிரிவுகள், தொழிலாளர்களுக்கென விடுமுறை இல்லங்கள், தொழிற்சங்கப் பிரதிநிதிகளுக்கென ஓய்வு இல்லம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வேலையளிப்போர் மற்றும் தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் 'உழைப்பவர் உலகம்' என்ற மாதாந்திர பத்திரிக்கையும் வெளியிடப்பட்டு வருகிறது.

2017–18–ஆம் ஆண்டில், 15,075 தொழிலாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்கள் ரூ.87.90 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பெற்றுள்ளனர்.

## அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள்

அமைப்புசாரா தொழில்கள் என்பது நிரந்தரமற்ற வேலைவாய்ப்பு மற்றும் நிலையற்ற வருமானமும் கொண்டதாகும். அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு சமூக பாதுகாப்பு நல திட்டங்கள் வழங்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) 1982 சட்டத்தை இயற்றியது. அதனை தொடர்ந்து நலதிட்டங்கள்

உருவாக்கப்பட்டன. இத்திட்டத்தின் மூலம் கல்வி, திருமணம், கண்கண்ணாடி, மகப்பேறு, விபத்து ஊனம், இயற்கை மரணம், விபத்து மரணம், ஈமச் சடங்கு, மாதாந்திர ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம் ஆகிய பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்க வழிவகை செய்கிறது.

**மேற்படி சட்டத்தின் கீழ் அரசு கீழ்க்கண்ட 17 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களை அமைத்துள்ளது.**

| வ. எண் | வாரியங்களின் பெயர் |
|---|---|
| 1. | தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 2. | தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் |
| 3. | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் |
| 4. | தமிழ்நாடு தையல் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 5. | தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியம் |
| 6. | தமிழ்நாடு சலவைத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 7. | தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 8. | தமிழ்நாடு கைவினைத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 9. | தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர்கள் நல வாரியம் |

| வ. எண் | வாரியங்களின் பெயர் |
| --- | --- |
| 10. | தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி மற்றும் தோல் பதனிடும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 11. | தமிழ்நாடு ஓவியர்கள் நல வாரியம் |
| 12. | தமிழ்நாடு பொற்கொல்லர்கள் நல வாரியம் |
| 13. | தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 14. | தமிழ்நாடு வீட்டுப் பணியாளர்கள் நல வாரியம் |
| 15. | தமிழ்நாடு விசைத்தறி நெசவாளர்கள் நல வாரியம் |
| 16. | தமிழ்நாடு பாதையோர வணிகர்கள் மற்றும் கடைகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் நல வாரியம் |
| 17. | தமிழ்நாடு சமையல் தொழிலாளர்கள் நல வாரியம் |

## 17 அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகள்

அமைப்புசாரா தொழிலாளர்களின் பதிவு, புதுப்பித்தல், கேட்பு மனு ஒப்பளிப்பு, உதவித் தொகைகள் வழங்குதல் ஆகிய பணிகளை மாவட்ட அளவில் **35** தொழிலாளர் உதவி ஆணையர்கள் (சமூக பாதுகாப்பு திட்டம்) நிர்வகித்து

வருகின்றனர். அமைப்புசாரா தொழிலாளர்களின் தேவைகளை நிறைவேற்றிடும் வகையில் பொன்னேரி, மார்த்தாண்டம், வாணியம்பாடி ஆகிய இடங்களில் கூடுதலாக அலுவலகங்கள் துவக்கப்பட்டுள்ளன.

**வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள்**

பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு பின்வரும் நலத் திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன :-

| வ. எண் | உதவித்தொகை வகைகள் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1. | விபத்து நிவாரணத் திட்டம் | |
| | அ) விபத்து மரணம் | 1,00,000/– |
| | ஆ) விபத்து ஊனம் (ஊனத்தின் தன்மைக்கேற்ப) | 1,00,000/– வரை |
| | இ) செயற்கை உறுப்புகள் மற்றும் சக்கர நாற்காலி | மாற்றுத் திறனாளிகள் நல வாரியம் நிர்ணயிக்கும் தொகை |
| | ஈ) பணியிடத்தில் விபத்து மரணம் (பதிவு செய்த மற்றும் பதிவு செய்யாத கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மட்டும்) | ரூ.5,00,000/– |

| வ. எண் | உதவித்தொகை வகைகள் | | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| 2. | இயற்கை மரண உதவித் தொகை | | 20,000/– |
| 3. | ஈமச்சடங்கு உதவித்தொகை | | 5,000/– |
| 4. | கல்வி உதவித் தொகை<br>அ) 10–ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | | 1,000/– |
| | ஆ) | 10–ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,000/– |
| | இ) | 11–ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,000/– |
| | ஈ) | 12–ஆம் வகுப்பு படிப்பதற்கு (பெண் குழந்தைகளுக்கு மட்டும்) | 1,500/– |
| | உ) | 12–ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,500/– |
| | ஊ) | முறையான பட்டப்படிப்பு<br>விடுதியில் தங்கிப் படித்தல் | 1,500/–<br>1,750/– |
| | எ) | முறையான பட்டமேற்படிப்பு<br>விடுதியில் தங்கிப் படித்தல் | 4,000/–<br>5,000/– |
| | ஏ) | தொழில் நுட்பப் பட்டப்படிப்பு<br>விடுதியில் தங்கிப் படித்தல் | 4,000/–<br>6,000/– |
| | ஐ) | தொழில்நுட்பப் பட்டமேற்படிப்பு<br>விடுதியில் தங்கிப் படித்தல் | 6,000/–<br>8,000/– |

| வ. எண் | உதவித்தொகை வகைகள் | | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| | ஒ) | ஐ.டி.ஐ. அல்லது பாலிடெக்னிக் படிப்பு<br>விடுதியில் தங்கிப் படித்தல் | 1,000/–<br>1,200/– |
| 5. | திருமண உதவித்தொகை<br>அ) ஆண்<br>ஆ) பெண் | | <br>3,000/–<br>5,000/– |
| 6. | மகப்பேறு உதவித்தொகை<br>மருத்துவரீதியிலான கருக்கலைப்பு / கருச்சிதைவு | | 6,000/–<br>3,000/– |
| 7. | கண் கண்ணாடி வாங்கிட உதவித் தொகை | | 500/–வரை |
| 8. | ஓய்வூதியம் | | 1000/–பிரதி மாதம் |
| 9. | குடும்ப ஓய்வூதியம் (கட்டுமானத் தொழிலாளர்களுக்கு மட்டும்) | | 400/–பிரதி மாதம். |

**மாவட்ட அளவிலான சமூக பாதுகாப்பு திட்ட அலுவலகங்கள்**

மாவட்ட அளவிலான நலத் திட்ட செயல்பாடுகளை **32** மாவட்டங்களிலும், **35** தொழிலாளர் உதவி ஆணையர்கள் (சமூக பாதுகாப்பு திட்டம்) நிர்வகித்து வருகின்றனர். அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அளவிலான அலுவலகங்கள்

கணினிமயமாக்கப்பட்டுள்ளன. மேலும், பதிவு, புதுப்பித்தல், கேட்பு மனுக்கள், தகவல் நிர்வாகம் ஆகியவை இணையதள மென்பொருள் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.

மாவட்ட அளவில் சமூக பாதுகாப்பு நல திட்டங்களை செயல்படுத்துவதில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும், மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர்கள் (சமூக பாதுகாப்பு திட்டம்) பணிகளை மேம்படுத்தவும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மாவட்டத்தின் பல்வேறு துறைகளை சேர்ந்த அரசு பிரதிநிதிகள், தொழிலாளர் மற்றும் வேலையளிப்போர் பிரதிநிதிகள் அடங்கிய மாவட்ட கண்காணிப்புக் குழு செயல்பட்டு வருகிறது.

பதிவு பெற்ற அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு அடையாள அட்டைகள் இணையதள மென்பொருள் வாயிலாக கணக்கு புத்தக வடிவில் வழங்கப்படுகின்றன.

அதிக வெளிப்படை தன்மை கொண்டுவருவதற்காக அனைத்து நலத் திட்ட உதவிகளும் பாரத ரிசர்வ் வங்கியின் மின்னணு பரிமாற்றம் மூலம் பயனாளிகளின் / பதிவு பெற்ற உடலுழைப்பு தொழிலாளர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்படுகிறது.

**நிதி ஆதாரங்கள்**

தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம், கட்டடம் அல்லது உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டுமான பணிகளின் மதிப்பீட்டுத் தொகையின் ஒரு சதவீதத்தை பங்களிப்பு தொகை பெறுகிறது. 2017–18–ஆம் ஆண்டில் ரூ.519.74 கோடி மேல்வரியாக பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம், பயணிகள் அல்லது பொருட்களை ஏற்றி செல்லும் வர்த்தக வாகனங்களின் உரிமையாளர்களிடமிருந்து, தமிழ்நாடு மோட்டார் வாகன வரி விதிப்பு சட்டம், 1974–ன்படி ஒரு சதவிகித மோட்டார் வாகன கூடுதல் வரி வசூலிக்கப்பட்டு அமைப்புசாரா ஓட்டுநர்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. 2017–18–ஆம் ஆண்டில் கூடுதல் வரியாக ரூ.11.51 கோடி பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களுக்கு நலத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு தமிழக அரசு மானியம் வழங்குகிறது. 2017–18–ஆம் ஆண்டிற்கு ரூ.87.80 கோடி அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

**நல வாரியங்களின் சாதனைகள்**

வாரியம் துவங்கப்பட்டது முதல் **31.03.2018** வரை பதிவு, பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட உதவித்தொகை விவரங்கள் :-

| வ. எண் | வாரியங்களின் பெயர் | பதிவு (இலட்சத்தில்) | பயனாளிகள் (இலட்சத்தில்) | தொகை ரூ. (கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் | 28.21 | 14.63 | 503.69 |
| 2 | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் | 2.10 | 1.07 | 29.78 |
| 3 | தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 14 வாரியங்கள் | 40.41 | 27.38 | 701.38 |
| **மொத்தம்** | | 70.72 | 43.08 | 1234.85 |

2017–18–ஆம் ஆண்டின் பதிவு பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்பட்ட உதவித்தொகை விவரங்கள் :-

| வ. எண் | வாரியங்களின் பெயர் | பதிவு (இலட்சத்தில்) | பயனாளிகள் (இலட்சத்தில்) | தொகை ரூ. (கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் | 1.20 | 1.93 | 90.08 |
| 2 | தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியம் | 0.08 | 0.15 | 5.54 |
| 3 | தமிழ்நாடு உடலுழைப்பு தொழிலாளர் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரியம் மற்றும் இதர 14 வாரியங்கள் | 0.69 | 2.15 | 78.75 |
| மொத்தம் | | 1.97 | 4.23 | 174.37 |

## 1.13. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம்

தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையம் 1973–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டு, தொழிலாளர் மேலாண்மையியலில் பட்டம் மற்றும் பட்டய படிப்புகளையும், பல்வேறு பயிற்சிகளையும் நடத்தி வருகிறது. மனிதவள

மேலாண்மை துறையில், தொழில் நிறுவனங்களின் தேவைகளுக்கேற்ப, தொழில் முறை சார்ந்த திறன்மிகு மனிதவள வல்லுநர்களை உருவாக்கிட, **1987**–ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு, **1.4.1988** முதல் தன்னாட்சி நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. இக்கல்வி நிலையத்தின் நிர்வாக செலவினங்களுக்காக ரூ.**2.17** கோடி மானியமாக தமிழ்நாடு அரசு வழங்கி வருகிறது.

தமிழ்நாட்டில் பெருகி வரும் தொழில்மயமாகுதலின் தேவைக்கு ஏற்ப தொழிலாளர் மேலாண்மை மற்றும் மனிதவள மேலாண்மையில் சென்னைப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட இளங்கலை பட்டப்படிப்பு (தொழிலாளர் மேலாண்மை), முதுகலை பட்டப்படிப்பு (தொழிலாளர் மேலாண்மை) மற்றும் ஆராய்ச்சி படிப்புகளையும் நடத்தி வருகிறது. பணிபுரிவோருக்காக தொழிலாளர் நிர்வாகத்தில் ஓராண்டு பகுதி நேர முதுகலை பட்டயப்படிப்பும், தொழிலாளர் சட்டங்களும் நிர்வாகவியல் சட்டமும் என்ற ஓராண்டு பகுதிநேர (வார இறுதி) பட்டயப் படிப்பும் சீர்மிகு வகுப்பறைகளில் இக்கல்வி நிலையத்தால் வழங்கப்பட்டு வருகிறது. இக்கல்வி நிலையத்தில் பயின்ற மாணவர்கள்

மத்திய, மாநில தொழிலாளர் துறைகளிலும், தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிலும் மனிதவள மேம்பாட்டு அலுவலர்களாக பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

2017–18–ஆம் கல்வியாண்டில், 263 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். மேலும், இக்கல்வி நிலையத்தால் நடத்தப்பட்ட 17 கருத்தரங்குகள் / பயிற்சி வகுப்புகள் வாயிலாக 1,823 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

அம்பத்தூர் ஐ.டி.ஐ. வளாகத்தில் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்திற்கு சொந்த கட்டடம் கட்டுவதற்காக, அரசாணை (நிலை) எண்.227, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 25.11.2016–ல் ரூ.15 கோடிக்கான நிர்வாக அனுமதியும், நிதி ஒப்பளிப்பும் வழங்கப்பட்டுள்ளது. 26.4.2017 அன்று அம்பத்தூர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலைய கட்டுமானப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன.

## 1.14. தமிழ்நாடு கட்டுமானக் கழகம்

தற்போது மாறிவரும் சூழ்நிலையில் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் திறனை

மேம்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அத்துறையில் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திரங்கள் ஈடுபடுத்தப்பட்டு வரும் காரணத்தினால் தொழிலாளர்களின் திறன்களை மேம்படுத்த வேண்டிய அத்தியாவசியம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தால் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குழந்தைகளுக்கு இலவச திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. உதாரணமாக, மின்சாரப்பயிற்சி, வர்ணம் பூசுதல், தச்சுவேலை, கொத்தனார், நில அளவையர் மற்றும் குழாய் பொறுத்துபவர் ஆகிய தொழில்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. மேற்படி திறன் மேம்பாட்டு பயிற்சி அரசு தொழில் பயிற்சி நிலையங்கள் மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குனரகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழில் பயிற்சி நிலையங்கள் மூலம் வழங்கப்படுகிறது.

### 1.15. சிறப்பு முயற்சிகள்

❖ பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் பலதரப்பட்ட ஆண்டு அறிக்கைகள் தாக்கல் செய்யப்படுவதை தவிர்த்திடும் பொருட்டு, தமிழ்நாடு உணவு நிறுவன சட்ட

விதிகள் 1959, தமிழ்நாடு தோட்டங்கள் விதிகள், 1955, தமிழ்நாடு மோட்டார் நிறுவன தொழிலாளர்கள் விதிகள் 1965 மற்றும் தமிழ்நாடு பீடி மற்றும் சுருட்டு (வேலை நிலைமைகள்) விதிகள் 1968–ன் கீழ் ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தொழிலாளர் துறையால் உருவாக்கப்பட்டு வரும் வலைதளத்தில், இணையம் மூலமாக ஒருங்கிணைந்த ஆண்டு அறிக்கைகள் தாக்கல் செய்யப்படும் முறை ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

- அதிக எண்ணிக்கையில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் மற்றும் படிவங்களை சீரமைத்திடவும், எளிமையாக்கிடவும் மற்றும் அவற்றை பராமரிப்பதிலுள்ள சிரமங்களை குறைத்திடவும் தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகள், 1948, தமிழ்நாடு உணவு நிறுவன சட்ட விதிகள் 1959, தமிழ்நாடு தோட்டங்கள் விதிகள், 1955, தமிழ்நாடு மோட்டார் நிறுவன தொழிலாளர்கள் விதிகள், 1965 மற்றும் தமிழ்நாடு பீடி மற்றும் சுருட்டு (வேலை நிலைமைகள்) விதிகள், 1968–ன் கீழ் ஒருங்கிணைந்த பதிவேடு உருவாக்கப்பட்டுள்ளது.

- 17 அமைப்புசாரா நல வாரியங்களில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு இயற்கை மரணத்திற்கு அளிக்கப்படும் உதவித்தொகை ரூ.15,000–லிருந்து ரூ.20,000 ஆகவும், ஈமச்சடங்கிற்கான செலவுத்தொகை ரூ.2,000–லிருந்து ரூ.5,000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

- அமைப்புசாரா தொழிலாளர்களுக்காகவும், மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்களுக்காகவும் ரூ.9.95 லட்சம் செலவில் பன்மொழி உதவியளித்திடும் கட்டணமில்லா தொலைபேசி மையம் 28.12.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

- மிக அதிக அளவில் தொழிலாளர்கள் 17 அமைப்பு சாரா நல வாரியங்களில் பதிவு செய்வதாலும் அவர்களுக்கான நலத்திட்ட உதவிகள் விரைவில் வழங்கப்படுவதற்காகவும் கன்னியாகுமரி, வேலூர் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் கூடுதலாக ஒரு தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி) அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வலுவலகங்கள் 28.12.2017 அன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளன.

- பதிவு செய்துள்ள அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் விரைவில் சென்றடைய தொழிலாளர் உதவி ஆணையர்களுக்கு (ச.பா.தி) ஈப்புகள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் **16.05.2017** அன்று வழங்கப்பட்டுள்ளது.

**விருதுகள்**

- தொழில் நல்லுறவுகளை வளர்க்கும் பொருட்டு, அரசு 'தொழில் நல்லுறவு விருதுகள்' திட்டத்தினை உருவாக்கியுள்ளது. தொழில் நல்லுறவைப் பேணிவரும் வேலையளிப்போர் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு இவ்விருது வழங்கப்படுகிறது. இக்குழுவுக்கு சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி தலைவராகவும், தனி தொழிலாளர் இணை ஆணையர் செயலாளராகவும் உள்ளனர். **2008**–ஆம் ஆண்டு முதல் **2014**–ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு **69** விருதுகளை வேலையளிப்போருக்கும் தொழிற்சங்கங்களுக்கும் **20.05.2017** அன்று நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் வழங்கினார்.

- **01.09.2017** அன்று நடைபெற்ற கூட்டத்தில், குழந்தை தொழிலாளர் முறை அகற்றுதலில் **2013, 2014** மற்றும் **2015**–ஆம் ஆண்டுகளில் மிகச் சிறப்பாக செயல்பட்ட திருச்சி, வேலூர் மற்றும் சிவகங்கை மாவட்ட ஆட்சியர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விருதுகள் வழங்கப்பட்டது.

- **07.03.2018** அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கான மாநாட்டில், மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவில் பெறப்படும் மனுக்களுக்கு மிக விரைவாக குறைதீர்வு கண்டமைக்காக, மூன்றாவது இடத்திற்கான கேடயம் தொழிலாளர் ஆணையர் அவர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

## 2. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

தமிழ்நாட்டில் அனைத்து உற்பத்தி பிரிவுகளிலும் பல பன்னாட்டு நிறுவனங்களின் வலுவான பங்களிப்பினால் இம்மாநிலம் தொழில் வளர்ச்சியில் எப்பொழுதும் முதன்மை மாநிலமாக திகழ்ந்து வருகின்றது. இம்மாநிலத்தில் எப்பொழுதும் நிலவும் சுமூகமான வியாபார சூழல், வலுவான மற்றும் மிகச்சிறந்த உட்கட்டமைப்பு, திறன்மிகு தொழிலாளர்கள், அமைதியான மற்றும் இணக்கமான தொழில் சூழல் ஆகியவை இம்மாநிலத்தை தொழில் முதலீட்டாளர்களின் தேர்வாகவும், நாட்டின் முன்னோடி உற்பத்தி மையமாகவும் திகழச் செய்துள்ளன.

அமைதியான தொழில் சூழல் மற்றும் சிறப்பான ஊதிய விகிதங்களின் காரணமாக தொழில் திறனும், ஆற்றலும் மிகுந்த தொழிலாளர்களைக் கொண்ட மாநிலம் என தமிழ்நாடு பெருமை கொள்கிறது. பல்வேறு தொழிலாளர் நலச்சட்டங்களை சிறப்பாக அமலாக்கம் செய்ய இத்துறையால் எடுக்கப்பட்டுவரும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளின் மூலம் இவை அனைத்தும் சாத்தியமாகிறது. நிலையான பொருளாதார வளர்ச்சியின் மூலம் பயனுள்ள வகையில்

அதிகப்படியான வேலைவாய்ப்புகளை உருவாக்கி மக்களின் நலனை மேம்படுத்துவது இவ்வரசின் கொள்கையாகத் திகழ்ந்து வருகிறது.

எளிமைப்படுத்தப்பட்ட தொழில் தொடங்கும் நடைமுறையை ஊக்குவிக்கும் விதமாகவும் தொழில் முனைவோர் பயன்பெறும் விதமாகவும் அரசு விதிகளில் திருத்தம் மேற்கொண்டு தொழிற்சாலைகளின் நலனுக்காகப் பல்வேறு தொழிலாளர் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தொழிலாளர் சட்டங்களின் கீழ் சேவைகள் வழங்கப்படுவதற்கான கால வரம்பு குறைக்கப்பட்டுள்ளது. எளிமையான தொழில் தொடங்கும் நடைமுறைகளால் இம்மாநிலத்தில் பல சிறிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகள் ஊக்குவிக்கப்பட்டு விரைவான தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

வாகனம் மற்றும் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், பொறியியல், மருந்து தயாரித்தல், நூற்பாலைகள், ஆயத்த ஆடைகள், தோல் பொருட்கள், இரசாயனம், பிளாஸ்டிக், பட்டாசு மற்றும் தீப்பெட்டி தொழிற்சாலைகள் போன்ற பலதரப்பட்ட உற்பத்தி தொழில்கள் அமையப்பெற்றுள்ளதன் மூலம் தமிழ்நாடு, பற்பல

தொழில்களில் முன்னோடி மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

தொழிற்சாலைகளில் பணிபுரியும் அமைப்புசார்ந்த தொழிலாளர்கள் மற்றும் கட்டுமானப் பணியிடங்களில் பணிபுரியும் அமைப்புசாரா தொழிலாளர்களின் நலனை காக்கும் நோக்கோடு தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம், தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான பணியிடங்களில் தொழிலாளர் நல சட்டங்களை திறம்பட அமலாக்கம் செய்து தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டின் தொழில் அமைதியை உறுதி செய்வதில் இவ்வியக்ககம் முக்கிய பங்கு வகித்து வருகிறது.

தமிழகத்தில், 31.03.2018 அன்றுள்ளவாறு தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 42,987 தொழிற்சாலைகள் பதிவு செய்யப்பட்டு 21,42,037 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும், கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம் 1996–ன் கீழ் 8,850 கட்டுமான நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு 2,39,295 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர்.

## 2.1. நிர்வாக அமைப்பு

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில், தொழிற்சாலைகள் சட்ட அமலாக்க பிரிவு, கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்க பிரிவு என இரண்டு பிரிவுகள் இயக்குநர் தலைமையில் செயல்பட்டு வருகின்றன.

**தொழிற்சாலைகள் சட்ட அமலாக்க பிரிவு**

இப்பிரிவு ஒரு முதுநிலை கூடுதல் இயக்குநர், ஆறு கூடுதல் இயக்குநர்கள், 31 இணை இயக்குநர்கள், 55 துணை இயக்குநர்கள், 46 உதவி இயக்குநர்கள், ஒரு தலைமை மருத்துவ அலுவலர் மற்றும் எட்டு உதவி அறுவை சிகிச்சை மருத்துவர்கள் ஆகியோரைக் கொண்டதாகும்.

**கட்டடம் மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்க பிரிவு**

இப்பிரிவு ஒரு முதுநிலை கூடுதல் இயக்குநர், இரண்டு இணை இயக்குநர்கள், எட்டு துணை இயக்குநர்கள் மற்றும் 16 உதவி இயக்குநர்கள் ஆகியோரைக் கொண்டதாகும்.

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககமானது, தொழிற்சாலைகள் மற்றும் கட்டுமான பணியிடங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும்

நலன்கள் காக்கப்படுவதை உறுதி செய்வதுடன் கீழ்கண்ட பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

I. தொழிற்சாலைகள் சட்டம், 1948 & தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள், 1950 மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களை தொழிற்சாலைகளில் அமலாக்கம் செய்தல்

II. தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேம்பாடு சார்ந்த செயல்பாடுகள்

III. கட்டுமான பணியிடங்களில், கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைபடுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம் 1996 மற்றும் தமிழ்நாடு கட்டடம் மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் (பணி முறைபடுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகள் 2006 ஆகியவற்றுடன் இதர தொழிலாளர் நல சட்டங்களை அமலாக்கம் செய்தல்

## 2.2. தொழிற்சாலைகள் சட்டம் மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களை தொழிற்சாலைகளில் அமலாக்கம் செய்தல்

இவ்வியக்ககம் தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் இதர தொழிலாளர் நல சட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ள பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல

வசதிகள் தொழிலாளர்களுக்கு சென்றடைவதை உறுதிபடுத்துவதற்கு காலமுறையில் தொழிற்சாலைகளில் ஆய்வு மேற்கொள்வதை முதன்மை பணியாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

## 2.3. தொழிற்சாலைகளில் எளிமைப்படுத்தப்பட்ட தொழில் தொடங்கும் நடைமுறைகளை ஊக்குவித்தல்

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தால் மேற்கொள்ளப்படும் ஆய்வு நடைமுறைகளில் மாற்றம் செய்யப்பட்டு, தொழிற்சாலைகளின் அபாய வகைப்பாட்டின் அடிப்படையில், கணினி மூலமாகத் தெரிவு செய்து ஆய்வு மேற்கொள்ளும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் தொழில் முனைவோருக்கு சுலபமாக தொழில் தொடங்கும் வசதிகளை (Ease of Doing Business) வழங்கும் பொருட்டு, இணையதளம் வழியாக கட்டணம் செலுத்தும் வசதியுடன் பிரத்தியேக வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஒப்புதல்கள் இவ்வியக்கக அலுவலர்களின் மின்கையொப்பத்துடன் (Digital Signature) பெறும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வியக்கத்தின்

கீழ்கண்ட சேவைகளை https://dish.tn.gov.in என்ற வலைதளத்தின் மூலம் தற்போது பெற இயலும்.

- ❖ தொழிற்சாலைகள் சட்டம், 1948–ன் கீழ் உரிமம் வழங்குதல்
- ❖ தொழிற்சாலைகள் சட்டம், **1948–**ன் கீழ் வரைபடங்கள் ஒப்புதல் அளித்தல்.
- ❖ ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970–ன் கீழ் பதிவுச்சான்று வழங்குதல் மற்றும் உரிமம் வழங்குதல்.
- ❖ மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979 –ன் கீழ் பதிவுச்சான்று வழங்குதல் மற்றும் உரிமம் வழங்குதல்.

மேலும், தேசிய அளவில் தமிழகத்தை முதலீடு செய்வதற்கு உகந்த மாநிலமாக தேர்ந்தெடுக்க பல்வேறு சட்டங்களின் கீழ் அலுவலர்களால் வழங்கப்படும் ஒப்புதல்களை குறிப்பிட்ட காலவரையறைக்குள் வழங்க ‘தமிழ்நாடு தொழில் எளிதாக்கும் சட்டம், **2017**’ இயற்றப்பட்டுள்ளது. தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் உட்பட பல்வேறு துறைகளில் வழங்கப்படும்

ஒப்புதல்கள் ஒற்றைசாளர முறைப்படி வழங்க இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. தொழிற்சாலை உரிமம், வரைபட ஒப்புதல் போன்ற சேவைகள் வழங்கப்படுவதற்கான கால வரம்பு கட்டாயமாக்கப்பட்டு இச்சட்டத்தின் பிரிவு 12–ன் படி ‘அனுமதி வழங்கியதாக கருதும்’ விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வு முறை**

ஆய்வுகளில் வெளிப்படைத்தன்மையை மேலும் அதிகரிக்கும் விதமாக இடர் அளவீட்டின் அடிப்படையில் கணினி மூலம் தெரிவு செய்யப்பட்ட ஆய்வுகள், ஆய்வு அலுவலர்கள் ஒதுக்கீடு செய்தல் போன்ற சீர்திருத்தங்கள் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளன.

எளிமைப்படுத்தப்பட்ட தொழில் தொடங்கும் நடைமுறையை ஊக்குவிக்கும் வகையில் இந்த ஆய்வு முறையில் கீழ்காணும் கொள்கைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

(i) ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலை / கட்டுமான நிறுவனத்தில் பல்வேறு தொழிலாளர் சட்டங்களின்

கீழ் ஒரே சமயத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ii) ஒரே அலுவலர் ஒரே தொழிற்சாலை/ கட்டுமான நிறுவனத்தை இரண்டு முறை தொடர்ச்சியாக ஆய்வு மேற்கொள்ளக்கூடாது.

(iii) அனைத்து வகையான ஆய்வுகளுக்குமான ஆய்வறிக்கை ஆய்வு முடிந்த 24 மணிநேரத்திற்குள் துறை மற்றும் சம்பந்தப்பட்ட தொழிற்சாலை/ கட்டுமான நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

தொழிற்சாலைகளில் மேற்கொள்ளப்படும் உற்பத்தி முறையின் அடிப்படையிலும் அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் அதிக அபாயகரமான, நடுத்தர அபாயகரமான மற்றும் குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அதிக அபாயகரமான தொழிற்சாலைகள் வருடத்திற்கு ஒரு முறையும், நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையும், குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகள் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

காலமுறை ஆய்வுகளுடன் சிறப்பு, விடுமுறை மற்றும் சோதனை ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு தொழிலாளர்களது பாதுகாப்பு, உடல்நலம் மற்றும் நல வசதிகள் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவது சிறப்பாக கண்காணிக்கப்படுகிறது.

2017-18 ஆம் ஆண்டில் தொழிற்சாலைகளில் 37,027 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நல வசதிகளை உறுதி செய்யப்பட்டுள்ளன.

**சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம்**

(i) **சுயசான்றிதழ் திட்டம்**

நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகளுக்கும், குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகளுக்கும் சுய சான்றிதழ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் வரும் குறைந்த அபாயகரமான தொழிற்சாலைகளுக்கு ஆய்விலிருந்து விலக்களிக்கப்படும். இத்திட்டத்தின் கீழ் வரும் நடுத்தர அபாயகரமான தொழிற்சாலைகள் குறிப்பற்ற முறையில் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படும்.

### (ii) **எளிதாக்கப்பட்ட ஒருங்கிணைந்த ஆண்டறிக்கைகள்**

தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு பயனளிக்கும் விதமாகவும் நடைமுறைகளை எளிதாக்கவும், தமிழ்நாடு தொழிற்சாலை விதிகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள், 1950 விதி–100-ன் படி தொழிற்சாலைகள் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கையினை படிவம் எண் 22-ல் சமர்பிக்க வேண்டும். பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் ஆண்டறிக்கைகள் இணைய வழியாக ஒரே படிவத்தில் சமர்ப்பிக்கப்படுவதால் பல்வேறு சட்டங்களின் கீழ் தனித்தனியாக ஆண்டறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

**பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் பராமரிக்கப்பட வேண்டிய எளிதாக்கப்பட்ட ஒருங்கிணைந்த பதிவேடுகள்**

தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் பல்வேறு பதிவேடுகள் மற்றும் படிவங்கள் பராமரிக்கப்படுவதால் ஏற்படக்கூடிய பணிச்சுமைகளை குறைக்கும் வகையில், கீழ்கண்ட **6** மாநில தொழிலாளர் நல சட்டங்களின் கீழ் வரையறுக்கப்பட்ட 27 பதிவேடுகள் நீக்கம் செய்யப்பட்டு தமிழ்நாடு பதிவேடுகள் பராமரித்தல் எளிதாக்கும் தொழிலாளர்

சட்ட விதிகள், 2018–ன் கீழ் புதிதாக 5 பதிவேடுகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன.

i. தமிழ்நாடு தொழிற்சாலைகள் விதிகள், 1950
ii. தமிழ்நாடு கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகள், 2006
iii. தமிழ்நாடு ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) விதிகள், 1975
iv. மாநிலம் விட்டு மாநிலம் இடம்பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) (தமிழ்நாடு) விதிகள், 1983
v. குறைந்தபட்ச ஊதியம் (தமிழ்நாடு) விதிகள், 1953
vi. தமிழ்நாடு சம்பளபட்டுவாடா விதிகள், 1937

### 2.4. பட்டாசு தொழிற்சாலை ஆய்வுகள்

பட்டாசு உற்பத்தியில் கையாளப்படும் அனைத்து இரசாயனங்கள், இடைப்பட்ட உற்பத்தி பொருட்கள், இறுதியாக தயாரிக்கப்படும் பட்டாசுகள் ஆகியவை மிகவும் அபாயகரமான தன்மையுடையவை என்பதால் உரிய பாதுகாப்பு வழிமுறைகள் கடைபிடிக்கப்படாவிடில், அவை தொழிலாளர்களின் உயிருக்கும் பாதுகாப்பிற்கும் ஊறு விளைவிப்பதாக அமைந்து விடும். எனவே, பட்டாசு

தொழிற்சாலைகளில் தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு காலமுறைதோறும் ஆய்வு செய்யப்பட்டு பட்டாசு தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கும், தொழிலாளர்களுக்கும் பாதுகாப்பான செயல்முறைகள் மற்றும் கையாளும் வழிமுறைகள் குறித்து கற்றுத் தரப்படுகிறது. 2017–18–ஆம் ஆண்டில், விதி மீறல்கள் காணப்பட்ட பட்டாசு தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு எதிராக 429 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றங்களால் ரூ.4,80,000/– அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டத்தில் பண்டிகையை ஒட்டிய காலங்களில் மாநிலத்தின் மற்ற பகுதியிலிருக்கும் இணை இயக்குநர்களைக் கொண்ட சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டு அம்மாவட்டத்திலுள்ள பட்டாசு தொழிற்சாலைகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன. இக்குழு ஆய்வுகளின் போது பட்டாசு தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் அபாயகரமான பொருட்களை பாதுகாப்பாக சேமிப்பது மற்றும் கையாளுவது குறித்து கண்காணிக்கப்படுகிறது. விதி மீறல்கள் காணப்படும் தொழிற்சாலைகளின் நிர்வாகத்தினர் மீது சட்ட ரீதியான நடவடிக்கை

மேற்கொள்ளப்பட்டு, அத்தொழிற்சாலைகளில் கண்டறியப்படும் கடும் விதி மீறல்களுக்கு உற்பத்தி தடையாணைகள் வழங்கப்படுகின்றன. 2017–18–ஆம் ஆண்டில், 714 குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பட்டாசு தொழிற்சாலைகளுக்கான சிறப்பு நடமாடும் கண்காணிப்பு குழு**

பட்டாசு தொழிற்சாலைகள் அபாயகரமானவை மட்டுமின்றி அதிக எண்ணிக்கையிலான தொழிலாளர்களை கொண்டவையாகும். விருதுநகர் மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையில் பட்டாசு தொழிற்சாலைகள் இயங்கி வருவதால், அத்தொழிற்சாலைகளில் பாதுகாப்பு வழிமுறைகளை கூடுதல் முனைப்புடன் நடைமுறைப்படுத்தி, பாதுகாப்பான பணி நிலைமைகளை உறுதி செய்யும் வகையில் அத்தொழிற்சாலைகளை ஆய்வு செய்ய தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார கூடுதல் இயக்குநர் தலைமையில், பிரத்தியேகமாக ஒரு நடமாடும் கண்காணிப்பு குழு உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழு தொழிலாளர்களது பணி பாதுகாப்பை உறுதி செய்ய தொழிற்சாலைகளில் திடீர் ஆய்வுகளை மேற்கொள்வதோடு அங்குள்ள தொழிலாளர்கள்

மற்றும் நிர்வாகத்தினருக்கு பாதுகாப்புடன் பணிபுரியும் வழிமுறைகள் குறித்து எடுத்துரைக்கிறது.

நடமாடும் கண்காணிப்பு குழு உருவாக்கப்பட்ட பின்னர், பட்டாசு தொழிற்சாலை நிர்வாகத்தினர் மற்றும் தொழிலாளர்கள், பாதுகாப்பு விதிமுறைகளை நன்கு அறிந்துள்ளனர். **2017–18–**ஆம் ஆண்டில், **329** ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு நிர்வாகத்தினர் மீது **36** வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு, நீதிமன்றங்களால் ரூ.**2,45,000/–** அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

## 2.5. பட்டாசு தொழிற்சாலை தொழிலாளர்களுக்கான பயிற்சி மையம்

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் பெரும்பாலும் படிப்பறிவு இல்லாதவர்களாகவும், இரசாயனங்களை பாதுகாப்பாக கையாளும் முறை, இரசாயனங்களின் கூறுகள் குறித்து அறியாதவர்களாகவும் உள்ளதால் கடும் விபத்துகள் மற்றும் மரண விபத்துகள் நிகழ்கின்றன. பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஃபோர்மேன்கள் / மேற்பார்வையாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பட்டாசு தயாரிப்பின் போது கடைபிடிக்க வேண்டிய பாதுகாப்பு செயல்முறைகள் குறித்த விழிப்புணர்வை

ஏற்படுத்தும் வகையில் சிவகாசியில் ஒரு பாதுகாப்பு பயிற்சி மையம் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் கீழ்கண்ட பாதுகாப்பு அம்சங்கள் குறித்த சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

- இரசாயனங்களின் கூறுகள்
- இரசாயனங்களை கையாளுதல்
- இரசாயனங்களின் கலவை
- இரசாயனங்களின் வேதி வினை
- பாதுகாப்பான செயல்முறைகள்

இப்பயிற்சி மையத்தில் இதுவரை 33 குழுக்களுக்கு ஒரு மாத பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு அதன் மூலம் 922 ஃபோர்மேன்கள் பயனடைந்துள்ளனர். 2017–18–ஆம் ஆண்டில், 20 ஒரு நாள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு, 5,997 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

## 2.6. தொழிற்சாலைகளில் குழந்தை தொழிலாளர் முறை அகற்றுதல்

தொழிற்சாலைகள் சட்டம், 1948, பிரிவு 67 மற்றும் குழந்தை மற்றும் வளரிளம் தொழிலாளர் (தடை செய்தல் மற்றும் முறைபடுத்துதல்) சட்டம், 1986-ல் வரையறுக்கப்பட்டவாறு தொழிற்சாலைகளில் குழந்தைத்

தொழிலாளர் பணியமர்த்தப்படுவதை தடுக்கும் வகையில், இவ்வியக்கக அலுவலர்களால் காலமுறைப்படி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், ஒவ்வொரு மாதமும் வருவாய் துறை, காவல் துறை மற்றும் தேசிய குழந்தை தொழிலாளர் திட்ட அலுவலர்களுடன் இணைந்து குழு ஆய்வுகளும் நடத்தப்படுகின்றன. 2017–18–ஆம் ஆண்டில் 1,204 குழு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, சட்ட விதிகளை மீறி செயல்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினர் மீது நீதிமன்றங்களில் 21 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. விதிகளை மீறி செயல்பட்ட தொழிற்சாலை நிர்வாகத்தினர் மீது ரூ.8,13,900/– அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

## 2.7. இடர்தரும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகள்

ஊறுவிளைவிக்கும் மூலப்பொருட்கள் மற்றும் இரசாயனங்களை பயன்படுத்தும் தொழிற்சாலைகளில் அவற்றை சேமித்து வைக்கும் மற்றும் கையாளும் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உடல்நலத்திற்கு ஊறு விளைவிக்கக் கூடியதாகவும் சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படுத்தக் கூடியதாகவும் விளங்கும் தொழிற்சாலைகள் இடர்தரும் செயல்முறை கொண்ட

தொழிற்சாலைகள் என தொழிற்சாலைகள் சட்டம் **1948** (திருத்தப்பட்ட சட்டம் **1987)** பிரிவு 2(cb)-ன் கீழ் வகைபடுத்தப்பட்டுள்ளன. தொழிற்சாலைகள் சட்டம், பிரிவு 2(cb)-ன் முதல் அட்டவணையில் 29 செயல்முறைகள் இடர்தரும் தொழில் செயல்முறைகளாக பட்டியலிடப்பட்டுள்ளன.

## பெரும்விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள்

ஊறுவிளைவிக்கும் இரசாயனங்களின் உற்பத்தி, சேமிப்பு மற்றும் இறக்குமதி விதிகள், **1989**, அட்டவணை **3–**ல் குறிப்பிட்டுள்ள இரசாயனங்களை அதிகபட்ச அளவுக்கு மேல் சேமித்து மற்றும் கையாளும் தொழிற்சாலைகள் பெரும்விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள் என வகைபடுத்தப்பட்டுள்ளது. **31.03.2018** அன்றைய நிலையில், தமிழ்நாட்டில் **153** தொழிற்சாலைகள் பெரும் விபத்து இடர்தரும் தொழிற்சாலைகள் என கண்டறியப்பட்டுள்ளன.

**2017–2018–**ஆம் ஆண்டில், **43** பெரும் விபத்து இடர்தரும் தொழிற்சாலைகளிடமிருந்து உள்வளாக அவசரகால ஆயத்த நிலை திட்டங்கள் இவ்வியக்ககத்தில் பெறப்பட்டு அவற்றில் **26** திட்டங்கள் சில நிபந்தனைகளுக்கு

உட்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. அவசர காலகட்டத்தில் ஏற்படக் கூடிய நடைமுறை பிரச்சினைகளை சரியாக அளவீடு செய்யும் பொருட்டு, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களின் மேற்பார்வையில் இத்தொழிற்சாலைகளில் மாதிரி ஒத்திகைகள் காலமுறைப்படி நடத்தப்படுகின்றன. 2017–18–ஆம் ஆண்டில், 142 மாதிரி ஒத்திகைகள் நடத்தப்பட்டுள்ளன.

## 2.8. மனை மதிப்பீட்டு குழு

இடர்தரும் செயல்முறைகளைக் கொண்ட தொழிற்சாலைகள் துவக்குவதற்கு அல்லது விரிவாக்கம் செய்வதற்கு அனுமதி கோரி தொழிற்சாலை நிர்வாகத்தினரால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மீது அரசுக்கு ஆலோசனை வழங்க, தொழிற்சாலைகள் சட்டம், 1948 (திருத்தப்பட்ட சட்டம் 1987) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ‘மனை மதிப்பீட்டுக் குழு’ ஒன்று மாநில அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவானது விண்ணப்பங்களை கூர்ந்தாய்வு செய்வதோடு, பாதுகாப்பான சூழ்நிலை மற்றும் பாதுகாப்பான பணி செயல்முறைகளுடன் துவக்க நிலையிலிருந்தே இயங்குவதற்கு உரிய வழிமுறைகள் குறித்து இடர்தரும் செயல்முறைகளைக் கொண்ட

தொழிற்சாலைகளுக்கு அறிவுரை வழங்குகிறது. 2017–18–ஆம் ஆண்டில், 11 விண்ணப்பங்கள் மனை மதிப்பீட்டு குழுவால் பரிசீலனை செய்யப்பட்டுள்ளன.

## தொழிற்சாலைகளில் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு மேம்பாடு குறித்த செயல்பாடுகள்

### உடல்நல மேம்பாட்டு செயல்பாடுகள்

இவ்வியக்ககத்தில் ஒரு தலைமை மருத்துவ அலுவலர் மற்றும் எட்டு உதவி மருத்துவ அலுவலர்களுடன் இயங்கி வரும் மருத்துவ பிரிவு, அபாயகரமான மற்றும் இடர்தரும் செயல்முறைகளில் ஈடுபடும் தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் உணவகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு காலமுறைப்படி மருத்துவ பரிசோதனை செய்து, மருத்துவ அறிவுரைகள் மற்றும் இதர தடுப்பு நடவடிக்கைகள் குறித்து நிர்வாகத்தினருக்கு ஆலோசனைகள் வழங்கும் பணியை மேற்கொண்டு வருகிறது. தொழிற்சாலைகளில் பணிபுரியும் வளரிளம் பருவ தொழிலாளர்களுக்கு மருத்துவ அலுவலர்களால் மருத்துவ தகுதிச்சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. குழந்தை தொழிலாளர்களின் வயதினை உறுதி செய்திடும் பொருட்டு குழந்தை தொழிலாளர் ஆய்வுக் குழுவுடன் மருத்துவ

அலுவலர்கள் செல்கின்றனர். 2017–18–ஆம் ஆண்டில் மருத்துவ அலுவலர்கள் அபாயகரமான மற்றும் இடர்தரும் செயல்முறைகள் கொண்ட தொழிற்சாலைகளில் பணிபுரியும் 66,843 தொழிலாளர்களுக்கும், உணவகங்களில் பணிபுரியும் 9,879 தொழிலாளர்களுக்கும் மருத்துவ சான்றிதழ்களை வழங்கி உள்ளனர். மேலும், 29,714 வளரிளம் பருவத்தினருக்கு உடல் தகுதி சான்றிதழ்களையும் வழங்கியுள்ளனர்.

## இரைச்சலின் அளவினை கண்காணித்தல்

தொழிற்சாலைகளில் நிலவும் அதிகப்படியான இரைச்சலால் தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய உடல்நலக் கேடுகளைத் தடுக்க இவ்வியக்ககம் சீரிய முயற்சிகளை எடுத்து வருகிறது. ஒலி அளப்பான் மூலம் இரைச்சலை அளவிட்டு, தொழிலாளர்களை அதிகப்படியான இரைச்சலின் பாதிப்பிலிருந்து பாதுகாத்திட இவ்வியக்ககம் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. ஆய்வுகளின் போது இது சம்பந்தமாக தொழிற்சாலை நிர்வாகத்தினருக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்படுவதுடன், தேவைப்படும் நிகழ்வுகளில் சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு**

பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள், பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள், பாதுகாப்பு ஒத்திகைகள் போன்ற பாதுகாப்பு மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் இவ்வியக்கக அலுவலர்கள் விபத்துக்களை குறைக்க தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

சென்னை, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மண்டலங்களில் மூன்று பாதுகாப்பு பிரச்சாரக்குழுக்கள் இவ்வியக்ககத்தால் உருவாக்கப்பட்டு, இக்குழுக்கள் இரசாயனம், பட்டாசு, தோல்பதனிடும் தொழிற்சாலைகள், வெளுத்தல் மற்றும் சாயப்பட்டறைத் தொழிற்சாலைகளுக்கு காலமுறையடிப்படையில் சென்று அத்தொழிற்சாலைகளின் பாதுகாப்பு வழிமுறைகளை ஆய்வு செய்து, அத்தொழிற்சாலைகளில் எதிர்நோக்கக்கூடிய திடீர் அபாயங்கள் குறித்தும் விபத்துகளைத் தவிர்க்க அத்தொழிற்சாலைகளில் கடைபிடிக்க வேண்டிய போதுமான பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தும் நிர்வாகத்தினர் மற்றும் தொழிலாளர்களுக்கு எடுத்துரைக்கின்றன. 2017–18–ஆம் ஆண்டில், இக்குழுக்களால் 91 பாதுகாப்பு பிரச்சாரங்கள் நடத்தப்பட்டு 4,090 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**பாதுகாப்பு பயிற்சி**

இவ்வியக்ககக அலுவலர்களால் தொழிற்சாலை வளாகத்திலேயே பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் காலமுறைப்படி நடத்தப்படுகின்றன. 2017–18–ஆம் ஆண்டில், 525 பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு 25,927 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

பாதுகாப்பு மேம்பாடு ஏற்படுத்தும் செயல்பாடுகளில் ஈடுபட்டு, பாதுகாப்பு கருத்தரங்குகளை நடத்தி வரும் தேசிய பாதுகாப்பு குழுமம், தேசிய உற்பத்தி குழுமம் போன்ற பிற அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்களை ஒருங்கிணைத்து, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் தொழிற்சாலை நிர்வாகத்தினர் மற்றும் அனைத்து தரப்பு தொழிலாளர்களிடையே பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. 2017–18 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஆறு கருத்தரங்குகளால் 1,445 தொழிலாளர்கள் பயனடைந்துள்ளனர்.

**அழுத்தக்கலன் பாதுகாப்பினை உறுதி செய்தல்**

பல்வேறு தொழிலாளர் நல சட்டங்களை அமல்படுத்துவதோடு மட்டுமல்லாமல் தொழிற்சாலைகளில்

நிறுவப்பட்டுள்ள அழுத்தக்கலன்கள் பாதுகாப்பாக செயல்படுவதையும் இவ்வியக்கக அலுவலர்கள் உறுதி செய்கின்றனர். இந்திய கொதிகலன்கள் சட்டத்தின் கீழ்வரும் நீராவி கொதிகலன்களைத் தவிர்த்து, வாயு மண்டல காற்று அழுத்தத்திற்கு மேல் (above atmospheric pressure) செயல்படும் அனைத்து அழுத்தக்கலன்களிலும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வெளிப்புற சோதனையும், ஆண்டுக்கு ஒரு முறை உட்புற சோதனையும் அல்லது இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை நீரழுத்த சோதனையும் அல்லது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நுண்ணொலி சோதனையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2017–18–ஆம் ஆண்டில் மொத்தம் 1,07,696 வெளிப்புற, 1,918 உட்புற, 16,301 நீர் அழுத்த மற்றும் 4,551 நுண்ணொலி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டம்**

மாண்புமிகு உச்சநீதிமன்ற ஆணையின்படி, தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்தில் மரணமடையும் தொழிலாளர்களின் வாரிசுதாரர்களுக்கு நிவாரணமாக ரூ.50,000/– வழங்க வகை செய்யும் புதிய தொகுப்பு தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டமானது தமிழக

அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பிரிமியத் தொகை பல்வேறு காப்பீட்டு நிறுவனங்கள், பட்டாசு மற்றும் தீப்பெட்டி உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் ஆகியோருடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் நிர்ணயம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு தொழிலாளிக்கும் பிரிமியம் செலுத்த வேண்டியது நிர்வாகத்தின் பொறுப்பு என்பது சட்டமாக்கப்பட்டுள்ளது. தற்போது, தி நியூ இந்தியா அஷ்ூரன்ஸ் நிறுவனம், திருத்தங்கல் என்ற காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் தீப்பெட்டி மற்றும் பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான காப்பீடு புதுப்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிவாரணமானது தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் (E.S.I Scheme) அல்லது பணியாளர் இழப்பீட்டு சட்டத்தின் கீழ் வழங்கப்படும் நிவாரணங்களுடன் கூடுதலாக வழங்கப்படுவதாகும்.

இந்நிவாரணத் தொகையினை ரூ.50,000/– லிருந்து ரூ.1 இலட்சமாக அடுத்த காப்பீடு காலத்திலிருந்து உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**பாதுகாப்பு விருதுகள்  வழங்கும் திட்டம்**

**மாநில பாதுகாப்பு விருதுகள்**

விபத்து தடுப்பில் சிறப்பு முயற்சிகளை மேற்கொண்டு தொழிலாளர்களிடையே பாதுகாப்பு உணர்வை மேம்படுத்தி, சிறந்த பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றி விபத்தில்லா நிலையை எட்டும் நோக்குடன் செயல்படும் தொழிற்சாலை நிர்வாகத்தினரை ஊக்குவித்து அவர்களைப் பெருமைப்படுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும், மாநில பாதுகாப்பு விருதுகள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் விபத்து நிகழ்வுகளைக் குறைக்கும் விதமாக செயல்படும் பல்வேறு வகை தொழிற்சாலைகளுக்கு ஆண்டுதோறும் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளாக ஒவ்வொரு பிரிவிலும் தலா 90 கேடயங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

**உயர்ந்த உழைப்பாளர் விருதுகள்**

தொழிற்சாலைகளில் உற்பத்தி திறனை உயர்த்துதல், பணி சூழலை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பு தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றில் சிறந்த ஆலோசனைகளை வழங்கும் தொழிலாளர்களை ஊக்குவிக்கும் வண்ணம், ஆண்டுதோறும் ‘தமிழக அரசின் உயர்ந்த உழைப்பாளர்

விருதுகள்' வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் தொழிலாளர்களின் பங்களிப்பை அதிகரிக்கும் விதமாக, 2012–ஆம் ஆண்டு முதல் இவ்விருது பெறும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 24–லிருந்து 43-ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**2.9. கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம், 1996 மற்றும் தமிழ்நாடு விதிகள், 2006 மற்றும் அதனைச் சார்ந்த தொழிலாளர் நல சட்டங்களை கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் அமலாக்கம் செய்தல்**

கட்டுமான பணியிடங்களில், கட்டுமான தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு மற்றும் நல வசதிகளை உறுதி செய்திடும் வகையில், கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996 மற்றும் தமிழ்நாடு கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) விதிகள் **2006**, தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கக அலுவலர்களால் **2010**–ஆம் ஆண்டு முதல் அமலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்டம் மற்றும் விதிகளை அமலாக்கம் செய்வதோடு கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழில்களில் ஈடுபட்டுள்ள நிர்வாகத்தினர், ஒப்பந்ததாரர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி அளிப்பதற்கு இவ்வியக்ககத்தில் தனிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டு, 2013-ஆம் ஆண்டு முதல் இப்பிரிவு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

இவ்வியக்ககத்தின் கீழ் தனிப்பிரிவு உருவாக்கப்பட்ட பின்பு, **8,850** கட்டுமான நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, கட்டுமான தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் நல வசதிகள் உறுதி செய்யப்பட்டுள்ளது.

**2017–18–**ஆம் ஆண்டில், **1,202** கட்டுமான நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. **2,077** ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. சட்டவிதிகளை மீறிச் செயல்பட்ட நிறுவனங்கள் மீது 158 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றங்களால் ரூ.**3,29,000/–** அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது.

**கட்டடம் மற்றும் இதர கட்டுமான பணியிடங்களில் எளிமையாக்கப்பட்ட தொழில் தொடங்கும் நடைமுறைகளை ஊக்குவித்தல்**

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககத்தில் தொழில் முனைவோருக்கு சுலபமாக தொழில் தொடங்கும் வசதிகளை (Ease of Doing Business) வழங்கும் பொருட்டு இணையதளம் வழியாக கட்டணம் செலுத்தும் வசதியுடன் பிரத்தியேக வலைதளம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் பல்வேறு தொழிலாளர் சட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஒப்புதல்கள் இவ்வியக்கக அலுவலர்களின் மின்கையொப்பத்துடன் (Digital Signature) பெறும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இவ்வியக்ககத்தின் கீழ்கண்ட சேவைகளை https://dish.tn.gov.in என்ற வலைதளத்தின் மூலம் தற்போது பெற இயலும்.

- கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1996–ன் கீழ் கட்டுமான நிறுவனங்களை பதிவு செய்தல்

- ஒப்பந்த தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டம், 1970-ன் கீழ் பதிவுச்சான்று வழங்குதல் மற்றும் உரிமம் வழங்குதல்.

❖ மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர்கள் (பணி முறைப்படுத்துதல் மற்றும் பணி நிலைமைகள்) சட்டம், 1979–ன் கீழ் பதிவுச்சான்று வழங்குதல் மற்றும் உரிமம் வழங்குதல்.

**ஆய்வு முறை**

கட்டடம் மற்றும் இதர கட்டுமானங்களில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளை முறைப்படுத்தும் விதமாக கட்டுமான பணித்தன்மையின் அடிப்படையிலும் அதில் பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் கட்டுமான பணியிடங்கள் அதிக அபாயகரமான, நடுத்தர அபாயகரமான மற்றும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**அதிக அபாயகரமான கட்டுமானங்கள்**

கட்டுமான பணியிடங்களில் 500 தொழிலாளர்களுக்கு மேல் பணியமர்த்தப்படும் கட்டுமானங்கள், 5 மற்றும் அதற்கு மேற்பட்ட தளங்கள் கொண்ட கட்டுமானங்கள், இரயில்வே கட்டுமானங்கள், மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மான கட்டுமான பணிகள், அணை கட்டுமானம் போன்ற அபாயங்கள் நிறைந்த அனைத்து கட்டுமானங்களும் அதிக அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளது.

**நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள்**

**50** முதல் **500** தொழிலாளர்கள் வரை பணியமர்த்தப்படும் கட்டுமானங்கள் மற்றும் **2** லிருந்து **5** தளங்கள் வரை கொண்ட கட்டுமானங்கள் நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளது.

**குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள்**

அதிக அபாயகரமான கட்டுமானங்கள் மற்றும் நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் என வகைப்படுத்தப்பட்ட கட்டுமானங்களைத் தவிர மற்ற அனைத்து கட்டுமானங்களும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் என வகைபடுத்தப்பட்டுள்ளது.

அலுவலரின் ஆய்வு அட்டவணை இணையவழியாக குறிப்பற்ற முறையில் தேர்வு செய்யப்படும். அதிக அபாயகரமான கட்டுமானங்கள் வருடத்திற்கு ஒருமுறையும், நடுத்தர அபாயகரமான கட்டுமானங்கள் இரண்டு வருடங்களுக்கு ஒரு முறையும் குறைந்த அபாயகரமான கட்டுமானங்கள் மூன்று வருடங்களுக்கு ஒரு முறையும் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

**சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம்**

**சுய சான்றிதழ் திட்டம்**

'சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டம்' கீழ்கண்ட கட்டுமான நிறுவனங்களுக்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அ. நடுத்தர அபாயகரமான கட்டுமான நிறுவனங்கள்

ஆ. குறைந்த அபாயகரமான கட்டுமான நிறுவனங்கள்

சுய சான்றிதழ் மற்றும் ஒருங்கிணைந்த ஆண்டறிக்கை திட்டத்தின் கீழ் வரும் குறைந்த அபாயகரமான கட்டுமான நிறுவனங்களுக்கு ஆய்விலிருந்து விலக்களிக்கப்படும். மேற்படி திட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நடுத்தர அபாயகரமான கட்டுமான நிறுவனங்கள் மூன்று வருடங்களுக்கு ஒரு முறை ஆய்வு செய்யப்படும். எனினும் இத்தகைய கட்டடம் மற்றும் இதர கட்டுமான நிறுவனங்களில் புகார், விபத்து அல்லது பிற அவசர நிகழ்வுகளில் இயக்குநர் அவர்களின் ஆணைக்கிணங்க ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

**கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு மேம்பாடு**

கட்டுமான இடங்கள், அதிகப்படியான தொழிலாளர்கள் செறிந்துள்ளதாகவும், கல்வியறிவு இல்லாத மற்றும் வெளி மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்களை அதிகளவில் பணியமர்த்தும் இடங்களாக இருப்பதாலும், கட்டட நிறுவனத்தினரால் போதுமான பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றப்படாததனாலும் விபத்துக்கள் நிகழ வாய்ப்புள்ள இடங்களாக உள்ளன. கட்டுமான பணிகளில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இவ்வியக்கக கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்கள் சட்ட அமலாக்கப் பிரிவு துணை இயக்குநர்களால் ஒவ்வொரு மாதமும் தலா இரண்டு பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகின்றன. பிற மாநில தொழிலாளர்களுக்கு அவர்களது தாய்மொழியிலேயே பாதுகாப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

**2017–18**–ஆம் ஆண்டில், **10,852** தொழிலாளர்கள் பயன்பெறும் வகையில் **115** பாதுகாப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் பாதுகாப்பு விழிப்புணர்வு

மேம்படுத்தப்பட்டு விபத்துகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது.

## 2.10. சிறப்பு முயற்சிகள்

### நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களுக்கான இணைய கண்காணிப்பு மையம் (Online Monitoring Centre)

தொழிற்சாலைகளில் வெளியாகும் நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களைக் கண்காணிக்க தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அலுவலகத்தில் ஒரு இணைய கண்காணிப்பு மையம் உருவாக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்களின் அடர்த்தி, நிகழ்நேர மதிப்பீட்டின்படி இணையதளம் மூலம் இக்கண்காணிப்பு மையத்தில் கண்காணிக்கப்படுகிறது. இது போன்ற தொடர் கண்காணிப்பின் மூலம் பணி இடங்களில் நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்கள் அதிக அளவில் வெளியேறும் நேர்வுகளில் அவற்றைக் கண்டறிந்து, தொழிலாளர்கள் மற்றும் அருகில் வசிக்கும் பொதுமக்களின் உடல்நலத்தை பாதுகாக்கும் வகையில் தொழிற்சாலை நிர்வாகத்தினரால் உடனடி தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க இயலும். இக்கண்காணிப்பு மையத்துடன் ஊறு

விளைவிக்கும் தொழிற்சாலைகள் இணைக்கப்பட்டு அத்தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் நச்சு மற்றும் தீங்கு விளைவிக்கும் வாயுக்கள் நிகழ்நேர மதிப்பீட்டின்படி கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**கட்டுமான சட்ட அமலாக்க பிரிவு அலுவலர்களுக்கு மடிக்கணினிகள்**

இவ்வியக்கக கட்டடம் மற்றும் இதர கட்டுமான சட்ட அமலாக்கப்பிரிவு அலுவலர்களுக்கு 30 மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

**கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வு**

கட்டுமான தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்த ஏதுவாக பாதுகாப்பு குறும்படங்கள், முன்மாதிரி வடிவங்கள், மற்றும் பாதுகாப்பு தகவல் பலகைகள் தயாரிக்கப்பட்டு, கட்டடம் மற்றும் இதர கட்டுமான தொழிலாளர்களின் பணியிட பாதுகாப்பிற்கு உதவும் பொருட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**பட்டாசு தொழிற்சாலைகளில் விபத்துகளை தடுக்க பாதுகாப்பு குறும்படங்கள்**

பட்டாசு தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், உரிமையாளர்கள் மற்றும்

விற்பனையாளர்களுக்கு பாதுகாப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பாதுகாப்பு குறும்படங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**பல்வகை வாயு பகுப்பாய்விகள்**

தொழிற்சாலைகளில் வெளியாகும் விஷ வாயுக்களை அளவிடும் பொருட்டு தொழிற்சாலைகள் ஆய்வின் போது அலுவலர்கள் உடன் எடுத்துச்செல்லக்கூடிய பல்வகை வாயு பகுப்பாய்விகள் வாங்கப்பட்டுள்ளன.

# 3. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

## வேலைவாய்ப்பு பிரிவு

வேலைவாய்ப்புத் துறையின் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் யாவும், வேலைநாடுநர்களுக்கு உரிய வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளை வழங்கும் தொழில்நெறி வழிகாட்டும் மையங்களாக புதிய பரிமாணத்துடன் செயல்பட்டு வருகின்றன. வேலைநாடுநர்களைப் பதிவு செய்வதோடு அவர்களின் கல்வித்தகுதி, வயது, பதிவு மூப்பு மற்றும் இன சுழற்சி ஆகியவற்றின் அடிப்படையில் வேலை அளிப்போரின் தேவைக்கேற்ப பரிந்துரைப்பது வேலைவாய்ப்பு அலுவலகங்களின் முதன்மை பணியாகும். வேலை நிலவர தகவல்கள் தொடர்பான அனைத்து புள்ளி விவரங்களையும் திரட்டுதல் மற்றும் தொகுத்தல், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு உதவித் தொகை வழங்குதல், வேலைநாடுநர்களுக்கு உரிய தொழில்நெறி வழிகாட்டுதல் ஆகியன இத்துறையின் இதர பணிகளாகும். மேலும் ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் தனியார் துறை பணியமர்த்தல் உதவிப் பிரிவு ஏற்படுத்தி, உரிய கால இடைவெளிகளில் தனியார் துறை வேலையளிப்போரும்

வேலைநாடுநர்களும் சந்திக்க ஏற்பாடு செய்து பெருமளவில் தனியார் துறை வேலைவாய்ப்புகள் கிடைக்கும் வகையிலான ஒரு புதிய முயற்சி இத்துறையால் எடுக்கப்பட்டது.

### 3.1. நிர்வாக அமைப்பு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையானது ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை அவர்களின் தலைமையில் இயங்கி வருகிறது. வேலைவாய்ப்பு பிரிவில் ஆணையரகத்தில் இரு இணை இயக்குநர்களும், மண்டலங்களில் நான்கு மண்டல இணை இயக்குநர்களும் உள்ளனர். இவர்களுக்கு உதவியாக 12 துணை இயக்குநர்கள், 16 உதவி இயக்குநர்கள் மற்றும் 48 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர்.

வேலைவாய்ப்பு பிரிவின் கீழ் செயல்படும் பல்வேறு அலுவலகங்களின் விவரங்கள்:—

| அலுவலகத்தின் பெயர் | தலைமை அலுவலர் | அலுவலகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மண்டல இணை இயக்குநர் அலுவலகம், சென்னை, மதுரை, திருச்சி, கோவை | மண்டல இணை இயக்குநர் (வேலைவாய்ப்பு) | 04 |

| அலுவலகத்தின் பெயர் | தலைமை அலுவலர் | அலுவலகங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் (மாநிலத்தில் உள்ள 32 மாவட்டங்களிலும்) | துணை இயக்குநர்/ உதவி இயக்குநர்/ மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் | 32 |
| தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகங்கள், சென்னை மற்றும் மதுரை | துணை இயக்குநர்/ உதவி இயக்குநர் | 02 |
| மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை | உதவி இயக்குநர் | 01 |
| மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில்நுட்பம்), சென்னை | மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் | 01 |
| மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (தொழில் திறனற்றோர்), சென்னை | மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் | 01 |
| பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம், உதகை | தொழில் நெறி வழிகாட்டும் அலுவலர் (மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் பதவிக்கு இணையானது) | 01 |

| **அலுவலகத்தின் பெயர்** | **தலைமை அலுவலர்** | **அலுவலகங்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம், கடலூர் / திருநெல்வேலி / திருச்சிராப்பள்ளி / கோயம்புத்தூர் மற்றும் வேலூர் | உதவி இயக்குநர்/மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் | 05 |

## 3.2. மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களின் செயல்பாடுகள்

- ❖ பதிவு செய்தல், புதுப்பித்தல், வேலைநாடுநர்களின் கூடுதல் விவரம் ஆகியவற்றை நேரடியாகவும், இணையதளத்தின் வாயிலாகவும் உள்ளீடு செய்தல்
- ❖ பொதுத்துறை மற்றும் தனியார் துறை பணி காலியிடங்களுக்கு வேலைநாடுநர்களை பரிந்துரைத்தல்
- ❖ வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு தொழில் நெறி வழிகாட்டுதல்
- ❖ நூலகத்துடன் கூடிய தன்னார்வ பயிலும் வட்டம்
- ❖ போட்டித் தேர்வுகளுக்கு கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள்

- ❖ வேலைநாடும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்குதல்
- ❖ கலை மற்றும் அறிவியல் பல்கலைக் கழகங்களில் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்துதல்
- ❖ அயல்நாட்டு வேலைவாய்ப்பு மற்றும் திறன் பயிற்சிக்கு பதிவு மேற்கொள்ளுதல் மற்றும் வழிகாட்டுதல்
- ❖ தொழில்நெறி விழிப்புணர்வு மற்றும் திறன் விழிப்புணர்வு தொடர்பிலான நிகழ்ச்சிகள் நடத்துதல்
- ❖ வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு திறன் முகாம்கள் நடத்தி அதன் மூலம் பணி வாய்ப்பு பெற்றுத் தருதல்
- ❖ மாவட்ட அளவிலான தனியார் துறை பணியமர்த்தல் உதவிப் பிரிவு
- ❖ வேலைவாய்ப்பு முகாம்கள் மற்றும் தனியார் துறை பணியமர்த்தல்
- ❖ வேலை நிலவரச் சந்தை தொடர்பிலான புள்ளி விவரங்களை சேகரித்தல் மற்றும் தொகுத்தல்
- ❖ வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித் தொகை வழங்குதல்

### 3.3. வலைதளம் வழியாக பதிவு செய்தல் (www.tnvelaivaaippu.gov.in)

மாண்புமிகு முன்னாள் தமிழக முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 2011 ஆம் ஆண்டு முதல், 12—ஆம் வகுப்பு மற்றும் 10—ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் அவர்கள் கல்வி பயின்ற பள்ளி வளாகத்திலேயே, வேலைவாய்ப்பு பதிவுகளை இணையம் வழியாக, இத்துறையின் வலைதளத்தில் நேரடியாக பதிவு செய்ய வசதி செய்யப்பட்டுள்ளது. இதுவரை இவ்விணையதள வசதியின் மூலமாக, 84,19,535 பதிவுதாரர்கள் பயனடைந்துள்ளனர்.

அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் 31.03.2018 அன்று உயிர் பதிவேட்டில் உள்ள மொத்த பதிவுதாரர்கள் 78,91,068 பேரில் 18 வயதிற்குட்பட்ட 19,28,118 பள்ளி மாணவர்களும், 18 முதல் 23 வயதிற்குட்பட்ட 18,34,664 கல்லூரி மேற்படிப்பு படிக்கும் மாணவர்களும், 24 முதல் 35 வயதுக்குட்பட்ட 29,93,634 வேலைநாடுநர்களும், 35 முதல் 58 வயதுக்குட்பட்டு அரசு பணியினைப் பெற வாய்ப்புள்ள 11,28,792 பதிவுதாரர்களும், 58 வயதைக் கடந்த 5,860 பதிவுதாரர்களும் உள்ளனர்.

## 3.4. பணி அமர்த்தல்

ஜனவரி 2017 முதல் மார்ச் 2018 வரையிலான கால இடைவெளியில் பொதுத் துறையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் 4392 ; தனியார் துறையில் பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் 47,302. இதில், பொதுத் துறையில் பணி நியமனம் பெற்ற 184 வேலைநாடுநர்களும், தனியார் துறையில் பணி நியமனம் பெற்ற 1287 வேலைநாடுநர்களும் மாற்றுத் திறனாளிகள் ஆவர். இத்துறையால் 2011–ஆம் ஆண்டு முதல் மார்ச் 2018 வரை 85,777 வேலைநாடுநர்கள் பொதுத் துறைகளில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

## 3.5. தொழில்நெறி வழிகாட்டல்

அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களும் தற்போது தொழில்நெறி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வழங்கும் மையங்களாக மாற்றப்பட்டுள்ளன.

- **பதிவுதாரர்களுக்கு வழிகாட்டல்:** பல்வேறு பணி வாய்ப்புகள், போட்டித் தேர்வுகள், திறன் பயிற்சிக்கான பதிவுகள், அயல்நாட்டு வேலைவாய்ப்பு பெற அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்தல் மற்றும் அரசின் சுயவேலைவாய்ப்பு திட்டங்கள் ஆகியன குறித்து அனைத்து பதிவுதாரர்களுக்கும் ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றது.

- **தனிநபர் வழிகாட்டல் மற்றும் குழு வழிகாட்டல்:** பதிவுதாரர்கள் மற்றும் வேலைநாடுநர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தை நாடும்போது, அவர்களின் கல்வித்தகுதியினை மேம்படுத்திக் கொள்ளவும், வேலைவாய்ப்பு பெறுவதற்கான திறனை வளர்த்துக் கொள்ளவும் தனிநபர் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. இதே போன்று, வேலைவாய்ப்பு அலுவலகங்களால் ஒரே விதமான தகுதியினைப் பெற்ற, ஒரே மாதிரியான குழுக்களுக்கு அவர்களின் தகுதிகளுக்கு ஏற்ற பணி வாய்ப்புகள் பற்றி குழு வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

- **தொழில்நெறி உரைகள் மற்றும் தொழில்நெறி கருத்தரங்குகள்:** மாணவர்களுக்கு பல்வேறு உயர்கல்வி பற்றி எடுத்துரைக்கப்படுவதற்காக, தொழில் நெறி உரைகள் மற்றும் கருத்தரங்குகள், கல்வி நிறுவனங்களில் உரிய கால இடைவெளியில் நடத்தப்பட்டு வருகின்றன. மேலும் தொழில்நெறி சிற்றேடுகளும் வழங்கப்படுகின்றன.

  - தொழில்நெறி வழிகாட்டும் பணி, கல்வி நிறுவனங்களில் உரிய கால இடைவெளிகளில் வெளிநிகழ்ச்சிகளாக நடத்தப்படுகின்றன.

  - நலிவடைந்த பிரிவினருக்கு தொழில்நெறி வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

  - பள்ளிகளில் ‘தொழில் நெறி வழிகாட்டும் முனையங்களை’ உருவாக்க, ஆசிரியர்களுக்கான

தொழில்நெறி வழிகாட்டல் நிகழ்ச்சிகளின் மூலம் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன.

❖ பொதுத் துறையில் பணிநியமனம் பெற, போட்டித் தேர்வுகளுக்குத் தயார் செய்யும் வேலைநாடுநர்களுக்கு கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

## தொழில் நெறி கண்காட்சிகள்

இத்துறையால், கல்வி நிறுவனங்களில் நடத்தப்படும் தொழில்நெறி கண்காட்சிகளில், உயர்கல்வி மற்றும் உதவித் தொகைகள் பெறுதல், போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளுதல், சுயவேலைவாய்ப்பினை தேர்வு செய்தல் ஆகியவற்றில் மாணவ மாணவிகளுக்கு ஆலோசனை வழங்கும் வகையில், வரைபடங்கள் மற்றும் பயிற்சி கையேடுகள் காட்சிப்படுத்தப்படுகின்றன. இதற்காக, ஒவ்வொரு வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கும், ஆண்டொன்றுக்கு ரூ.10,000/– வீதம் அரசால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **2017–18–**ஆம் ஆண்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களால் **32** தொழில் நெறி கண்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன.

## 3.6. தன்னார்வ பயிலும் வட்டங்கள்

தமிழகத்தின் **32** மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும் தோற்றுவிக்கப்பட்டுள்ள தன்னார்வ பயிலும் வட்டங்கள் மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், பணியாளர் தேர்வாணையம், வங்கித் தேர்வுகள் முகமை, தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், இரயில்வே தேர்வு வாரியம், ஆசிரியர் தேர்வு வாரியம் ஆகியவற்றால் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளுக்குப் பயிற்சி அளிக்கின்றன. இத்தன்னார்வ பயிலும் வட்டங்களில் உள்ள நூலகங்கள், வேலைநாடுநர்களுக்குத் தேவையான புத்தகங்கள், வார, மாத இதழ்கள், பாட குறிப்புகள் ஆகியவற்றை வழங்குகின்றன. மேலும் கடந்த ஆண்டுகளின் வினாத்தாள்கள் போட்டித் தேர்வுகளில் பங்கேற்பவர்களுக்கு வழங்கப்படுகின்றன. அத்துடன் வேலைவாய்ப்பு அலுவலகங்கள், மாதிரி தேர்வுகள் மற்றும் மாதிரி நேர்காணல்களையும் நடத்துகின்றன. தன்னார்வ பயிலும் வட்டங்களின் வழிகாட்டுதல் வாயிலாக போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்றவர்கள் மற்றும் இதர சிறந்த வல்லுநர்கள் அழைக்கப்பட்டு ஊக்கமூட்டும் உரைகள்

நிகழ்த்தப்படுகின்றன. இத்திட்டத்திற்கென ஆண்டு தோறும் ரூ.1 கோடி செலவிடப்படுகிறது.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில், 2017–18–ஆம் ஆண்டில், நடத்தப்பட்ட 199 பயிற்சி வகுப்புகளில், 18,302 நபர்கள் பயிற்சி பெற்றதில், 368 நபர்கள் வெற்றிகரமாக தேர்ச்சி பெற்று பல்வேறு அரசு பணிகளில் பணி நியமனம் பெற்றுள்ளனர்.

**கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள்**

பத்து கலை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகங்களில் பயிலும் ஏழை மாணவர்களுக்கு போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி அளிப்பதற்கென பயிற்சி மையங்கள் அமைக்க அரசால் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு பணியாளர் தேர்வாணையம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், பணியாளர் தேர்வாணையம் மற்றும் வங்கித் தேர்வுகள் போன்ற தேர்வுகளுக்காக, இதுவரை 2652 மாணவர்கள் பதிவு செய்து பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும் தங்களது வசதிக்கேற்ப வேலைவாய்ப்புத் துறையின் வலைதளத்தில் இருந்து

தேவையான மின்–பொருளடக்கங்களைக் கண்டு கொள்ளலாம் மற்றும் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**தொழில்நெறி விழிப்புணர்வு வாரம்**

ஒவ்வொரு ஆண்டும், ஜூலை மாதம் முதல் வாரம் தொழில்நெறி விழிப்புணர்வு வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, அனைத்து மாவட்டங்களிலும் தொழில்நெறி ஆலோசனைகள், தொழில்நெறி உரைகள், தொழில்நெறி கண்காட்சிகள், தொழில்நெறி கருத்தரங்குகள், தொழில்நெறி விழிப்புணர்வு பேரணிகள், நடமாடும் ஊர்திகள் மூலம் தொழில்நெறி விழிப்புணர்வு, ஆசிரியர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டும் நிகழ்ச்சிகள், தொழில்கள், உயர்கல்வி குறித்த சிற்றேடுகள், மற்றும் கையேடுகள் விநியோகித்தல் போன்ற பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.

**பள்ளி கல்வித்துறை ஆசிரியர்களுக்கான, முதன்மை தொழில்நெறி வழிகாட்டியாளர் பயிற்சி**

2017–18–ஆம் ஆண்டில், பள்ளிக் கல்வித் துறையுடன் இணைந்து, அனைத்து மாவட்டங்களிலும், 28 முதன்மை தொழில்நெறி வழிகாட்டியாளர் பயிற்சிகள் நடத்தப்பட்டன. இதில் 3,219 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். இதன் விளைவாக, பள்ளிகளில் மாணவர்களுக்கு தொழில்நெறி

குறித்த தகவல்களை வழங்குவதற்காக, தொழில்நெறி வழிகாட்டும் முனையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதி மாணவர்களுக்கான தொழில்நெறி வழிகாட்டல்**

2017–18–ஆம் ஆண்டில், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் உதவியுடன், **1,338** பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கி, **10**–ஆம் வகுப்பு, **12**–ஆம் வகுப்பு மற்றும் பட்டப்படிப்பு பயிலும் **38,547** மாணவர்களுக்கு சிறப்பு தொழில்நெறி வழிகாட்டல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

**தொழில்நெறி வழிகாட்டும் கையேடுகளை வெளியிடுதல்**

துறையின் செயல்பாடுகள் மற்றும் பல்வேறு தொழில் வாய்ப்புகள் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தும் 'திறன் தமிழகம்' என்னும் செய்தி இதழ் நவம்பர் **2016** முதல் ஒவ்வொரு காலாண்டிலும் வெளியிடப்பட்டு வருகிறது. மேலும் "**10**–ஆம் வகுப்புக்குப் பிறகு என்ன ?", "**12**–ஆம் வகுப்புக்குப் பிறகு என்ன ?", "ஐ.டி.ஐ. படிப்பிற்குப் பிறகு என்ன ?", "பட்டயப் படிப்பிற்குப் பிறகு என்ன ?" ஆகிய தலைப்புகளில் தொழில்நெறி வழிகாட்டும்கையேடுகள் வெளியிடப்பட்டு,

அவை மின் புத்தகங்களாக துறையின் வலைதளத்தில் (www.tnvelaivaaippu.gov.in) வெளியிடப்பட்டுள்ளன.

## 3.7. மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு பிரிவுகள்

சென்னை, கிண்டியில் உள்ள ஒருங்கிணைந்த வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் இயங்கி வருகிறது. இது தவிர, கோயம்புத்தூர், கடலூர், ஈரோடு, காஞ்சிபுரம், மதுரை, நாகர்கோயில், சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி, உதகமண்டலம் மற்றும் வேலூர் ஆகிய மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான பதின்மூன்று சிறப்புப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. இச்சிறப்புப் பிரிவுகள் மாற்றுத்திறனாளிகளின் உடல்தகுதிக்கேற்றவாறு பணி நியமனம் பெறும் வகையில் அவர்களுக்கு உதவி வருகின்றன. 2016 முதல் 2018 வரையிலான காலத்தில் பொதுத் துறையில் 418 மாற்றுத் திறனாளிகளும், தனியார் துறையில் 1790 மாற்றுத் திறனாளிகளும் பணி நியமனம் பெற்றுள்ளனர்.

## 3.8. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள் கோயம்புத்தூர்,

கடலூார், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, வேலூர் ஆகிய ஐந்து இடங்களில் செயல்படுகின்றன.

இம்மையங்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு தொழில்நெறி வழிகாட்டுதல்களை வழங்கி வருகின்றன. இம்மையங்கள் தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகளை இவர்களுக்காக நடத்துகின்றன. ஆலோசனை வழங்கும் பணிகளுடன், பல்வேறு போட்டித் தேர்வுகள் எழுதும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு, உரிய கால இடைவெளியில் முன்தேர்வு பயிற்சிகளையும் இம்மையங்கள் வழங்கி வருகின்றன. இத்திட்டத்திற்கென அரசால் ரூ.20.46 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.9. பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம்

பழங்குடியினருக்கான சிறப்பு தொழில்நெறி வழிகாட்டும் மையம் ஒன்று உதகமண்டலத்தில் செயல்பட்டு வருகிறது. இம்மையம் பழங்குடியின மாணவர்கள் மற்றும் வேலைநாடுநர்களுக்கான வழிகாட்டுதல்களை வழங்கி வருகிறது. தொழில்நெறி வழிகாட்டும் அலுவலர் பழங்குடியினருக்கான கல்வி நிறுவனங்கள் மற்றும் மாணவர் விடுதிகளுக்கு நேரில் சென்று தொழில்நெறி உரைகளை நிகழ்த்துகிறார். மேலும் இம்மையம், பழங்குடியின

விண்ணப்பதாரர்களை, அவர்கள் வசிக்கும் இடங்களுக்கே சென்று பதிவு செய்கின்றன.

### 3.10. வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து, உயிர்ப் பதிவேட்டில் 5 ஆண்டுகளாகக் காத்திருக்கும் வேலைநாடுநர்களுக்கு, வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை 3 ஆண்டுகளுக்கு, வயது மற்றும் வருமானம் போன்ற நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற ஆண்டு வருமானம் ரூ.50,000/– ஆகவும் மற்றும் அதிகபட்ச வயது வரம்பு 40 ஆகவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பிரிவினராக இருப்பின் வயது வரம்பு 45 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித்தொகை காலாண்டுக்கு ஒருமுறை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. வேலைவாய்ப்பற்றோருக்கான உதவித் தொகை பிப்ரவரி 2017 முதல் இருமடங்காக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2017–18 நிதியாண்டில், 57,365 பயனாளிகளுக்கு, ரூ.30.45 கோடி வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**மாற்றுத் திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை**

வேலைவாய்ப்புக்காக பதிவு செய்து உயிர்ப்பதிவேட்டில் ஓராண்டிற்கு மேல் காத்திருக்கும் மாற்றுத் திறனாளி வேலைநாடுநர்களுக்கு, வயது மற்றும் பெற்றோர் வருமானம் போன்ற நிபந்தனைகள் ஏதுமின்றி 10 ஆண்டுகளுக்கு வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை வழங்கப்படுகிறது. எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் முதல் 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் வரை ரூ.600/–ம், 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றோருக்கு ரூ.750/–ம், பட்டதாரிகளுக்கு ரூ.1000/–ம் உதவித்தொகையாக மாதந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. 2017–18–ஆம் நிதியாண்டில், 22,605 பயனாளிகளுக்கு ரூ.20.15 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது.

## 3.11. மாதிரி தொழில்நெறி வழிகாட்டும் மையங்கள்

அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களும் தற்போது தொழில்நெறி வழிகாட்டும் மையங்களாக மாற்றப்பட்டுள்ளன. தொழில்நுட்ப உதவியுடன், தொழில்நெறி ஆலோசனை மற்றும் பயிற்சியின் வாயிலாக, வெளிப்படையான மற்றும் பயனுள்ள வகையில், உள்ளூர் இளைஞர்கள் மற்றும் வேலைநாடுநர்களை உரிய பணி வாய்ப்புகளுடன் இணைப்பதே இம்மையத்தின் நோக்கமாகும். தமிழகத்தின் முதல் மாதிரி தொழில்நெறி

வழிகாட்டும் மையம், வேலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும், அதனைத் தொடர்ந்து கோயம்புத்தூரிலும், மத்திய அரசின் நிதி உதவியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### 3.12. மிஷன் மோட் திட்டம் (Mission Mode Project)

தேசிய வேலைவாய்ப்பு பணியின், மிஷன் மோட் திட்டத்தின் கீழ், அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களையும் ஒன்றிணைத்து, அவற்றை தொழில்நெறி வழிகாட்டும் மையங்களாக மேம்படுத்தும் பொருட்டு, 35 வேலைவாய்ப்பு அலுவலகங்களில் புனரமைத்தல், தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல் ஆகியவற்றுக்காக, மத்திய அரசு ரூ.5.60 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

| வ. எண் | பிரிவு | அலுவலகங்களின் எண்ணிக்கை | மொத்த தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1. | தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு | 35 | 1.05 |
| 2. | வேலைவாய்ப்பு அலுவலகங்களை புணரமைத்தல் | 35 | 1.75 |
| 3. | வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல் | 35 | 2.80 |
| | **மொத்த தொகை** | | **5.60** |

## 3.13. தேசிய தொழில்நெறி பணி வலைதளம்

தேசிய தொழில்நெறி பணியின் கீழ் அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களும் தேசிய தொழில்நெறி பணி வலைதளம் வாயிலாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இந்த வலைதளம் அரசு மற்றும் தனியார் துறை வேலையளிப்போர், வேலைநாடுநர் மற்றும் திறன் மேம்படுத்தும் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு இடையே உள்ள இடைவெளியை இணைக்கும் பாலமாக செயல்பட்டு வருகிறது.

தேசிய தொழில்நெறி பணி வலைதளமானது மாநில வேலைவாய்ப்பு வலைதளத்துடன் (www.tnvelaivaaippu.gov.in) இணைந்து செயல்படுகிறது. மாநில தரவு தளத்தில் உள்ள விவரங்கள் தேசிய தொழில்நெறி பணி தரவு தளத்திற்கு இடப் பெயர்ச்சி செய்யப்பட்டுள்ளது. வேலைநாடுநர், வேலையளிப்போர் மற்றும் திறன் பயிற்சி அளிப்போர் இணையதளத்தில் பதிவு செய்து கொள்வது, வேலைநாடுநர்கள் தேசிய அளவிலான பணிவாய்ப்புகளைப் பெற உதவுகிறது.

## 3.14. தனியார் துறை பணியமர்த்தல்

தனியார் துறை பணியமர்த்தலை உயர்த்துவதற்காக, 2012–ஆம் ஆண்டில் 37 மாவட்ட வேலைவாய்ப்பு

அலுவலகங்களிலும், மாவட்ட அளவிலான பணியமர்த்தல் உதவி பிரிவுகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. இப்பிரிவுகள் வேலைநாடுநர்–வேலையளிப்போர் சந்திப்புகளை ஏற்படுத்துவதில் முக்கியப் பங்காற்றி வருகின்றன. வேலையளிப்போர் தங்களுக்கு உகந்த பணியாளர்களைப் பெறவும், வேலைநாடுநர்கள் பணிகளைப் பெறவும், வேலைவாய்ப்பு முகாம்கள் உதவுகின்றன. மேலும் இம்முகாம்கள் பணிவாய்ப்பு பெறாத வேலைநாடுநர்கள் தங்கள் திறன் குறைபாட்டை அறிந்து கொள்ளவும், உரிய திறன் பயிற்சிகள் பெறவும் உதவுகின்றன. 35 மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களிலும், வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துவதற்கென, தேசிய தொழில்நெறி பணியின் கீழ், ஆண்டொன்றுக்கு ரூ.2.80 கோடி நிதி, மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டு, செப்டம்பர் 2017 முதல் மார்ச் 2018 வரை, 91 வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. இத்தகைய சிறிய மற்றும் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்களின் வாயிலாக, 2011 ஆம் ஆண்டு முதல் 2018 மார்ச் வரை 2,18,414 வேலைநாடுநர்கள் பல்வேறு தனியார் துறை நிறுவனங்களில் பணியமர்த்தம் செய்யப் பெற்றுள்ளனர்.

### 3.15. சிறப்பு செயல்பாடுகள்

**மெய்நிகர் கற்றல் முறை இணையதள வழி கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள், மின்-பொருளடக்கம், மின்-புத்தகங்கள்**

மெய்நிகர் கற்றலுக்கான வலைதளம், மின்–கற்றல், மின்–பாடக்குறிப்புகள், மின்–புத்தகங்கள், மற்றும் இணையதள மெய்நிகர் கற்றல் ஆகியவற்றை கலந்துரையாடலுடன் கூடிய காணொலி வசதியுடன் அமைக்கப்பட்டு வருகிறது. வேலைநாடுநர்கள் மற்றும் மாணவர்கள், போட்டித் தேர்வுகளுக்குத் தயார் செய்து கொள்ளவும், திறன்களை மேம்படுத்தவும், அறிவுத்திறனை வளர்த்துக் கொண்டு வேலைவாய்ப்பு பெறும் தகுதியைப் பெற்றுக் கொள்ளவும், தேவையான உதவிகளை அளிக்கும் இந்த வலைதளம், மின்–பாடக்குறிப்புகளை தமிழிலும் வழங்குவதால் மொழியினால் ஏற்படும் தடைகள் நீங்கியதாக அமையும்.

**வேலைவாய்ப்பு அலுவலகங்களில் அயல்நாட்டு வேலைவாய்ப்பு மற்றும் திறன் பதிவுக்கான சிறப்பு பிரிவுகள் அமைத்தல்**

ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும் அயல்நாட்டு வேலைவாய்ப்பிற்கான பதிவு, ஆலோசனை மற்றும் திறன் பதிவுக்கான பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அயல்நாட்டு வேலைவாய்ப்பு குறித்து வழிகாட்டவும்,

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் வலைதளத்தில் பதிவு செய்யவும் இச்சிறப்புப் பிரிவுகள் உதவுகின்றன.

அனைத்து மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் திறன் பதிவு செய்யும் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்பிரிவுகள் தனி நபர்களின் திறன் குறைபாட்டை மதிப்பீடு செய்கின்றன. வேலைநாடுநர்கள் தங்களுக்கு விருப்பமான திறன் பயிற்சியை தேர்வு செய்து, திறன் மேம்பாட்டுக் கழக இணையதளத்தில் பதிவு செய்து கொள்ள இயலும்.

### 3.16. துறையின் புதிய முயற்சி

**வாரத்தின் ஐந்து நாட்களிலும் 'ஒரு நாள் ஒரு செயல்பாடு'**

வேலைவாய்ப்பு அலுவலகங்களின் அனைத்து செயல்பாடுகளையும் முறைப்படுத்தும் விதமாக, வாரத்தின் ஐந்து வேலைநாட்களிலும் 'ஒரு நாள் – ஒரு செயல்பாடு' என்னும் ஏற்பாடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

| நாளுக்கான செயல்முறை கருத்து | அந்நாளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் |
|---|---|
| **திறன்மிகு திங்கள்** (திங்கள்) | திறன் முகாம், திறன் மதிப்பீடு, மற்றும் திறன் பயிற்சிக்கான பதிவு |
| **சேவை செவ்வாய்** (செவ்வாய்) | தொழில்நெறி வழிகாட்டல், தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சிகள், தொழில்நெறி கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துதல் |

| நாளுக்கான செயல்முறை கருத்து | அந்நாளில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் |
|---|---|
| **போட்டித் தேர்வு புதன்** (புதன்) | போட்டித் தேர்வுகளுக்கான கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள், மாதிரி தேர்வுகள் மற்றும் நேர்காணல்கள் நடத்துதல் |
| **விழிப்புணர்வு வியாழன்** (வியாழன்) | குழு கலந்துரையாடல், தனிநபர் வழிகாட்டல், தொழில்நெறி வழிகாட்டுதல் குறித்த சிற்றேடுகள், உளவியல் ஆய்வு |
| **வேலைவாய்ப்பு வெள்ளி** (வெள்ளி) | அனைத்து பதிவுதாரர்களுக்கும் வேலை வாய்ப்பு முகாம்கள், வேலைநாடுநர்கள், வேலையளிப்போர், பணி காலியிட விவரங்கள் மற்றும் வேலைவாய்ப்பு, புதிய வேலைவாய்ப்பு குறித்த விவரங்கள் சேகரித்தல். |

வேலைவாய்ப்பு பிரிவு, தொழில்நெறி வழிகாட்டும் திட்டங்கள், தொழில்நெறி கண்காட்சிகள், கருத்தரங்குகள், தன்னார்வ பயிலும் வட்டங்களின் மூலம் வழங்கப்படும் பயிற்சி வகுப்புகள், வேலைவாய்ப்பு முகாம்கள் நடத்துதல் மற்றும் ‘ஒரு நாள் – ஒரு செயல்’ என்ற ஏற்பாட்டினை செயல்படுத்துதல் போன்ற பல்வேறு செயல்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் வேலையின்மை காரணமாக எழும் இடர்பாடுகளை அதிகபட்சமாகக் குறைக்க உறுதி கொண்டுள்ளது. வேலைவாய்ப்பற்ற இளைஞர்களை வேலையுள்ள இளைஞர்களாக மாற்றுவதற்கான அனைத்து சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்து, அவற்றை அனைத்து வகையிலும் வேலைவாய்ப்பு துறை செயல்படுத்தி வருகிறது.

## பயிற்சி பிரிவு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் பயிற்சி பிரிவானது முறைசார்ந்த, முறைசாரா துறைகளில் நவீன உற்பத்தி மற்றும் சேவை துறைகளுக்கு பொருத்தமான திறன்பெற்ற மனிதவளத்தினை நீண்டகால பயிற்சி மூலம் இம்மாநிலத்திற்கும், நாட்டிற்கும் வழங்கி வருவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

தொழிற்பயிற்சியானது மத்திய மற்றும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் பொதுப்பட்டியலில் உள்ள ஓர் இனமாகும். தேசிய அளவிலான கொள்கை உருவாக்கத்தில், பயிற்சி தரநிலைகள், விதிமுறைகள், தேர்வுகளை நடத்துதல், சான்றளித்தல் போன்றவை மத்திய அரசின் பொறுப்பிலும், பயிற்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது மாநில அரசுகளின் பொறுப்பிலும் உள்ளது.

### 3.17. நிர்வாக அமைப்பு

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை ஆணையர் துறைத் தலைவராகவும் அவருக்கு உதவிட மாநில இயக்குநரகத்தில் இரண்டு இணை இயக்குநர்களும் உள்ளனர். திட்டங்களை திறம்பட செயல்படுத்துதல் மற்றும்

கண்காணித்தலை உறுதிப்படுத்துவதற்காக மண்டல அளவில் சென்னை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஐந்து மண்டல இணை இயக்குநர்கள் உள்ளனர். ஒவ்வொரு அரசு தொழிற்பயிற்சி நிலையமும் பயிற்சி அலுவலர் / உதவி இயக்குநர் / துணை இயக்குநர் நிலையில் உள்ள முதல்வர் தலைமையில் இயங்குகிறது.

**கைவினைஞர் பயிற்சி திட்டம்**

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது பகுதி–திறன் பெற்ற (Semi-skilled) மனித வளத்தை தொழிற்சாலைகளுக்கு வழங்குவதாகும். மேலும் இது வேலைநாடுநர்கள் ஊதியம் பெறும் வேலைவாய்ப்பு அல்லது சுயவேலைவாய்ப்பை பெறும் வகையில் தங்களது வேலைத்திறன்களை மேம்படுத்திக் கொள்ள உதவுகிறது.

## 3.18. அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்

இம்மாநிலத்தில் உள்ள இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி நிலையங்கள் பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத பிரிவுகளில் நீண்டகால தொழிற்பயிற்சியினை வழங்குகிறது. மாநிலம் முழுவதும் 88 அரசு தொழிற்பயிற்சி

நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. தொழிற்பயிற்சி ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் 51 பொறியியல் மற்றும் 21 பொறியியல் அல்லாத பிரிவுகளில் வழங்கப்படுகின்றன. தொழிற்பிரிவுகளுக்குகேற்ப பயிற்சிக் காலமானது 6 மாதம் முதல் 2 ஆண்டுகள் வரை உள்ளது.

தொழிற்பயிற்சி நிலையங்களில் 14 முதல் 40 வயதிற்குட்பட்ட மாணவர்கள் பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள். பெண்களுக்கு வயது உச்சவரம்பு இல்லை. அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும் மகளிர்க்கென 30% சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதத்தில் மதிப்பெண் அடிப்படையில் நடைமுறையில் உள்ள இன சுழற்சி முறையைப் பின்பற்றி மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. தற்போது அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் மூலம் 31,298 பயிற்சியாளர்கள் திறன்பயிற்சி பெற்று வருகின்றனர்.

### 3.19. சிறப்பு தொழிற்பயிற்சி நிலையங்கள்

#### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவருக்கான அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்

கடலூர் மாவட்டம் சிதம்பரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டம் வடகரை ஆகிய இடங்களில் ஆதிதிராவிட

பயிற்சியாளர்கள் பயன்பெறும் வகையில் இரண்டு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் **467** இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன.

பழங்குடியினர்க்கென பிரத்யேகமாக ஆறு அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம், கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைக்கட்டி, சேலம் மாவட்டம் கருமந்துறை, திருவண்ணாமலை மாவட்டம் ஜமுனாமரத்தூர், நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை, நீலகிரி மாவட்டம் கூடலூர் ஆகிய இடங்களில் மொத்தம் **1,311** இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன.

**மகளிர் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்**

மகளிர் பயிற்சியாளர்களுக்கென பிரத்தியேகமாக கிண்டி, அம்பத்தூர், கடலூர், புள்ளம்பாடி, கோயம்புத்தூர், சேலம், ஆண்டிப்பட்டி, திண்டுக்கல், மதுரை, நாகர்கோவில் ஆகிய இடங்களில் **3015** இருக்கைகளுடன் பத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும் தஞ்சாவூர், இராமநாதபுரம், பரமக்குடி, ஓசூர், ஆகிய நான்கு இடங்களில் மகளிர் பிரிவுகள் **480** இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன.

## 3.20. இணையதளம் வாயிலாக மாவட்ட அளவிலான கலந்தாய்வு சேர்க்கை

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கான பயிற்சியாளர்கள், சேர்க்கையானது மதிப்பெண் மற்றும் இன சுழற்சி அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறும் மாவட்ட கலந்தாய்வு மூலம் எளிமையாகவும், வெளிப்படையாகவும் இருக்கும் பொருட்டு www.skilltraining.tn.gov.in என்ற இணையதள உதவியுடன் நடைபெறுகிறது. கலந்தாய்வின் போது, மாணவர்கள் தமது விருப்பப்படி தொழிற்பயிற்சி நிலையத்தையும் தொழிற்பிரிவையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

## 3.21. தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள்

தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான திறன் பெற்ற மனித வளத்தை உருவாக்கும் அரசின் முயற்சிகளுக்கு துணையாக, தொழிற் பயிற்சி வழங்குவதில் தனியார் பங்கேற்பு ஊக்குவிக்கப்படுகிறது. தற்போது தமிழகத்தில் 484 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 77,191 இருக்கைகளுடன் செயல்பட்டு வருகின்றன. இந்த தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் தேசிய

தொழிற்பயிற்சி குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்ட தொழிற்பிரிவுகளில் பயிற்சிகள் வழங்கி வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் **2017–18–**ஆம் ஆண்டில், **32,684** பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

**பயிற்சி கட்டணங்களை திரும்ப வழங்குதல்**

இந்த அரசு திறன் பயிற்சி வழங்குவதில் தனியார் பங்களிப்பினை ஊக்கப்படுத்தும் வகையில் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சிக் கட்டணத்தை திரும்ப வழங்கிடும் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள **50** சதவீதம் இருக்கைகள் அரசுக்கு ஒப்புவிக்கப்பட்டு அவை மாவட்ட கலந்தாய்வு முறையில் நிரப்பப்படுகின்றன.

அரசு ஒதுக்கீட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டு தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மாணவர்களின் பயிற்சி கட்டணமானது கிராமப்புறங்களில் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் வருடத்திற்கு ரூ.**10,000/–** எனவும் நகர்ப்புறங்களில் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் ஒவ்வொரு மாணவருக்கும்

வருடத்திற்கு ரூ.12,000/– எனவும் அரசால் திரும்ப வழங்கப்படுகிறது. 2017–18–ஆம் ஆண்டில் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் 6,624 பயிற்சியாளர்கள் அரசு ஒதுக்கீட்டின் கீழ் மாவட்ட கலந்தாய்வின் மூலம் சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர்.

## 3.22. தொழிற்பள்ளிகள்

உள்ளூர் பகுதிகளில் உள்ள தொழில் நிறுவனங்களின் தேவைக்கு ஏற்ப தேவைப்படும் தொழிற் பிரிவுகளில் பயிற்சி வழங்கிட 385 தனியார் சுயநிதி தொழிற் பள்ளிகள் இம்மாநிலத்தில் செயல்படுகின்றன. உணவு தயாரிப்பவர், தையல், கணினி இயக்குதல், அழகுக் கலை, அலுவலக கணினி நிர்வாகம் முதலிய 90 தொழிற்பிரிவுகளில் அந்தந்த தொழிற்பிரிவிற்கு ஏற்றவாறு ஒரு வருடம் முதல் 3 வருடம் வரையிலான பயிற்சிகாலத்திற்கு பயிற்சி வழங்கப்படுகிறது. எட்டாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள் இப்பயிற்சிக்கு அனுமதிக்கப்படுகின்றனர். இத்துறையால் ஒவ்வொரு வருடமும் பொதுத் தேர்வு ஜுன் மாதத்தில் நடத்தப்பட்டு, தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு மாநில தொழிற்பயிற்சி குழும சான்றிதழ் வழங்கப்படுகிறது.

தற்பொழுது, **16,580** பயிற்சியாளர்கள் பயிற்சிபெற்று வருகின்றனர்.

## தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பள்ளிகளுக்கு பராமரிப்பு மானியம் வழங்குதல்

ஒவ்வொரு வருடமும் அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் தொழிற்பள்ளிகளுக்கும் அரசால் பராமரிப்பு மானியம் வழங்கப்படுகிறது. இந்த வருடம் **22** தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் **10** தொழிற்பள்ளிகளுக்கும் ரூ.**3.84** கோடி மாநில அரசால் பராமரிப்பு மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

## பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள்

பயிற்சியாளர்கள் சேர்க்கையை ஊக்கப்படுத்தவும், திறன் பயிற்சியில் முழு ஈடுபாட்டுடன் பங்கேற்கவும், பயிற்சி கட்டணம் மாநில அரசால் இரத்து செய்யப்பட்டு அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கும் கட்டணமில்லா பயிற்சியினை வழங்குகிறது.

இவற்றுடன், **2013**–ஆம் ஆண்டு முதல், அரசு மற்றும் அரசு உதவிபெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு கீழ்காணும் சலுகைகள் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

1. பேருந்து பயணச் சலுகை
2. இரண்டு இணை சீருடைகள் மற்றும் ஒரு இணை காலணி
3. மிதிவண்டி
4. மாதாந்திர உதவித் தொகை ரூ.500/–
5. மடி கணினி
6. பாடப்புத்தகங்கள் மற்றும் வரைபடக் கருவிகள்
7. செய்முறை பயிற்சிக்கான நுகர்பொருட்கள்

### 3.23. அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை தரம் உயர்த்துதல்

- திறன்மிகு பயிற்சித் திட்டத்தின் கீழ், 22 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் ரூ.82.90 கோடியில் தரம் உயர்த்தப்பட்டது. இதில், மத்திய அரசின் பங்கு ரூ.62.17 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.20.73 கோடி ஆகும். ஒவ்வொரு வருடமும் 2,000 பயிற்சியாளர்கள் பயன்பெறுகின்றனர்.

- மத்திய அரசின் உதவியுடன் 32 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், பயிற்சி நிலையங்களின் மேலாண்மை குழு மூலம் அரசு மற்றும் தனியார் கூட்டமைப்பு

உதவியுடன் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. **33** தொழிற் பிரிவுகள் அறிமுகப்படுத்தப்பட்டு, **1,413** பயிற்சியாளர்கள் ஒவ்வொரு வருடமும் பயனடைகின்றனர்.

## 3.24. தொழில்துறை மதிப்பு விரிவாக்கத்திற்காக திறன் பலப்படுத்துதல் (STRIVE)

தொழிற்பயிற்சி நிலையங்களை தரம் உயர்த்தும் நோக்கில் **தொழில்துறை மதிப்பு விரிவாக்கத்திற்காக திறன் பலப்படுத்துதல்** என்ற பெயரில் புதிய திட்டத்தை மத்திய அரசு வடிவமைத்துள்ளது. இத்திட்டம் நிறுவன ரீதியான பயிற்சி முறைகளில் குறிப்பாக தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பழகுநர் பயிற்சி அமைப்புகளில் கொண்டு வரப்படவேண்டிய சிறப்பு சீர்திருத்தங்களை ஊக்குவிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டதாகும்.

இது நாடு முழுவதிலும் உள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளிட்ட அனைத்து தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் உதவிட மத்திய அரசால் திட்டமிடப்பட்டுள்ள ஓர் ஐந்தாண்டு திட்டமாகும். தமிழ்நாட்டில் மொத்தம் **36** அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும், **9** தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும்

சுமார் ரூ.100 கோடி முதலீட்டில் இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படவுள்ளது.

தொழிற்பயிற்சி நிலையங்களில் வழங்கப்படும் பயிற்சியின் தரத்தை அதிகரிக்கவும், மாநில அளவில் தொழிற்பழகுநர் பயிற்சியை ஊக்குவித்து, கண்காணிக்கவும் தொழிற்பயிற்சி நிலைய பயிற்றுநர்களுக்கு தொழிற்சாலைகளில் பயிற்சியளிக்க வழிவகை செய்திடவும் மாநில அளவில் பிரத்யேகமான தொழிற்பழகுநர் பயிற்சி கண்காணிப்பு அமைப்பை உருவாக்கிடவும், இத்திட்டத்தை (STRIVE) செயல்படுத்திட மாநில திட்ட செயலாக்க அலகு அமைத்திடவும் இந்த நிதி பயன்படுத்தப்படும்.

திறன்பயிற்சியில் தரக்கட்டுப்பாடு உறுதியளித்தலின் ஒரு பகுதியாகவும், தொழிற்பயிற்சி நிலையங்களுக்கிடையே தர ஒப்பிடு செய்வதற்கான அளவுகோலாகவும், மத்திய அரசின் மேலாண்மை தகவல் அமைப்பு இணையதளம் வாயிலாக 62 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும், 99 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களிலும், தர நிர்ணயத்திற்கான சுய மதிப்பீடு செய்து முடிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 5 புள்ளிகளில் 3 புள்ளிகளுக்கு மேல் பெறும்

தொழிற்பயிற்சி நிலையங்கள் STRIVE திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும்.

### 3.25. குறுகிய கால பயிற்சிகள்

**அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை பயிற்சி வழங்கும் நிறுவனங்களாக திறன்மேம்பாட்டுக் கழகத்தில் பதிவு செய்தல்**

இத்திட்டத்தின்கீழ், தொழிற்சாலைகளுக்கு ஏற்ற திறன்களில் இளைஞர்களுக்கு குறுகிய கால திறன் பயிற்சிகளை அளிப்பதற்காக **62** அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் பயிற்சி வழங்கும் நிறுவனங்களாக தமிழ்நாடு திறன்மேம்பாட்டுக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதுவரை, **3558** பயிற்சியாளர்கள் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்துள்ளனர். பயிற்சி முடிவுற்றபின், மாநில தொழிற்பயிற்சி குழுமம் மூலம் திறன் மதிப்பீடு நடத்தப்பட்டு, வெற்றிகரமாக பயிற்சியை முடித்த பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

### 3.26. அம்மா இருசக்கர வாகன பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பயிற்சி மையம்

இத்திட்டத்தின்கீழ், மாநிலத்தில் உள்ள **35** பஞ்சாயத்து ஒன்றியங்களில் இருசக்கர வாகன பழுதுபார்ப்பு மற்றும் பராமரித்தல், சிறிய வேளாண் எந்திரங்கள் மற்றும்

டிராக்டர்களில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் வாயிலாக ஓர் அலகிற்கு 20 பயிற்சியாளர்கள் வீதம் பயிற்சி அளிக்கப்படுகிறது. சுய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்காக கிராமப்புற இளைஞர்களுக்கு பயிற்சி அளித்திட ரூ.1.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை, 561 இளைஞர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

**திறன்பயிற்சி மையம்**

இத்திட்டத்தின்கீழ், மாநிலத்தில் உள்ள 60 பஞ்சாயத்து ஒன்றியங்களில் மின்பணியாளர், பற்றவைப்பவர், குளிர்பதன பராமரிப்பு, தையல், கணினி மென்பொருள் (Tally) பயன்படுத்தும் கணக்கு உதவியாளர் போன்ற சுய வேலைவாய்ப்புக்கேற்ற தொழிற்பிரிவுகளில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களின் மூலம் ஓர் அலகில் 30 இளைஞர்கள் வீதம் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இந்த அரசால் 3,600 பயிற்சியாளர்களுக்கு பயிற்சி அளித்திட ரூ.2.94 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இதுவரை 1,130 இளைஞர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

### 3.27. தொழிற்பழகுநர் பயிற்சி திட்டம்

தொழிற்பழகுநர் பயிற்சி திட்டமானது, திறன் இல்லாத / பகுதி திறன் பெற்ற இளைஞர்களை முழுதிறன் பெற்றவர்களாக மாற்றுவது மற்றும் தொழிற்சாலைகளில் வேலை செய்ய தகுதியானவர்களாக உருவாக்கும் மற்றொரு முக்கியமான திட்டமாகும். ஆண்டுதோறும் தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ப தொழிற்பழகுநர்கள் சேர்க்கப்படுகின்றனர். வேலையளிப்போரால் தொழிற்பழகுநர்களுக்கு தொழிற்சாலைகளில் நேரடி பணிமனை பயிற்சி அளிக்கப்படுகிறது. மாநிலத்தில் 2,302 நிறுவனங்கள் இத்திட்டத்தினை செயல்படுத்துகின்றன. இந்த வருடம் 8,410 தொழிற்பழகுநர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். பகுதி திறன் பெற்ற தொழிலாளர்களுக்கான அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியத்தின் அடிப்படையில் தொழிற்பழகுநர்களாக சேர்க்கப்பட்டவர்களுக்கு உதவித் தொகை வேலையளிப்போரால் வழங்கப்படுகிறது.

தொழிற் பழகுநர் பயிற்சி முடிக்கின்ற தொழிற்பழகுநர் ஒவ்வொருவரும் தேசிய தொழிற்பயிற்சிக் குழுமத்தால் நடத்தப்படும் தொழிற் பழகுநர்களுக்கான அகில இந்திய தொழிற் தேர்வில் பங்கேற்பர். இத்தேர்வு வருடத்திற்கு இரண்டு

முறை ஏப்ரல் / மே மற்றும் அக்டோபர் / நவம்பர் ஆகிய மாதங்களில் நடத்தப்படுகிறது. இத்தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ் மத்திய அரசின் தேசிய தொழிற்பயிற்சிகுழுமத்தால் (NCVT) வழங்கப்படுகிறது.

**அடிப்படை பயிற்சி மையங்கள்**

தொழிலாளர்களின் எண்ணிக்கை 500 அல்லது அதற்கு மேல் உள்ள தொழில் நிறுவனங்கள் தொழிற்பயிற்சி நிலையங்களைப் போன்றே விதிமுறைகளின்படியான உள்கட்டமைப்பு வசதிகளோடு இருந்தால் அடிப்படை பயிற்சி மையம் (Basic Training Centre) துவக்கலாம். தற்போது மாநிலத்தில் 11 அடிப்படை பயிற்சி மையங்கள் தனியார் நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. இந்த வருடம், 483 தொழிற்பழகுநர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**அமலாக்க முகமை**

தொழிற்பழகுநர் சட்டம், 1961 – ன் கீழ், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர், மாநில தொழிற்பழகுநர் ஆலோசகர் ஆவார். மாநில அரசு நிறுவனங்கள், அரசு பொது துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில்

இச்சட்டம் செயல்படுத்தப்படுவதை கண்காணிக்கும் பொறுப்பு இவரைச் சார்ந்ததாகும்.

**தேசிய தொழிற் பழகுநர் ஊக்குவிப்பு திட்டம் (NAPS)**

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது தொழிற்சாலைகளில் தொழிற்பழகுநர்களின் சேர்க்கையை அதிகரிப்பதன் மூலம் தொழிற்பழகுநர் பயிற்சியினை ஊக்குவிப்பதாகும். இத்திட்டத்தின் கீழ் தொழிற்பழகுநர்கள் மற்றும் தொழிற்சாலைகள் / நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு பின்வருமாறு ஊக்கத்தொகை மத்திய அரசால் வழங்கப்படுகிறது.

(i) நிறுவனங்களில் பயிற்சியில் ஈடுபடுத்தப்படும் அனைத்து தொழிற்பழகுநர்களுக்கும் ஒவ்வொரு மாதமும் ரூ.1500/– க்கு மிகாத வகையில் நிர்ணயிக்கப்பட்ட உதவித்தொகையில் 25 சதவீதம் பங்கீட்டுத் தொகையாக வேலையளிப்போருக்கு வழங்கப்படுகிறது.

(ii) அடிப்படைப் பயிற்சிக்கான கட்டணம் ரூ.7500/–க்கு மிகாமல் அதிகபட்சமாக 500 மணி நேரம் / 3 மாத பயிற்சிக்காக அடிப்படை பயிற்சி வழங்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தில் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி முடித்தவர்கள், குறுகிய கால பயிற்சியினை தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் / தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம்/ பாரத பிரதமரின் கௌஷல் விகாஸ் யோஜனா / குறுகிய கால திறன் எய்தும் பயிற்சி திட்டம் மற்றும் தொழிற்பிரிவிற்கேற்றவாறு குறைபட்ச கல்வித் தகுதி பெற்றவர்கள் ஆகியோரை தொழிற்பழகுநர்களாக சேர்த்துக் கொள்ளலாம். முறையான பயிற்சி ஏதும் பெறாதவர்களை நேரடி தொழிற்பழகுநர்களாக சேர்த்துக் கொள்ளலாம். தொழிற்பழகுநர்களாக பயிற்சி பெறுவதற்கு பயிற்சியாளர்கள் குறைந்தபட்சம் 14 வயது முடிந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

**நேரடி தொழிற்பழகுநர்கள் (Freshers) தொழிற் நிறுவனங்களில் தொழிற்பழகுநர்களாகுதல்**

தேசிய இலக்கான 50 இலட்சம் தொழிற்பழகுநர்களை 2020–க்குள் முழுவதுமாக அடைய பல திருத்தங்கள் மற்றும் புதிய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. 8–ஆம் வகுப்பு, 10–ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களும் புதிய தொழிற்பழகுநர்களாக வரையறுக்கப்பட்ட மற்றும் விருப்ப தொழிற்பிரிவுகளில் ஈடுபடுத்தலாம் என்பது இம்முக்கிய மாற்றங்களில் ஒன்றாகும். இந்த புதிய தொழிற்பழகுநர்கள்

பயிற்சியினை முடித்தவுடன் தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் பெறுவார்கள்.

### 3.28. தரம் உறுதிப்படுத்துதல்

#### திறனாய்வு போட்டிகள்

பயிற்சியாளர்கள் தங்களது துறையில் வல்லுநர்களாவதை ஊக்குவிக்கும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும் 18 தொழிற்பிரிவுகளில் மாநில அளவிலான திறனாய்வு போட்டிகள் இத்துறையால் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் வெற்றி பெறுபவர்களுக்கு ரூ.25,000/– ரொக்க பரிசும் நற்சான்றிதழும் வழங்கப்படுகிறது. இதில் வெற்றி பெறுபவர் அகில இந்திய அளவிலான திறனாய்வு போட்டியில் கலந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு ஆண்டும் மாநில திறனாய்வு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு, அகில இந்திய அளவில் திறனாய்வு போட்டிகள் புது தில்லியில் உள்ள தலைமை பயிற்சி இயக்ககத்தால் 15 தொழிற்பிரிவுகளில் நடத்தப்படுகின்றன. இதில் வெற்றி பெறுபவருக்கு ரூ.50,000/– ரொக்கப் பரிசும் நற்சான்றிதழும் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு சிறந்த மாநிலமாக 22 முறை கௌரவிக்கப்பட்டுள்ளது. இதுவரை தமிழ்நாட்டைச் சார்ந்த 38 பயிற்சியாளர்கள் சிறந்த திறன் பெற்றமைக்கான விருதினைப் பெற்றுள்ளனர்.

**படைப்புத்திறன் போட்டி**

மாநில அளவில் அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் பொருத்துநர், கடைசலர், இயந்திரவேலையாள், கம்மியர் மோட்டார் வண்டி மற்றும் மின்சாரப்பணியாளர் ஆகிய ஐந்து தொழிற்பிரிவுகளில் பயிலும் பயிற்சியாளர்களுக்கான படைப்பாற்றல் போட்டி இத்துறையால் நடத்தப்படுகிறது. கடந்த 2016–ஆம் ஆண்டு முதல் சிறந்த படைப்பினை உருவாக்கி வெற்றி பெறுபவர்களுக்கு ரூ.50,000/– ரொக்கப் பரிசும், நற்சான்றிதழும் வழங்கப்படுகிறது. இது வரை ஐந்து பயிற்சியாளர்களுக்கு இப்பரிசு வழங்கப்பட்டுள்ளது.

**சிறந்த பயிற்றுநருக்கான 'டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது'**

நன்கு செயல்படும் அரசு தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்கள் மற்றும் பயிற்றுநர்களை ஊக்குவிக்கும் வகையில் 'சிறந்த பயிற்றுநருக்கான டாக்டர். இராதாகிருஷ்ணன் விருது' உருவாக்கப்பட்டுள்ளது. சிறப்பாக செயலாற்றியவருக்கு ரூ.10,000/–க்கான தேசிய சேமிப்பு திட்ட பத்திரமும் நற்சான்றிதழும் வழங்கப்படுகிறது. கடந்த ஆறு வருடங்களில், 48 அலுவலர்கள் சிறந்த செயல்திறனுக்காக கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

### 3.29. பயிற்றுநர் பயிற்சி

அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்றுநர்கள், நவீன இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் குறித்து தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு தரமான பயிற்சியை அளிப்பதற்காகவும், தற்போதைய தொழில்நுட்பங்கள் மற்றும் இயந்திரங்கள் குறித்தான அறிவைப் பெருக்கிக்கொள்ளும் வகையிலும், மத்திய அரசின் கீழ் சென்னையில் செயல்படும் மத்திய பயிற்சி மையம், முன்னோடி பயிற்சி மையம் மற்றும் பெங்களூருவில் உள்ள உயர்தர தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் ஆகிய பயிற்சி மையங்களுக்கு பயிற்சிக்காக அனுப்பப்படுகின்றனர். 2017–18–ல், 416 பயிற்றுநர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

**மாநில தலைமையகத்தில் தேர்வுக்குழுமம்**

கைவினைஞர் பயிற்சி திட்டம், தொழிற்பழகுநர் பயிற்சி திட்டம் மற்றும் தொழிற்பள்ளிகள் ஆகியவற்றின் தேர்வுகள் ஆணையரகத்தில் உள்ள தேர்வு குழுமம் வாயிலாக இத்துறையால் நடத்தப்படுகின்றன. தேர்வு முடிவுகள் வெளியிடுதல் உள்ளிட்ட தேர்வு பணிகளை திறம்பட செய்திடும் வகையில் இத்தேர்வு குழுமம் ரூ.30.00 இலட்சம் செலவில் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் பலப்படுத்தப்பட்டுள்ளது.

## இருவழி பயிற்சி முறை

இருவழி பயிற்சி முறையின் கீழ், பயிற்சிக்கான கருவிகள் தளவாடங்கள் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள் உள்ளிட்ட கருத்தியல் பாடங்கள் மற்றும் அடிப்படை செய்முறை பயிற்சிகள் தொழிற்பயிற்சி நிலையங்களிலும், தொழில்சார்ந்த செய்முறை / ஆய்வக பயிற்சிகள் தொழிற்சாலைகளிலும் பாடத்திட்டத்தின்படி அளிக்கப்படுகின்றன. பயிற்சியாளர்களுக்கு செய்முறை பயிற்சி வழங்கும் தொழிற்சாலைகளுடன் தொழிற்பயிற்சி நிலையங்கள் புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலமாக இணைப்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

பயிற்சிக்கான காலமுறை விவரங்கள் பின்வருமாறு

| | |
|---|---|
| ஈராண்டு தொழிற்பிரிவு | 15 மாதங்கள் தொழிற்பயிற்சி நிலையத்திலும் மற்றும் 9 மாதங்கள் தொழிற்சாலைகளிலும் வழங்கப்படும். |
| ஓராண்டு தொழிற்பிரிவு | 7 மாதங்கள் தொழிற்பயிற்சி நிலையத்திலும் மற்றும் 5 மாதங்கள் தொழிற்சாலைகளிலும் வழங்கப்படும். |

இந்த ஆண்டு இருவழி பயிற்சி முறை ஒன்பது அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலும், இரண்டு தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

### 3.30. வளர்ச்சிக்கான புதிய முயற்சிகள்

**அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் தேவைக்கேற்ற புதிய தொழிற்பிரிவுகள் / கூடுதல் அலகுகள் அறிமுகப்படுத்துதல்**

மாநிலத்தின் பயிற்சியளிக்கும் திறனளவை அதிகரிக்கும் வகையில், **41** தேவைக்கேற்ற புதிய தொழிற்பிரிவுகள் / கூடுதல் அலகுகள் **33** அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ரூ.**29.94** கோடி செலவில் துவங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வருடமும் கூடுதலாக **1732** மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர்.

**சான்றிதழ் மெய்த்தன்மையை இணையதளம் மூலம் சரிபார்த்தல்**

இத்துறையால் வழங்கப்படும் தேசிய தொழிற் சான்றிதழ் / தேசிய தொழிற் பழகுநர் சான்றிதழ்களின் உண்மைத்தன்மையினை எளிதாக சரிபார்க்கும் வகையில், இணையதளம் மூலம் சரிபார்க்கும் திட்டம் ரூ.**40.00** இலட்சம் செலவில் அறிமுகப்படுத்தப்பட்டு, இதற்கான பணி எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மொழி மற்றும் மென்திறன் ஆய்வகங்கள்

பயிற்சியாளர்களுக்கு அவர்களது போட்டி திறனை அதிகரிக்கும் வகையில் மென்திறன் மொழித்திறன் மற்றும் அடிப்படைக் கணினித் திறன் ஆகியவற்றில் பயிற்சியளிப்பதற்காக 64 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மொழி மற்றும் மென்திறன் ஆய்வகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## மாவட்ட அளவில் திறன் ஒருங்கிணைப்பு அலுவலகம்

மாவட்ட அளவில் பல்வேறு திறன்பயிற்சி திட்டங்களை பிற துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்திடவும், கண்காணித்திடவும், உதவி இயக்குநர் தலைமையிலான மாவட்ட ஒருங்கிணைப்பு அலுவலகம் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், இத்துறையால் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படும் பல்வேறு திறன்பயிற்சி திட்டங்களை இந்த மாவட்ட அலுவலகங்கள் செயல்படுத்தி கண்காணிக்கும்.

## தொழிற்பழகுநர்களை தேர்வு செய்யும் முகாம்

அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகளை தொழிற்பழகுநர் சட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கு, தொழிற்பழகுநர்களை தேர்வு செய்யும் முகாம்கள் மண்டல அளவில் நடத்தப்படுகின்றன. இந்த வருடம்,

தொழிற்பழகுநர்களுக்கான முகாம் ஐந்து மண்டலங்களிலும் நடத்தப்பட்டு 3,187 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

**பயோமெட்ரிக் வருகை பதிவு முறை**

இத்துறையின் கீழ் உள்ள அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அலுவலகங்களில் பணியாற்றும் பணியாளர்கள் மற்றும் பயிற்சியாளர்கள் உரிய நேரத்தில் வருகை புரிவதை உறுதி செய்யும் பொருட்டு, பயோமெட்ரிக் வருகை பதிவு முறையை 2013 ஆம் ஆண்டு முதல் இத்துறை ரூ.58.25 இலட்சம் செலவில் செயல்படுத்தி வருகிறது.

**தமிழில் பாடப்புத்தகங்கள்**

இந்த வருடம், இத்துறை 14 தொழிற்பிரிவுகளுக்கான பாடப்புத்தகங்கள் தமிழில் வெளியிடப்பட்டு, அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. சென்னை நிமி நிறுவனத்தால் இதுவரை பாடப்புத்தகங்கள் வெளியிடப்படாத தொழிற்பிரிவுகளுக்கு தமிழில் பாடப் புத்தகங்கள் வெளியிட்டது இத்துறையால் எடுக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கை ஆகும்.

## மெய்நிகர் வகுப்பறைகள்

மெய்நிகர் வகுப்பறை என்பது இணையம், கணினி, காணொலி காட்சி (Video conferencing) சாதனங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட ஓர் உயர்தர கல்வி கற்கும் சூழலாகும். இந்த போதனை முறையின் மூலம் சிறந்த ஆசிரியர்களின் பயிற்றுவித்தலை அனைத்து நிலையங்களும் பகிர்ந்து கொள்ள முடியும் என்பதால் மலைப்பகுதி மற்றும் கிராமப்புறங்களில் அமைந்துள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்களுக்கு இது பெரும் உதவியாக இருக்கும். பயிற்சியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, கோவை மற்றும் திருச்சி அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் மைய பயிற்சி (Hub Centre) நிலையமும், மலைப்பகுதிகளில் உள்ள ஆனைக்கட்டி, கருமந்துறை, கொல்லிமலை, கூடலூர், ஜமுனாமரத்தூர் மற்றும் சங்கராபுரம் ஆகிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ஆரப்பயிற்சி (Spoke Centre) மையங்களும் ரூ.80.00 இலட்சம் செலவில் ஏற்படுத்த ஆணையிடப்பட்டுள்ளது.

## கணினி தொழில்நுட்ப கருவி மூலம் பற்றவைப்பர் பயிற்சி (Simulator Based Welding Training)

கணினி மூலம் கற்பிக்கும் கருவியானது, நவீன அணுகுமுறை மூலம் பற்றவைப்பர் பயிற்சியில் மேலும் நிபுணத்துவத்தை வழங்குகிறது. இது பற்றவைக்கும் செய்முறையை விரைவாகவும் பாதுகாப்பாகவும் கற்றுக்கொள்ளும் வழிமுறையாகும். அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பற்றவைப்பவர் தொழிற்பிரிவில் பயிலும் பயிற்சியாளர்களுக்கு இந்த புதிய அணுகுமுறையில் கற்பிக்கும் வண்ணம், 23 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் ரூ.251.00 இலட்சம் செலவில் பற்றவைப்பவர் தொழில் நுட்பத்தை கணினி மூலம் கற்பிக்கும் கருவி (Simulator) கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்பட்டுள்ளது.

## பயிற்றுநர்களுக்கான புத்தாக்கப்பயிற்சி

அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியின் தரத்தினை உயர்த்திடவும், பயிற்சியாளர்களின் தேர்ச்சி சதவிகிதத்தினை அதிகரித்திடவும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பணியாற்றும் 100 பயிற்றுநர்களுக்கு ரூ.5.00 இலட்சம் செலவில் உயர்தர தொழில்நுட்ப புத்தாக்கப்பயிற்சி சென்னையிலுள்ள உயர்நிலைப் பயிற்சி நிலையம் மூலம் அளிக்கப்பட்டுள்ளது.

## சிறந்த பயிற்சியாளர்களுக்கு உயர்நிலை பயிற்சி

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயின்று, தேர்ச்சி பெற்ற சிறந்த பயிற்சியாளர்கள் உயர்நிலை பயிற்சியினை பெற்றிட வாய்ப்பளிக்கும் விதமாகவும், அவர்களது தொழிற்பிரிவில் திறன்மேம்படுத்தும் நோக்கில் மேற்படிப்பை தொடர்ந்திடவும், முதற்கட்டமாக பொருத்துநர், கடைசலர், இயந்திர வேலையாள், மின்பணியாள், மின்கம்பியாள், கம்மியர் மோட்டார் வாகனம், கம்மியர் டீசல் மற்றும் பற்றவைப்பவர் ஆகிய எட்டு தொழிற்பிரிவுகளில் **25** பயிற்சியாளர்கள் வீதம் உயர்நிலை பயிற்சியினை மத்திய அரசின் பயிற்சி நிலையங்கள் மூலம் அளித்திட இந்த அரசு ஆணையிட்டுள்ளது. இப்பயிற்சியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் மாநில அரசு ரூ.**57.81** இலட்சம் செலவில் உயர்நிலையிலான சிறப்பு பயிற்சியை பயிற்சியாளர்களுக்கு வழங்குகிறது.

## பழங்குடியின தொழிற்பயிற்சி நிலையங்களில் சிறப்பு பணியமர்த்தும் அலகு

பழங்குடியினத்தவருக்கான அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் பயிற்சியாளர்கள் பயிற்சி முடித்த உடனேயே தொழிற்சாலைகளில் பணியில் சேர்ந்திடவும், அவர்களது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடவும்,

பிரத்யேகமாக செயல்பட்டு வரும் ஆனைக்கட்டி, கூடலூர், ஜமுனாமரத்தூர், கொல்லிமலை, கருமந்துறை, மற்றும் சங்கராபுரம் ஆகிய ஆறு அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழிற்சாலைகளை நேரடியாக வரவழைத்து பழங்குடியின பயிற்சியாளர்கள் வேலைபெறும் விதமாக வளாக நேர்காணல்கள் நடத்தப்படும். இந்த சிறப்பு பணியமர்த்தும் அலகினை ஏற்படுத்திட ரூ.15.00 இலட்சம், பழங்குடியின தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்களை தொழில் கண்காட்சிக்கு அழைத்துச் செல்லுதல்**

தொழில்துறையில் அதிக தேவை ஏற்பட்டுள்ள பகுதிகளில் பொருத்தமான திறன் பயிற்சி பெறவும், வாழ்க்கையை பிரகாசிக்கச் செய்யும் வாய்ப்புகளைப் பெறவும், அரசு தொழிற்பயிற்சி நிலைய பயிற்சியாளர்கள் கோவை, மதுரை மற்றும் சென்னை போன்ற இடங்களில் நடைபெறும் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான தொழில் கண்காட்சிகளுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். 2017–18–ஆம் ஆண்டில், ரூ.5.41 இலட்சம் செலவில், 1,861 பயிற்சியாளர்கள் தொழில் கண்காட்சிகளை பார்வையிட்டுள்ளனர்.

**தொழிற்சாலைகளின் பங்களிப்பு**

பயிற்றுநர்கள் / பயிற்சியாளர்களுக்கு புதிய தொழில்நுட்பம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும், நிறுவனங்களின் சமூக பொறுப்பு நடவடிக்கையின் கீழ் தொழிற்பயிற்சி நிலையங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும், இந்த துறையானது தொழிற்சாலைகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. இம்முறையில், கிண்டி, அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் டிஜிட்டல் போட்டோகிராஃப்பர், DTPO மற்றும் பற்றவைப்பவர் ஆகிய மூன்று தொழிற்பிரிவுகளுக்கான ரூ.35.00 இலட்சம் மதிப்புள்ள இயந்திரங்கள் பெங்களூருவில் உள்ள திருவாளர் பாரத் எலக்ட்ரானிக்ஸ் லிமிட் நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. கம்மியர் மோட்டார் வண்டி தொழிற்பிரிவை கற்பிக்கும் கிண்டி மற்றும் இராணிப்பேட்டை அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு திருவாளர் ஹூண்டாய் நிறுவனத்தால் சிற்றுந்துகள் வழங்கப்பட்டுள்ளன. திருவாளர் டைட்டன் இந்தியா நிறுவனம் மூன்று அரசு தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு வெல்டிங் சிமுலேட்டர் இயந்திரம் ரூ.35.00 இலட்சம் செலவில் வழங்கியுள்ளது. மாருதி சூசுக்கி நிறுவனம் அம்பத்தூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ஒரு மேம்படுத்தப்பட்ட திறன் பயிற்சி மையத்தினை உருவாக்கியுள்ளது. திருவாளர் யமகா மோட்டார்ஸ் இந்தியா

லிமிடெட்., நிறுவனம் அம்பத்தூர், கிண்டி மற்றும் செங்கல்பட்டு ஆகிய தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு இரண்டு என்ஜின்களை (ஒன்று ஸ்கூட்டர் – ஒன்று மோட்டார் சைக்கிள்) வழங்கியுள்ளது. மேலும், திருவாளர். டொயோட்டா லிமிடெட்., நிறுவனம் ரூ.15.00 இலட்சம் செலவில் வர்ணம் பூசும் அமைப்பு, பெட்ரோல் / டீசல் என்ஜின்களின் மாதிரிகள் மற்றும் பற்றவைப்பவர் பிரிவிற்கான இயந்திரங்கள் ஆகியவற்றை பரமக்குடி, அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு வழங்கியுள்ளது.

இத்துறையின் பயிற்சி பிரிவானது, தொழிற்சாலைகளின் தற்போதைய திறன் தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக, நவீன தொழில்நுட்பங்களை நமது மாநில இளைஞர்களுக்கு அறிமுகப்படுத்தும் வகையிலான பயிற்சிகளை முழுமுனைப்புடன் வழங்கிவருகிறது. மனிதவள திறனில் காணப்படும் இடைவெளியை மதிப்பீடு செய்து, அதனை நேர் செய்யும் வகையில் புதிய தொழிற்பிரிவுகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இளைஞர்களை திறன் பெற்றவர்களாகவும் வேலைவாய்ப்பை பெற தகுதியானவர்களாவும் உருமாற்றும் பணியினை சிரமேற்கொண்டு செய்து வருகிறது.

# 4. தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், தொழில் நிறுவனங்களின் மனிதவளத் தேவைகளை பூர்த்தி செய்வதுடன், திறன் பயிற்சி வழங்கி தமிழ்நாட்டை திறன் கேந்திரமாக உருவாக்கும் நோக்கத்துடன் ஏற்படுத்தப்பட்டது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், மாநிலத்தின் திறன் பயிற்சிகளுக்கான ஒருங்கிணைப்பு முகமையாக செயல்படுவதுடன், தொழில் திறன் பெற்றவர்களின் எண்ணிக்கையையும் தரத்தையும் உயர்த்தும் வகையில் மாநிலத்தின் பயிற்சி நிறுவனங்களையும் தொழில் துறையினையும் திறம்பட ஒருங்கிணைக்கிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், மத்திய, மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் புகழ்பெற்ற தனியார் நிறுவனங்களுடன் இணைந்து சந்தை சார்ந்த வேலைவாய்ப்புடன் தொடர்புடைய பயிற்சிகளை வழங்குகிறது.

## 4.1. பயிற்சி பாடத்திட்டங்கள் மற்றும் கட்டணத்தில் நிலையான நெறிமுறைகளை கடைபிடித்தல்

தேசிய திறன் கட்டமைப்பால் (NSQF) அங்கீகரிக்கப்பட்ட பாடங்கள், கால அளவு, பயிற்சிக்

கட்டணம், மதிப்பீட்டு கட்டணம் மற்றும் தங்கும் விடுதி வசதி உட்பட மத்திய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தால் (MSDE) அறிவிக்கப்பட்ட பொதுவான நெறிமுறைகளைக் கடைபிடிப்பதன் மூலம் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் தேசிய தரத்துடன் பயிற்சி அளிப்பதை உறுதி செய்கிறது. தேர்ந்தெடுக்கப்படும் திறன் பயிற்சி நிறுவனங்களில் தேசிய திறன் மேம்பாட்டு கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தகுதி தொகுப்புகளை (Qualification Pack), திறன் பயிற்சிப்பாடங்களாக வழங்குவதும் உறுதி செய்யப்படுகிறது. மேலும், பயிற்சியை வெற்றிகரமாக முடிக்கும் பயிற்சியாளர்களில் குறைந்தபட்சம் 70% பயிற்சியாளர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதை அனைத்து பயிற்சி நிறுவனங்களுக்கும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் கட்டாயமாக்கியுள்ளது.

**நடுநிலையான மதிப்பீடு மற்றும் சான்றளித்தல்**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மூலம் வழங்கப்படும் அனைத்து திறன் பயிற்சிகளிலும் சுதந்திரமான மற்றும் நடுநிலையான மதிப்பீடு செய்து சான்றளிப்பதை உறுதி செய்வதற்காக மாநில தொழிற்பயிற்சி குழுமம் (State Council

for Vocational Training) அல்லது துறை திறன் குழுமம் (Sector Skill Council) வாயிலாக திறன் மதிப்பீடு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கப்படுகிறது.

**பயிற்சி நிறுவனங்களைக் கண்டறிதல்**

திறன் பயிற்சி வழங்க முன்வரும் நிறுவனங்களிடமிருந்து விருப்பம் கோரும் விண்ணப்பங்கள் (Expression of Interest) பெறப்பட்டு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இணை இயக்குநர்களால் அப்பயிற்சி நிறுவனங்களில் நேரடி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பயிற்சி நிறுவனங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன. தேசிய திறன் தகுதி கட்டமைப்பின் கீழ் குறுகிய கால பயிற்சிகளை அளிக்கும் பொருட்டு தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் இதுவரை 629 மத்திய, மாநில அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

## 4.2. வேலைவாய்ப்பு அதிகமுள்ள துறைகளில் மாவட்ட வாரியாக பயிற்சியளித்தல்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், தானியங்கி, பசுமைப்பணிகள், சுகாதாரம், ஜவுளி மற்றும் ஆயத்த ஆடை,

தகவல் தொழில் நுட்பம், வேளாண்மை, தோல், அழகு கலை, வங்கி, காப்பீடு மற்றும் நிதி சேவை, ஊடகம், கட்டுமானம், சில்லரை வர்த்தகம், மின்னணுவியல், தொலைத் தொடர்பு, உணவு பதனிடுதல், இராசாயனம் மற்றும் பிளாஸ்டிக்ஸ், இலகு பொறியியல், இரத்தினம் மற்றும் ஆபரணம், சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் ஆகிய துறைகளில் திறன் பயிற்சிகளை வழங்குகிறது. **2017–18–**ஆம் ஆண்டில் மாவட்ட வாரியாக திறன் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெற்றோர் விவரங்கள் பின்வருமாறு :

| வ. எண் | மாவட்டம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரியலூர் | 1178 |
| 2 | சென்னை | 19088 |
| 3 | கோயம்புத்தூர் | 2988 |
| 4 | கடலூர் | 3297 |
| 5 | தர்மபுரி | 2442 |
| 6 | திண்டுக்கல் | 2320 |
| 7 | ஈரோடு | 3724 |
| 8 | காஞ்சிபுரம் | 2271 |
| 9 | கன்னியாகுமரி | 527 |
| 10 | கரூர் | 3009 |
| 11 | கிருஷ்ணகிரி | 1015 |
| 12 | மதுரை | 3458 |
| 13 | நாகப்பட்டினம் | 1973 |

| வ. எண் | மாவட்டம் | பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை |
|---|---|---|
| 14 | நாமக்கல் | 2503 |
| 15 | பெரம்பலூர் | 627 |
| 16 | புதுக்கோட்டை | 982 |
| 17 | இராமநாதபுரம் | 936 |
| 18 | சேலம் | 2716 |
| 19 | சிவகங்கை | 1922 |
| 20 | தஞ்சாவூர் | 3334 |
| 21 | நீலகிரி | 425 |
| 22 | தேனி | 1570 |
| 23 | திருவள்ளூர் | 3631 |
| 24 | திருவண்ணாமலை | 856 |
| 25 | திருவாரூர் | 1051 |
| 26 | தூத்துக்குடி | 1762 |
| 27 | திருநெல்வேலி | 1787 |
| 28 | திருப்பூர் | 3197 |
| 29 | திருச்சி | 2887 |
| 30 | வேலூர் | 3663 |
| 31 | விழுப்புரம் | 3069 |
| 32 | விருதுநகர் | 1619 |
| 33 | தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் பயிற்சி நிறுவனங்களின் வாயிலாக விடுதியில் தங்கி பயிற்சி பெறும் பிற்படுத்தப்பட்ட / மிகவும் பிற்படுத்தப்பட்ட பயிற்சியாளர்கள் | 19615 |
| **மொத்தம்** | | **105442** |

**2017–18–**ஆம் ஆண்டில், துறை வாரியாக திறன் பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை விவரங்கள் பின்வருமாறு :

| **வ. எண்** | **துறை** | **பயிற்சி பெற்றோர் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | தகவல் தொழில் நுட்பம் | 7641 |
| 2 | தொலை தொடர்பு | 10358 |
| 3 | ஆயத்த ஆடை | 17445 |
| 4 | கட்டுமானம் | 9297 |
| 5 | சரக்கு நகர்வு மேலாண்மை | 5274 |
| 6 | ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு | 1763 |
| 7 | பிளாஸ்டிக்பொறியியல் | 1270 |
| 8 | சில்லரை வர்த்தகம் | 2270 |
| 9 | தோல் | 1878 |
| 10 | விருந்தோம்பல் | 1220 |
| 11 | ஜவுளி | 5726 |
| 12 | அழகு கலை | 2394 |
| 13 | சுகாதாரம் | 5209 |
| 14 | இலகு பொறியியல் | 4288 |
| 15 | வங்கி, நிதி மற்றும் காப்பீடு சேவைகள் | 2316 |
| 16 | தானியங்கி | 3367 |
| 17 | வேளாண்மை | 1335 |
| 18 | மென்திறன் | 19653 |
| 19 | குளிரூட்டி (ம) குளிர்சாதன பெட்டி பழுதுபார்த்தல் | 1132 |
| 20 | இரத்தினங்கள் மற்றும் ஆபரணங்கள் | 720 |
| 21 | பிற துறைகள் | 886 |
| | மொத்தம் | **105442** |

### 4.3. மாநிலம் முழுவதும் திறன் விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

வேலைவாய்ப்பு அலுவலகங்களால் நடத்தப்படும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்கள் இளைஞர்களுக்கு தனியார் துறையில் வேலைவாய்ப்பினை பெற்று தருவதற்கும், திறன் பயிற்சி பெறுவதற்கு பதிவு செய்வதற்குமான இரட்டை நோக்கத்துடன் செயல்படுகின்றன. தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் வழங்கப்படும் உரிய திறன் பயிற்சிகளுக்கு இளைஞர்கள் பதிவு செய்யப்படுவதற்காக இம்முகாம்களில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் முக்கிய திறன் பயிற்சி நிறுவனங்களின் அரங்குகள் அமைக்கப்படுகின்றன.

மாவட்டந்தோறும் வேலைவாய்ப்பு அலுவலகங்களை நாடும் பதிவுதாரர்களுக்கு திறன் பயிற்சிகளுக்கான பதிவு மேற்கொள்ளப்படுகிறது. பயிற்சி குறித்த ஆலோசனையும் வழங்கப்படுகிறது. மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகங்கள் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மட்டுமின்றி நடமாடும் திறன் பயிற்சி ஊர்திகள் மூலமாகவும் விளம்பர துண்டுப் பிரசுரங்கள் மற்றும் குறும்படங்கள் மூலமாகவும் திறன் பயிற்சி குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது. தமிழகத்தின் 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் திறன்

முகாம்கள் நடத்தப்பட்டு பதிவுதாரர்கள் உரிய வேலைவாய்ப்பு மற்றும் வாழ்க்கை தரம் உயர்வதற்கான திறனைப் பெற்றுக் கொள்ள ஏதுவாக திறன் பயிற்சிக்கு பதிவு செய்யப்படுவார்கள்.

### 4.4. திறன் பயிற்சிக்காக இணையம் வழி பதிவு செய்தல்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் www.tnskill.tn.gov.in என்னும் இணையதளமானது திறன் பயிற்சியில் தொடர்புடைய அனைவரும் செயலாற்ற ஒரு பிரத்தியேக பயன்பாட்டு தளமாக இயங்கி வருகிறது. பயிற்சிகளின் விவரங்கள், பயிற்சியின் காலஅளவு மற்றும் நடைமுறையிலுள்ள பாட விவரம் ஆகியவற்றைப் பார்வையிடுவதோடு இணையம் வாயிலாக பயிற்சிக்கு பதிவு செய்து கொள்ள இவ்விணையதளம் உதவுகிறது. தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சிநிறுவனங்களும், திறன் பயிற்சியில் சேர இவ்விணையதளத்தில் பதிவு செய்துள்ள பதிவுதாரர்களின் விவரங்களைத் தொடர்பு கொண்டு பயிற்சியில் சேர்த்துக் கொள்ளலாம். மேலும் இதன் மூலம் அனுமதிக்கப்பட்ட பயிற்சி குழுக்களை (Training Batches) ஏற்படுத்தி இணையதளத்தில் பதிவு செய்து கொண்டு பயிற்சியின் போது

கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் இந்த இணையதளம் வழிவகை செய்கிறது.

திறன் பதிவு தொகுதி (Skill Registry), பயிற்சியினை வெற்றிகரமாக முடித்து சான்றிதழ் பெற்ற அனைத்து திறன் பயிற்சியாளர்களின் சுய விபரங்கள் அடங்கிய ஒரு மைய இடமாக அல்லது களஞ்சியமாகத் திகழ்கிறது. எதிர்காலத்தில் கூடுதலாக தேசிய தொழிற்சான்றிதழ் பெற்றவர்கள், தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் பெற்றவர்கள், பட்டயம் பெற்றவர்கள் மற்றும் பிற துறைகளின் மூலம் திறன் பயிற்சி பெற்றவர்கள் ஆகியோரது சுய விவர தகவல்களுடன் இத்திறன் பதிவு தொகுப்பு மேம்படுத்தப்படும்.

## 4.5. பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளில் உயர்தொழில்நுட்ப பயிற்சி

பொறியியல் மற்றும் பல்தொழில்நுட்ப கல்லூரிகளில் பயின்று தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு உயர் தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்குவதற்காக தமிழ்நாடு அரசு ஒரு திறன்மிகு மையம் (Centre of Excellence) மற்றும் 5 இணைப்பு தொழில்நுட்ப திறன் பயிற்சி மையங்களை அமைக்கிறது. இந்நிலையங்கள் பொது மற்றும் தனியார் கூட்டமைப்பாக

(PPP) ரூ.546.84 கோடி திட்ட மதிப்பில், மாநில அரசின் பங்கீடாக ரூ.54.68 கோடி நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகமானது தானியங்கி மற்றும் ரோபோடிக்ஸ் துறையில் உலகளாவிய முன்னணி நிறுவனமான சீமென்ஸ் மற்றும் அண்ணா பல்கலைகழகத்துடன் கை கோர்க்கிறது. இன்றைய தொழில் நிறவனங்களின் தேவைக்கேற்ப தொழில்நுட்ப மாணவர்களின் வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்காகவும், உயர் தொழில் நுட்ப திறன் பயிற்சிகளை வழங்குவதற்காகவும் வடிவமைப்பு, தானியங்கி, ரோபோடிக்ஸ் போன்ற உயர் பயிற்சிகள் அண்ணா பல்கலைக்கழகத்தை மையமாகக் கொண்டு, அண்ணா பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும். காஞ்சிபுரம், விழுப்புரம், ஆகிய இடங்களில் உள்ள அண்ணா பல்கலைக்கழக கல்லூரிகள், வேலூரிலுள்ள தந்தை பெரியார் அரசு தொழில்நுட்ப கல்லூரி, தரமணியிலுள்ள மத்திய பல்தொழில்நுட்ப கல்லூரி மற்றும் ஆவடியிலுள்ள முருகப்பா பாலிடெக்னிக் (உதவிபெறும்) கல்லூரி ஆகியவை இதன் கிளைகளாக செயல்படும்.

### 4.6. சிறப்பு திறன் பயிற்சி திட்டங்கள்

'அம்மா இரு சக்கர வாகன பழுதுபார்த்தல் பயிற்சி' தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்களில் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டு கழக நிதியுடன் வழங்கப்பட்டு வருகிறது. 20,000 நகர்புற இளைஞர்களுக்கு சேவைத்துறையில் குறுகிய கால திறன் பயிற்சிகள் திறன் மேம்பாட்டு கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் வாயிலாக வழங்கப்பட்டு வருகின்றன.

'அம்மா திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டத்தின்' கீழ் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் வேலையுடன் கூடிய பயிற்சி பெறும் 13,250 இளைஞர்களுக்கு பிரதி மாதம் ரூ.2000 ஊக்கத்தொகையாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தினால் வழங்கப்பட்டு வருகிறது.

### 4.7. அனுபவத்தின் மூலம் பெற்ற திறமையை அங்கீகரித்து சான்றிதழ் வழங்குதல் (Recognition of Prior Learning - RPL)

அனுபவத்தின் மூலம் திறன் பெற்ற கைவினைஞர்கள் மற்றும் பணியாளர்கள் தங்கள் அனுபவத்தின் மூலம் பெற்ற திறமைகளை மதிப்பீடு செய்து சான்றிதழ் வழங்கி அங்கீகரிக்கப்படுகின்றனர். கட்டுமானம், விருந்தோம்பல்,

தானியங்கி ஆயத்த ஆடை ஆகிய துறைகளில் பணிபுரியும் பணியாளர்கள் அனுபவத்தின் மூலம் பெற்ற திறனை மதிப்பீடு செய்ய தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **2017–18–ஆம்** ஆண்டில், அனுபவத்தின் மூலம் பெற்ற திறமையை அங்கீகரித்து சான்றிதழ் வழங்கும் (RPL) திட்டத்தின் கீழ் கட்டுமானம், ஆயத்த ஆடை, தானியங்கி, விருந்தோம்பல், தோல் மற்றும் சரக்கு நகர்வு மேலாண்மை (Logistics) ஆகிய துறைகளில் **10,464** பணியாளர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் சான்றிதழ் வழங்கியுள்ளது.

பொதுப் பணித்துறை, குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம், உள்ளாட்சி அமைப்புகள் போன்றவற்றில் மேற்கொள்ளப்படும் கட்டுமான ஒப்பந்த பணிகளில் பணியின் தரம் மற்றும் பணியிடங்களில் விபத்துக்களை தவிர்க்கும் பொருட்டு, அனுபவத்தின் மூலம் பெற்ற திறமையை அங்கீகரித்து சான்றிதழ் பெற்ற தொழிலாளர்களை பணி அமர்த்திட வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளது.

## 4.8. PMKVY 2.0 கீழ் மாநில அரசால் செயல்படுத்தப்படும் திறன் பயிற்சித் திட்டம்

இந்தியாவின் மக்கள் தொகையில் **62%** நபர்கள் உழைக்கும் வயதினராகவும், **54%** நபர்கள்,

25 வயதுக்குட்பட்டவர்களாகவும் உள்ள படியால் வேலைவாய்ப்பு பெறும் வகையில் அவர்களது திறனை மேம்படுத்துவது ஒரு சவாலாக இருந்து வருகிறது. இந்த சவாலை எதிர்கொள்ள 2015–ஆம் ஆண்டு திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோருக்கான புதிய அமைச்சகம் இந்திய அரசால் உருவாக்கப்பட்டு, திறன் தொடர்பான நடவடிக்கைகளை அதிகரிக்கும் நோக்கில் பல்வேறு இலக்குகளுடன் கூடிய திறன் மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்பு பெருக்கும் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தின் பல்வேறு குறிக்கோள்களில் மாநிலங்களின் பங்கேற்பு மற்றும் திறன் கட்டமைப்பு சார்ந்த, முதன்மை திறன் பயிற்சித் திட்டமான பாரத பிரதமரின் கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY 2.0) திட்டமும் ஒன்றாகும். இது பாரத பிரதமரின் கௌஷல் விகாஸ் யோஜனா 1.0 திட்டத்தின் மேம்படுத்தப்பட்ட மாற்றங்களுடன் கூடிய படிவமாகும்.

மத்திய அரசின் பாரத பிரதமரின் கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY 2.0) திட்டம் மாநில அரசுகளுடன் இணைந்து இரு கூறுகளாக செயல்படுத்தப்படுகிறது.

1. மத்திய அரசின் ஆதரவுடன் மத்திய அரசால் நிர்வகிக்கப்படும் திட்டம்(Centrally Sponsored Centre Managed (CSCM)). பாரத பிரதமரின் கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY 2.0)–ன் 75%க்கான நிதி தேசிய திறன் மேம்பாட்டு கழகம் (NSDC) மூலமாக மேற்கொள்ளப்படும் திறன் மேம்பாட்டு பயிற்சி திட்டங்களுக்கு திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் துறைக்கு வழங்கப்படும்.

2. மத்திய அரசின் ஆதரவுடன் மாநில அரசால் நிர்வகிக்கப்படும் திட்டம் (Centrally Sponsored State Managed (CSSM)): பாரத பிரதமரின் கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY 2.0) திட்டத்தின் 25% நிதி மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

மத்திய அரசின் ஆதரவுடன் மாநில அரசால் நிர்வகிக்கப்படும் (CSSM) திட்டப்பிரிவின் கீழ் பயிற்சியினை செயல்படுத்த ஏதுவாக மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகமானது மாநில அரசின் பங்களிப்பு, செயல்பாடு, நிதி ஆதரவு, திட்ட செயலாக்கம் மற்றும் கண்காணிப்பு முறை குறித்து வழிகாட்டல் விதிமுறைகளை வெளியிட்டுள்ளது.

பாரத பிரதமரின் கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY 2.0) CSSM திட்டத்தின் கீழ் 1,40,880 நபர்களுக்கு

(ஆண்டிற்கு 46,960 நபர்கள் வீதம்) ரூ.20658.64 இலட்சம் (வருடத்திற்கு ரூ.6886.21 இலட்சம்) செலவில் திறன் பயிற்சி அளித்திட விதிமுறைகளின்படி, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் மத்திய அரசிற்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அக்கருத்துரு முழுமையாக திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகத்தினால் ஒப்புதல் வழங்கப்பட்டு ரூ.34.43 கோடி முதல் தவணையாக பாரத பிரதமரின் கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY 2.0) (2016-20) திட்டத்தினை தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மூலம் செயல்படுத்துவதற்காக ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்ட செயல்பாட்டிற்கு, அரசாணை (நிலை) எண்.211, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 20.12.2017–ல் முதல் தவணையாக ரூ.34.43 கோடி தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

31.3.2018 அன்றுள்ளவாறு, இத்திட்டத்தில் விண்ணப்பித்தவர்களில் 210 பயிற்சி அளிப்பவர்களும் 88 பயிற்சி நிலையங்களும் எஸ்.டி.எம்.எஸ் இணையத்தில் (SDMS Portal) தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 2416 நபர்களுக்கு

பயிற்சி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டு, பயிற்சிகள் துவக்கப்பட்டுள்ளன.

### 4.9. சங்கல்ப் திட்டம் (SANKALP)

சங்கல்ப் எனும் திட்டம் மத்திய அரசால் உலக வங்கியின் ரூ.4455 கோடி நிதி உதவியுடன் மாநில அரசுகள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் தொழில் நிறுவனங்களின் (பெரு நிறுவனங்களின் சமூக நல பங்களிப்பு நிதி) பங்களிப்புடன் கூடிய பயன் சார்ந்து (Outcome Based) செயல்படுத்தப்படும் திட்டமாகும்.

தேசிய மற்றும் மாநில அளவில் பயிற்சி நிறுவனங்களின் அமைப்பு முறைகளை வலுப்படுத்த தரமான திறன் பயிற்றுநர்களையும், மதிப்பீட்டாளர்களையும் உள்ளடக்கிய குழு கட்டமைப்பை உருவாக்கி அனைத்து திறன் பயிற்சித் திட்டங்களையும் ஒருங்கிணைத்து சமூகத்தின் பின்தங்கியவர்களுக்கு சிறப்பான பயிற்சிகளை கிடைக்கச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் கீழ் மாநிலங்களுக்கு, அமைப்பு முறையினை வலுப்படுத்துவதற்கான மானியம், (System Strengthening Grants); சேர்க்கை மானியம் (Inclusive Grants) என இருவகையான மானியங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

(அ) அமைப்பு முறை வலுப்படுத்துவதற்கான மானியம் மாநில அளவில் பயிற்சி நிறுவனங்களை சிறப்பு மிக்கதாக உருவாக்கவும் மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் நடைபெறும் அனைத்து திறன் பயிற்சி செயல்பாடுகளை ஒருங்கிணைக்க மாநில திறன் மேம்பாட்டு நிறுவனங்களை ஏற்படுத்தவும் பயன்படுத்தப்படும்.

(ஆ) சேர்க்கை மானியமானது விளிம்பு நிலையில் உள்ள பெண்கள் பட்டியல் இனத்தார், பழங்குடியினர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் பங்களிப்பை மேம்படுத்துவதை கவனத்தில் கொண்டு பயன்படுத்தப்படும்.

இத்திட்டத்தில் மாநிலத்தின் 40% பங்கினை உறுதி செய்து, மத்திய அரசுக்கு மாநில அரசுகளால் ஒப்பந்த கடிதம் வழங்கப்பட வேண்டும். மேலும் திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு செயல்பாடு மற்றும் முடிவுகளின் அடிப்படையில் மானியம் பெறும் ஏற்பாட்டினை ஏற்றுக் கொள்ள வேண்டும் என அரசு ஒப்புதல் கடிதம் அளித்து, இத்திட்டத்தினை செயல்படுத்த விருப்பம் தெரிவித்துள்ளது.

### 4.10. மாநில அளவில் திறன் இடைவெளி குறித்த ஆய்வு

நாட்டின் சிறந்த தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சியடைந்த மாநிலங்களில் ஒன்றான தமிழகத்தில் வருடந்தோறும் கல்லூரிகளின் மூலம் படித்த இளைஞர்கள் அதிக அளவில் உருவாகி வருகின்றனர். இருப்பினும்

கிடைக்கும் வேலைவாய்ப்புகள் மற்றும் வேலைவாய்ப்பு சந்தையின் திறன் தேவைகள் ஒன்றோடொன்று பொருத்தமின்றி இருப்பதால் பெரும்பாலான வேலைவாய்ப்பற்றோரின் வேலை பெறும் திறன் திருப்திகரமாக இல்லை. இப்பிரச்சனைக்கு தீர்வு காண தொழில் துறையின் தேவை மற்றும் இளைஞர்களின் திறன் நிலை ஆகியவற்றைத் தெரிந்துக் கொள்ள 32 மாவட்டங்களிலும் தொழில்முறை திறன் இடைவெளி குறித்த ஆய்வு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த திறன் இடைவெளி ஆய்வு மாவட்டந்தோறும் தொழில் துறை எதிர்பார்ப்புகளான திறன், தகுதி, தொழில்நுட்ப அறிவு, மொழித்திறன் மற்றும் மென்திறன் ஆகியவற்றினை அறிவதாக இருக்கும். இளைஞர்களிடையே நடத்தப்படும் இந்த ஆய்வு பகுதி வாரியாக, துறை வாரியாக, தொழில் வாரியாக எழக்கூடிய திறன் தேவை மற்றும் திறன் இருப்பு குறித்தும் எதிர்வரும் 5 முதல் 15 ஆண்டுகளில் எதிர் நோக்கப்படும் திறன் சார்ந்த வேலைவாயப்புகள் குறித்தும் அறிந்து கொள்வதை நோக்கமாக கொண்டிருக்கும். மேற்கண்ட ஆய்வின் அடிப்படையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் தற்போது இருக்கக்கூடிய திறன் தொகுப்புகள், தொழிற்சாலைகளின் திறன் தேவைகளைக் கணக்கில் கொண்டு திறன் பயிற்சிகள் வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## 4.11. ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் – உயர் திறன் பயிற்சி மையங்கள் – தமிழ்நாடு முதலீட்டு மேம்பாட்டுத் திட்டம் பகுதி–2

தமிழ்நாட்டின் திறன் பெற்ற மனித வளத்தை அதிகரிக்கும் நடவடிக்கைகளில் ஒன்றாக தமிழ்நாடு அரசு, கீழே பட்டியலிட்ட 5 துறைகளில் உயர் திறன் மேம்பாட்டு மையங்களை ரூ.100.00 கோடி செலவில் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (Japan International Cooperative Agency) உதவியுடன் அமைக்க நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (Japan International Cooperative Agency) மற்றும் தமிழக அரசுக்கு இடையே 50:50 என்ற விகிதாசார அடிப்படையில் ரூ.50.00 கோடி ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் பங்களிப்புடனும் மற்றும் ரூ.50.00 கோடி மாநில அரசின் பங்களிப்புடனும் செயல்படுத்தப்படும்.

1. தானியங்கி மற்றும் தானியங்கி உபகரணங்கள்
2. சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்
3. மருத்துவம் மற்றும் சுகாதாரம்
4. சரக்கு நகர்வு மேலாண்மை மற்றும் போக்குவரத்து
5. பொறியியல். சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள்

முன்மொழியப்பட்டுள்ள உயர் பயிற்சி மையங்கள் மேற்காணும் துறைகளில் உயர் தொழில் நுட்ப திறன்களை வழங்கும் திறன் மிகு மையங்களாக செயல்பட உள்ளன. மேலும் இம்மையங்கள் அந்தந்த துறைகளில் ஏற்கனவே செயல்பாட்டில் உள்ள பயிற்சி வசதிகளை ஒருங்கிணைக்கும் முகமையாகவும் செயல்படும்.

இம்மையங்கள் கீழ்காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்

- உயர் நிலை திறன் பயற்சி வழங்குதல்
- பாடத் திட்டங்களை மேம்படுத்துவதற்காக தொழில் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுதல்.
- துறை சார்ந்த குறிப்பான பாடதிட்டங்கள்
- பயிற்றுநர்களுக்கு பயிற்சி வழங்குதல்
- பயிற்சி அலகுகளை உருவாக்கவும் உயர்நிலை திறன் பயிற்சி வழங்கவும் வெளிநாட்டு முகமைகளுடன் இணைந்து செயலாற்றுதல்.

மேற்காணும் செயல்பாடுகள் திறன் பயற்சியினை சர்வதேச தரத்திற்கு உயர்த்தி, தமிழ்நாட்டு இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கான மேம்பட்ட தகுதியைப் பெற்று உள்நாடு மற்றும் அயல்நாட்டில் வேலைவாய்ப்புகளைப் பெறுவதை உறுதி செய்கிறது.

திறன் சூழலில் (Skill Eco System) தொடர்புடைய அனைவரின் முழுமையான பங்களிப்பையும் ஒருங்கிணைத்து

முறை சார்ந்த மற்றும் முறைசாரா நிறுவனங்களின் திறன் தேவைகளை நிறைவு செய்து அதன் மூலம் மாநிலத்தின் மனித வளத்தினை மேம்படுத்தும் வகையில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் ஒரு முழுமையான செயல் திட்டத்தினை நடைமுறைபடுத்தி வருகிறது.

## 5. அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

வெளிநாட்டில் வேலை தேடுபவர்களுக்கு உதவுவதற்காகவும் அவர்களை போலி முகவர்களிடம் ஏமாறாமல் தடுப்பதற்காகவும் அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் **1978**–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அயல் நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் இந்திய கம்பெனிகள் சட்டம், **1956**–ன் படி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனம் இந்திய குடிபெயர்வோர் சட்டம், **1983**–ன்படி வெளிநாட்டில் வேலைதேடும் குடிபெயர்வோரை வேலைநிமித்தமாக அனுப்ப உரிமம் பெற்றுள்ளது.

இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.**15.00** லட்சமும், அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ.**50.00** லட்சமும் ஆகும்.

### 5.1. பதிவு

வெளிநாட்டு வேலை தேடும் வேலைநாடுநர்கள் https://www.omcmanpower.com என்ற வலைதளத்தின் மூலம் பதிவு செய்துகொள்கின்றனர். இந்நிறுவனத்தின் ஆன்லைன் மூலம் செய்யப்படும் பதிவு மே–**2017** முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மார்ச் **2018** அன்றமைந்தவாறு

**2021** பதிவுதாரர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வேண்டி தங்களது பெயரை பதிவு செய்துள்ளனர்.

**5.2. பணியமர்த்தல்**

**அ) வெளிநாடு**

இந்நிறுவனம் தொடங்கப்பட்ட **1978–**ஆம் ஆண்டு முதல் மார்ச் **2018** வரை, **9941** பதிவுதாரர்கள் பல்வேறு நாடுகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். **2017–18–**ஆம் நிதியாண்டில், **643** மனுதாரர்கள் சவூதி அரேபியா, குவைத், துபாய், பஹ்ரைன் மற்றும் இதர நாடுகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இப்பணியமர்த்தலில் பெரும்பாலானவர்கள் செவிலியர்கள் ஆவர். இவர்கள் வெளிநாடுகளிலுள்ள முன்னணி அரசு மற்றும் தனியார் பெருநிறுவன மருத்துவமனைகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

**ஆ) உள்நாடு**

உள்நாட்டு வேலைக்கான பணியமர்த்தல் பிரிவு, ஏப்ரல் **2017–**ல் துவக்கப்பட்டது. மார்ச் **2018** முடிய **592** ஒப்பந்த பணியாளர்கள், தமிழ்நாட்டின் அரசு துறைகளில் உள்ள பல்வேறு பிரிவுகளில் பணியமர்த்தப்பட்டுள்ளனர். இப்பணியமர்த்தல் மூலம் சேவைக் கட்டணமாக

ரூ.7.02 இலட்சத்தினை மார்ச் 2018 முடிய இந்நிறுவனம் ஈட்டியுள்ளது.

## 5.3. அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் செயல்பாடுகள்

வெளிநாட்டு வேலைக்கான பணியமர்த்தலை தவிர்த்து, இந்நிறுவனம் கீழ்க்காணும் செயல்களையும் செய்து வருகிறது :

அ) உள்நாட்டு வேலையளிப்போருக்கு தேவைப்படும் மனிதவளத்தினை அளித்தல்

ஆ) வரையறுக்கப்பட்ட துறைகளுக்கு விமானப் பயணச்சீட்டு அளித்தல்

இ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு தொடர்பான விழிப்புணர்வு / பதிவு முகாம்கள் நடத்துதல்

ஈ) வெளிநாட்டு வேலைவாய்ப்பு பற்றிய வழிகாட்டுதல் நடவடிக்கைகள்

உ) சான்றிதழ்கள் மீது வெளி விவகார அமைச்சகத்தின் சான்றொப்பம் பெற உதவி புரிதல்

ஊ) வெளிநாட்டு வேலைநாடுநர்களுக்கு ஆதரவுக்கரம் அளித்தல்

**வருவாய்**

2017–18–ஆம் நிதியாண்டில் அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனத்தின் வருவாய் ரூ.1.48 கோடியாகவும் மற்றும் இலாபம் ரூ.54 இலட்சமாகவும் (தணிக்கைக்கு முந்தைய) கணக்கிடப்பட்டுள்ளது.

**ஈவுத் தொகை**

2017–18–ஆம் நிதியாண்டில் இந்நிறுவனத்தால் அரசுக்கு அளிக்கப்பட வேண்டிய ஈவுத்தொகை ரூ.4.50 இலட்சமாக கணக்கிடப்பட்டுள்ளது.

**5.4. புதிய முயற்சிகள்**

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் தன் செயலாக்கத்தினை மேம்படுத்தும் பொருட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பினை நாடும் இளைஞர்களுக்கு தொழில்நுட்பத் திறன் மற்றும் மென்திறன் பயிற்சிகளை தமிழக அரசின் திறன் மேம்பட்டு கழகத்தின் உதவியுடன் இணைந்து வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

## 6. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்

## (தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம்)

தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் என்பது அமைப்பு சார்ந்த நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் பாதுகாப்பு அளிக்கும் ஓர் ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்பு திட்டமாகும். இத்திட்டம் 1948–ஆம் ஆண்டு பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட தொழிலாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டத்தில் உள்ள விதிமுறைகளின் படி தொழிலாளர் அரசு ஈட்டுறுதிக் கழகம் எனும் கூட்டாண்மை அமைப்பால் நிர்வகிக்கப்படுகிறது. இச்சட்டத்தில் கீழ் பதிவு செய்துள்ள காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு இவ்வியக்ககம் மூலம் மருத்துவ வசதி அளிக்கப்படுகின்றன.

நோய்கள், மகப்பேறு, தொழில்முறை நோய்கள் காரணமாக ஏற்படும் இயலாமை, மரணம் போன்ற நிகழ்வுகளில் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் விதமாக வடிவமைக்கப்பட்டு காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு மருத்துவ வசதிகளை இத்திட்டம் அளிக்கிறது. பத்து மற்றும் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள்

பணிபுரியும் தொழிற்சாலைகள் மற்றும் பிற நிறுவனங்களுக்கு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் பொருந்தும். இத்திட்டம் காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோருக்கு முழு இலவச மருத்துவ வசதிகள் மட்டுமின்றி காப்பீட்டாளருக்கு உழைக்க இயலாதநிலை அல்லது ஊதிய இழப்பு ஏற்படும்போது பணப் பயன்களையும் அளிக்கிறது.

## 6.1. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தில் சேர்வதற்கான தகுதிகள்

மாத ஊதியம் ரூ.21,000/– வரை பெறும் தொழிலாளர்கள் இத்திட்டத்தின் கீழ் இணைக்கப்படுவதற்கு தகுதியுடையவராகிறார்கள். மேலும் ரூ.25,000/– வரை மாத ஊதியம் பெறும் ஆட்டிசம், செரிபரல் பால்சி, மூளை வளர்ச்சி குறைபாடுகள் மற்றும் பல்வகை குறைபாடுகளுடைய தொழிலாளர்களும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

## 6.2. திட்டத்தின் நிதி ஆதாரம்

தொழிலாளர்களின் பங்களிப்பாக ஒவ்வொரு மாதமும் அவர்களது ஊதியத்தில் நிர்ணயிக்கப்பட்டதாக வசூலிக்கப்படும் 1.75 சதவீதமும், வேலையளிப்போரின் பங்களிப்பான 4.75 சதவீதமும் சேர்ந்து பெறப்படும் பங்கு

தொகையே இத்திட்டத்தின் நிதியாதாரமாகும். மாநில அரசு செலவழிக்கும் மொத்த செலவினத்தில் 7/8 பங்கினை தொழிலாளர் மாநில காப்புறுதி கழகம் திரும்ப வழங்கி வந்தது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தை செயல்படுத்த ‘தமிழ்நாடு தொழிலாளர் மாநில ஈட்டுறுதி சங்கம்‘ அமைக்கப்பட்ட பிறகு, 01.04.2018 முதல் தொழிலாளர் மாநில காப்புறுதி கழகம் முதல் இரண்டு ஆண்டுகளுக்கு இத்திட்டத்திற்கான மொத்த செலவினத்தையும், காலாண்டு அடிப்படையில் திரும்ப வழங்க உள்ளது.

## 6.3. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள்

மாநிலத்தில் கீழ்க்கண்ட 10 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன :

- மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகளின் இயக்குநர் (தொ.அ.ஈதி) கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் சென்னை–அயனாவரம், மதுரை, சேலம், வேலூர், திருச்சி, ஓசூர் மற்றும் சிவகாசி ஆகிய ஏழு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள்
- மருத்துவ கல்வி இயக்குநர் கட்டுபாட்டின் கீழ் செயல்படும் கோயம்புத்தூர் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை
- தொழிலாளர் மாநில காப்புறுதி கழகத்தின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும்

சென்னை (கே.கே.நகர்) மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டு தொழிலாளர் மாநில காப்புறுதி கழக மருத்துவமனைகள்

**216** தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் உள்ளன

- **209** நிலையான தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள்
- ஐந்து நடமாடும் மருந்தகங்கள்
- இரண்டு பயனீட்டாளர்கள் மருந்தகங்கள்

காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் நேர்வுகளில் உயர்சிறப்பு சிகிச்சைகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள் மூலமாக கூடுதல் மருத்துவ வசதிகள் வழங்கப்படுகின்றன.

## 6.4. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் இயங்கும் ஆயுஷ் (AYUSH) பிரிவுகள்

காப்பீட்டாளர்களுக்கு வழங்கப்படும் ஆங்கில முறை சிகிச்சை வசதிகளுடன், கூடுதலாக ஆயுர்வேதா, யோகா, யுனானி, சித்தா, ஹோமியோபதி ஆகிய சிகிச்சை முறைகள் உள்ளடங்கிய ஒருங்கிணைந்த ‘ஆயுஷ்’ (AYUSH) சிகிச்சை வசதியும் வழங்கப்படுகிறது.

- ஆயுர்வேத பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருச்சி, ஓசூர், சிவகாசி ஆகிய எட்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன

- யோகாசன பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருச்சி, ஓசூர், சிவகாசி ஆகிய எட்டு தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன

- யுனானி பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை ஆகிய மூன்று தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன

- சித்தமருத்துவ பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை, சேலம், வேலூர், திருச்சி, ஓசூர், சிவகாசி ஆகிய 8 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன. கூடுதலாக சித்தமருத்துவப் பிரிவுகள் தாம்பரம், திருவொற்றியூர், திருபெரும்புதூர், தூத்துக்குடி, இராஜபாளையம், கோவில்பட்டி, பொள்ளாச்சி, துடியலூர், பள்ளிபாளையம், கும்பகோணம், திருவல்லிக்கேணி, ஆவடி, கொரட்டூர், திண்டுக்கல், திருநகர், உடுமலைப்பேட்டை, காட்டூர்–1, திருப்பூர்–1, ஆம்பூர், இராணிப்பேட்டை ஆகிய 20 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களிலும் இயங்குகின்றன

- ஹோமியோபதி பிரிவுகள் அயனாவரம், கோயம்புத்தூர், மதுரை ஆகிய 3 தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளில் இயங்குகின்றன

## 6.5. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் பயன்கள்

மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் (தொ.அ.ஈ.) இயக்ககத்தினால் தொழிலாளர்களுக்கு மருத்துவ பயன்கள் மட்டும் வழங்கப்படுகின்றன. இதர பயன்கள் அனைத்தும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி கழகத்தால் வழங்கப்பட்டு வருகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் கீழ் தொழிலாளர் மற்றும் வேலையளிப்போரின் பங்களிப்பாக செலுத்தப்படும் நிதியானது, அவசர மருத்துவ தேவை மற்றும் பிற இடர்களின்போது காப்பீட்டாளரின் வருவாய் மற்றும் சேமிப்புகளில் கூடுதல் சுமை ஏற்படாவண்ணம் அவர்களுக்கு உதவுகின்றது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டம் கீழ்காணும் பல்வேறு சமூக பாதுகாப்பு பயன்களை காப்பீட்டாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் வழங்குகிறது :-

### 1. மருத்துவ உதவி

தொழிலாளர் மாநில காப்புறுதி கழகத்தால் வழங்கப்படும் மிகப்பெரிய பயன்களில் ஒன்று மருத்துவ நலனாகும். இம்மருத்துவ உதவியானது காப்பீட்டாளர் காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் வேலையில் சேர்ந்த நாள் முதல் காப்பீட்டாளர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு 'நியாயமான மருத்துவ பராமரிப்பு' (ஆரம்ப கால புறநோயாளி

சிகிச்சை, இரண்டாம் நிலை உள்நோயாளி சிகிச்சையிலிருந்து உயர் சிறப்பு சிகிச்சை வரை) காப்புறுதி வசதியுள்ள நிறுவனத்தில் வேலையில் இருக்கும் வரை வழங்கப்படுகிறது. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் மூலம் ஆரம்பகால சிகிச்சை, சிறப்பு சிகிச்சை, உயர் சிறப்பு சிகிச்சை ஆகியவை பரவலாக அமைந்துள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள தனியார் மருத்துவமனைகள் வாயிலாக அளிக்கப்படுகின்றன.

## 2. உடல் நலமின்மைக்கான உதவி

காப்பீட்டாளர் உடல் நலமின்றி பணிக்கு செல்ல இயலாத நிலை ஏற்படும்போது, அதிகாரமளிக்கப்பட்ட காப்பீட்டு மருத்துவ அலுவலரின் சான்றிதழின் பேரில் உடல் நலமின்மைக்கான உதவி பணமாக வழங்கப்படுகிறது.

## 3. நீட்டித்த உடல் நலமின்மைக்கான உதவி

காப்பீட்டாளர்களுக்கு நீண்டகால சிகிச்சை தேவைப்படும் குறிப்பிட்ட 34 வகையான நோய்களுக்கு, மருத்துவரால் சான்றளிக்கப்படும் சிகிச்சை காலம் வரை நீட்டித்த உடல் நலமின்மைக்கான உதவியும் அதிகபட்சமாக இரண்டு வருடங்களுக்கு மருத்துவர் ஆலோசனையின் பேரில் விடுப்பும் வழங்கப்படுகின்றன.

**4. உயர்த்தி வழங்கப்படும் உடல் நலமின்மைக்கான உதவி**

தகுதி வாய்ந்த வயதில் உள்ள காப்பீட்டாளர்களுக்கு வாசக்டமி / ட்யூபக்டமி போன்ற கருத்தடை அறுவை சிகிச்சைகள் செய்து கொள்ளும் போது, உயர்த்தி வழங்கும் உடல் நலமின்மைக்கான உதவி வழங்கப்படுகிறது.

**5. பேறுகால உதவி**

பெண் காப்பீட்டு நபர்களுக்கு பேறுகாலத்தில் 26 வாரங்களுக்கும் கருச்சிதைவு காலத்தில் 6 வாரங்களுக்கும், 100 சதவிகித சம்பள விகிதத்தில் பேறுகால உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இப்பயன் மகப்பேறு மற்றும் கருச்சிதைவு தொடர்பான நோய்களுக்கு கூடுதலாக 30 நாட்களுக்கான மருத்துவ அறிவுரையின் பேரில் நீட்டிக்கத்தக்கது.

காப்பீட்டு நபர் ஆறு மாத காலத்தில் 78 நாட்களுக்குண்டான சந்தா தொகையினை செலுத்தியிருப்பின் உடல்நலமின்மைக்கான உதவி, உடல் நலமின்மைக்கான நீட்டித்த உதவி மற்றும் உயர்த்தி வழங்கும் உடல் நலமின்மைக்கான உதவி ஆகியவற்றை பணப்பயனாக பெற தகுதியுடையவராகிறார்.

## 6. இயலாமைக்கான உதவி

காப்பீட்டாளர்கள் பணிபுரியும் போது ஏற்படும் விபத்து மற்றும் தொழில்சார் நோய்களினால் ஏற்படும் உடல் நலக்குறைபாடுகளுக்கும் இயலாமைக்கான உதவி வழங்கப்படுகிறது.

### (அ) தற்காலிக இயலாமைக்கான உதவி

தற்காலிக இயலாமை ஏற்படும் போது காப்பீட்டாளருக்கு முதல் பயன் துய்க்கும் காலம் தொடங்குவதற்கு முன்பே தற்காலிக இயலாமை ஏற்பட்டால் ஊதியத்தில் 90 விழுக்காடும், பங்களிப்பு காலத்திற்குப் பின் வரும் பயன் துய்க்கும் காலத்தில் தற்காலிக இயலாமை ஏற்பட்டால் நிலையான நன்மை விகிதத்தில் 90 விழுக்காடும் அக்காப்பீட்டாளர் ஈட்டுறுதி பெறத்தக்க வேலையில் சேர்ந்த நாள் முதலே அதிகாரமளிக்கப்பட்ட காப்பீட்டு மருத்துவ அலுவலரின் சான்றிதழின் பேரில் அவருடைய தற்காலிக இயலாமை தொடரும் வரை பணமாக வழங்கப்படுகிறது.

### (ஆ) நிரந்தர இயலாமைக்கான உதவி

பணியின்போது நிரந்தர இயலாமை ஏற்படின் காப்பீட்டாளருக்கு நிரந்தர இயலாமைக்கான உதவி அவர்தம் வாழ்நாள் முழுவதும் பணமாக வழங்கப்படுகிறது. தொழிலாளர் ஈட்டுறுதி பெறத்தக்க வேலையில் சேர்ந்த நாள் முதலே இந்த உதவி பெற தகுதியுடையவராகிறார்.

## 7. சார்ந்துள்ளோருக்கான உதவி

சார்ந்துள்ளோருக்கான உதவி, காப்பீட்டாளர் வேலை செய்யும் போது ஏற்படும் விபத்தினால் அல்லது அவர் செய்யும் தொழில் மூலம் ஏற்படும் நோயினால் காப்பீட்டாளர் இறந்துவிட்டால், அவரின் சம்பளத்தில் 90 சதவீதம் அவரைச் சார்ந்தவர்களுக்கு நிலையான விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

## 8. இறுதிச் சடங்கிற்குரிய உதவி

காப்பீட்டாளர் இறந்துவிட்டால், அவர் ஈட்டுறுதி பெறத்தக்க வேலையில் சேர்ந்த நாள் முதலே அவரின் இறுதிச் சடங்கிற்கு ரூ.10,000/– அவரது குடும்பத்தினருக்கு பணமாக வழங்கப்படுகிறது.

## 9. வேலையின்மைக்கான உதவி

காப்பீட்டாளர், தொழிற்சாலை மூடப்படுவதாலோ, ஆட்குறைப்பு செய்யப்படுவதாலோ, பணியில் இல்லாத நேரத்தில் நிரந்தரமாக இயலாமை ஏற்படுவதாலோ அல்லது இதர எதிர்பாராத காரணங்களால் சுயவிருப்பின்றி வேலை இழக்க நேரிட்டால், குறைந்தபட்சம் 3 வருடம் அந்த தொழிற்சாலையில் தொடர்ந்து வேலை பார்த்திருப்பின், அவர் கடைசியாக வாங்கிய சம்பளத்தின் 50 சதவிகிதத்தினை 'ராஜீவ் காந்தி சிரமிக் கல்யாண் யோஜனா' திட்டத்தின் கீழ் அதிகபட்சம் பன்னிரண்டு மாதங்களுக்கு பெற தகுதியுடைவராகிறார்.

## 6.6. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி திட்டத்தின் இதர உதவிகள்

1. வயது மூப்பு காரணமாக பணி ஓய்வு பெற்ற பின்னர் குறைந்த பட்ச தொகையாக வருடத்திற்கு ரூ.120/– பெற்றுக்கொண்டு காப்பீட்டாளருக்கும் அவரது வாழ்க்கைத்துணைக்கும் முதியோர் மருத்துவ வசதி அளிக்கப்படுகின்றது.

2. ஊன்றுகோல்கள், சக்கர நாற்காலிகள், பல்செட்கள், மூக்கு கண்ணாடிகள் மற்றும் காது கேளாதோருக்கான கருவி போன்ற உதவி சாதனங்கள் இத்திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்படுகின்றன.

3. நோய் தடுப்பு சேவைகளான தடுப்பூசிகள், எச்ஐவி / எயிட்ஸ் நோய் கண்டுபிடிப்பு மற்றும் சிகிச்சை அளித்தல் போன்ற வசதிகளும் வழங்கப்படுகின்றன.

4. குடும்பநலம் மற்றும் காசநோய் கட்டுப்பாடு ஆகியவற்றுக்கான தேசிய திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

5. காப்பீட்டாளரின் மனைவி அல்லது பெண் காப்பீட்டாளரது பிரசவம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவ வசதிகள் இல்லாத இடத்தில் நடைபெற நேர்ந்தால் மருத்துவ படியாக ரூ.5,000/– அளிக்கப்படுகிறது.

## 6.7. மருத்துவமனை மேம்பாட்டுக் குழு

தொழிலாளர் காப்புறுதி கழகத்திற்கு சொந்தமான கட்டடங்களில் சிறிய மற்றும் பெரிய புனரமைப்பு பணிகளை மேற்கொள்ளவும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் கொள்முதல் செய்யவும், பழுது பார்க்கவும் அனைத்து தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகளிலும் மருத்துவமனை மேம்பாட்டு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மருத்துவமனை மேம்பாட்டு குழு ஒவ்வொரு இரண்டு மாதத்திற்கு ஒருமுறை கூடுகிறது. மேலும் தொழிலாளர் மாநில காப்புறுதி கழகத்தின், மாநில மருத்துவ அலுவலர், மருத்துவமனை மேம்பாட்டு நிதியை நேரடியாக வழங்குகிறார்.

## 6.8. காப்பீட்டு பயனாளிகள் தனியார் மருத்துவமனைகளில் செய்துகொண்ட மருத்துவ செலவினை திரும்ப வழங்குதல்.

### (1) செறிவுத்திட்டம் (ஒப்பந்தம் செய்து கொண்ட மருத்துவமனைகள்)

காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்களுக்கு சிறப்பு மற்றும் உயர்சிறப்பு சிகிச்சை

எடுத்துக்கொள்வதற்கு வசதியாக 148 தனியார் மருத்துவமனைகள் செறிவுத் திட்டத்தின் கீழ் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன. தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனைகள் மற்றும் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களின் மருத்துவரின் பரிந்துரைகளின் பேரில் காப்பீட்டு நபர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு கட்டணமில்லா சிகிச்சை அளிக்கப்படுவதோடு, செறிவு திட்டத்தின் கீழ் உள்ள ஒப்பந்தப்படி மருத்துவமனை செலவின பட்டியல்கள் நேரிடையாக நேர் செய்யப்படுகின்றன.

**(2) சுழற்சி நிதி**

காப்பீட்டாளர்கள் மற்றும் அவர்தம் குடும்ப உறுப்பினர்கள் மருத்துவ பரிந்துரைகளின்படி, தனியார் மருத்துவமனைகளில் எடுத்துக்கொள்ளும் சிறப்பு மற்றும் அதிசிறப்பு மருத்துவ சிகிச்சைக்காக செலவிடப்பட்ட தொகையை தாமதமில்லாமல் திரும்ப பெறுவதற்காக ‘சுழற்சி நிதி’ 2004–ல் உருவாக்கப்பட்டது. 2017–18–ஆம் நிதியாண்டில் சிறப்பு சிகிச்சைகள் மேற்கொண்ட 21,427 காப்பீட்டு

நபர்களுடைய ரூ.22.67 கோடி மதிப்பிலான பட்டியல்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

**6.9. புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் துவக்குதல்**

2017–18–ஆம் ஆண்டில் 31,699 தொழிலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் பயன் பெறும் வகையில் ரூ12.41 கோடி செலவில் ஒட்டன்சத்திரம், நெல்லியாளம், கள்ளக்குறிச்சி, சிதம்பரம், பவானி, குன்னூர், கீழ்குண்டா (ஊட்டி), பாப்பிரெட்டிப்பட்டி, அரவக்குறிச்சி, பூதலூர் ஆகிய பத்து இடங்களில் புதிய தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்கள் துவங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**டாக்டர் நிலோபர் கபில்**
**தொழிலாளர் நலத்துறை அமைச்சர்**

# தொழிலாளர் துறை



குழந்தை தொழிலாளர் முறை அகற்றுதலில் சிறப்பாக பணியாற்றிய மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு விருது வழங்குதல்




தொழில் நல்லுறவு விருது வழங்குதல்



தொழிலாளர் துறையில் ஓட்டுநர்களுக்கு பணிநியமன ஆணை வழங்குதல்




அமைப்புசார தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

# தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்




பட்டாசு தொழிற்சாலைகளுக்கான பாதுகாப்பு குறித்த நடமாடும் விழிப்புணர்வு வாகனம்



கட்டுமான தொழிலாளர்களுக்கான பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை
# (பயிற்சி பிரிவு)





ஓராண்டு சாதனை கண்காட்சி



கருணை அடிப்படையில் பணி நியமன ஆணை வழங்குதல்




NIMI– நிறுவனத்தால் பாடப்புத்தகங்கள் வெளியிடப்படாத தொழிற்பிரிவுகளுக்கு பாடப்புத்தகங்கள் வழங்குதல்



பயிற்சியாளர்களுக்கு மோட்டார் வண்டி தொழிற்பிரிவில் பயிற்சி



பயிற்சியாளர்களுக்கு தையல் பயிற்சி



பயிற்சியாளர்களுக்கு உணவு உற்பத்தி பிரிவில் பயிற்சி




கணினி தொழில்நுட்ப கருவி மூலம் பற்றவைப்பர் பயிற்சி




பயிற்சியாளர்களுக்கு மொழி மற்றும் மென்திறன் பயிற்சி


# தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்




தொழிற்சாலைகளுக்கான புகைப்பட பயிற்சி



கட்டுமான  தொழிலாளர்களுக்கான பயிற்சி




தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் – மாவட்ட வாரியாக பயிற்சி பெற்றோர் விபரம்




**தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் – துறை வாரியாக பயிற்சி பெற்றோர் விபரம்**

# மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்
# (தொ.அ.ஈ.தி)




தானியங்கி உயிர்வேதியியல் பகுப்பாய்வு கருவி




பகுதி தானியங்கி இரத்த மாதிரி பரிசோதனை கருவி